பக்கங்கள் : 14+கலைவிசைட்டா

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 மாசி 09 செவ்வாய்க்கிழமை (21.02.2006)UTHAYAN-A Lively National Tamil Dailyகதிர் :86

# கண்காணிப்புக் குழுவுக்குரிய அதிகாரத்தை கூட்டுவது குறித்தும் இப்போது பேசமுடியாது

## புலிகளின் நிலைப்பாடு அதுவே எனத் தகவல்

- ஜெனீவாவிலிருந்து ந.வித்தியாதரன் -

ஜெனீவா,பெப்ரவரி 21

**இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்குரிய அதிகாரத்தை அதிகரிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்படும் கோரிக்கையைப் பரிசீலிப்பதற்கு விடுதலைப் புலிகள் இயக்கம் தயார். ஆனால், ஜெனீவாவில் நாளையும், மறுதினமும் நடைபெறும் பேச்சுகளின்போது அது குறித்துப்பேசப் புலிகள் தயாரில்லை.**

**- இப்படி விடுதலைப் புலிகளின் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.**

ஜெனீவாப் பேச்சுகளில் கலந்து கொள்வதற்காக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட்டும் ஜெனீவா வந்துள்ளார். தமது உறுப்பினர்கள் மேலும் சிறப்பாகச் செயற்படுவதாயின் தமது குழுவுக்கு அதிகளவில் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை ஜெனீவாப் பேச்சுகளின்போது அவரால் முன்வைக்கப்பட்டால், புலிகளின் நிலைப்பாடு என்னவாக இருக்கும் என்று விடுதலைப் புலிகளின் உயர்வட்டாரங்களிடம் கேட்டபோதே அவை மேற்கண்டவாறு பதிலளித்தன.

''கண்காணிப்புக் குழு சிறப்பாகச் செயற்படுவதற்கு முழு ஒத்துழைப்பையும் வழங்க நாம் தயாராகவுள்ளோம். அதற்கான கோரிக்கைகளை சாதகமாகப் பரிசீலிக்கவும் நாம் தயார். ஆனால், அது குறித்துப் பேசும் சந்தர்ப்பம் இதுவல்ல. கண்காணிப்புக்குழுவுக்கு அதிக அதிகாரங்களை வழங்குவது, அவர்களது செயற்பாட்டு முறையை மாற்றியமைப்பது போன்ற விடயங்களை நாம் முன்னெடுப்பதாயின் அதற்கு யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் மாற்றம் செய்ய வேண்டும்.

''முதலில் இருக்கும் ஒப்பந்தத்தை முழு அளவில் - செம்மையாக - நடைமுறைப் படுத்துவது குறித்து மட்டும் ஜெனீவாப் பேச்

(14ஆம் பக்கம் பார்க்க)

## இ.தொ.காங்கிரஸ், ம.ம.முக்கு அமைச்சு பதவி வழங்கக்கூடாது ஜனாதிபதியிடம் ஜே.வி.பி. வலியுறுத்து

கொழும்பு,பெப்.21

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் ஆளுங்கட்சியுடன் இணைந்து போட்டியிடும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் மலையக மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளுக்கு அமைச்சுப் பொறுப்புகள் எதனையும் வழங்கக் கூடாதென்று ஜே.வி.பி. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்திருப்பதாகத் தெரியவருகிறது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அரசுடன் இணைந்து போட்டியிடும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி ஆகியன அமைச்சுப் பதவிகளைச்

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஜெனீவாப் பேச்சுக்கள் வெற்றிபெறவேண்டி பாடசாலை, ஆலயங்களில் இன்று பிரார்த்தனை

யாழ்ப்பாணம்,பெப்.21

ஜெனீவாப் பேச்சுக்கள் வெற்றிபெற வேண்டி குடாநாட்டுப் பாடசாலைகள், முக்கிய ஆலயங்கள், பொது இடங்களில் இன்று விசேட பிரார்த்தனைகள், சொற்பொழிவுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புகளின் ஒன்றியம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

விசேட பிரார்த்தனை தொடர்பாக செய்தியாளர்களுக்கு எடுத்துக் கூறும் மாநாடு ஒன்று நேற்று யாழ். வணிகர் கழகத்தில் நடைபெற்றது. மனிதநேய அமைப்புகளின் ஒன்றியப் பிரதிநிதிகள், யாழ். வணிகர் கழகப் பிரதிநிதிகள் இதில் கலந்துகொண்டனர்.

செய்தியாளர் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டதாவது:-

தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் அரசுப் பிரதிநிதிகளுக்கும் இடையில் நாளையும் நாளைமறுதினமும் ஜெனீவா

(14ஆம் பக்கம் பார்க்க)

### ஜெனீவா செல்லும் வழியில்

## 'சண்டே லீடர்' ஆசிரியர் லசந்த மீது கட்டுநாயக்கவில் தீவிர விசாரணை

கொழும்பு,பெப்.21

ஜெனீவாவில் நாளை ஆரம்பமாகவுள்ள அமைதிப்பேச்சுகள் தொடர்பான செய்திகளைச் சேகரிப்பதற்காக நேற்றுக் கொழும்பிலிருந்து புறப் பட்ட 'சண்டே லீடர்' பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க, கட்டுநாயக்க விமான நிலையத்தில் விமான நிலைய அதிகாரிகளால் தீவிர விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டார்.

சுவிற்ஸர்லாந்துக்குச் செல்லும் விமானத்தில் ஏறுவதற்காக லசந்த விக்கிரமதுங்க நேற்றுக் காலை விமான நிலையம் சென்றபோது அங்குள்ள பாதுகாப்பு அதிகாரிகள் அவரைத் தடுத்துநிறுத்திவிட்டனர். அவர் தொடர்பில் குற்றப்புலனாய்வுத் துறையினரின் அறிக்கை

(14ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுக் குழுவில் பேரியல் நியமனம் முஸ்லிம் அமைச்சர்கள் பலர் அதிருப்தி!

கொழும்பு, பெப்.21

ஜெனீவா அமைதிப் பேச்சுகளில் முஸ்லிம் மக்களின் பிரதிநிதியாக அமைச்சர் பேரியல் அஷ்ரப் நியமிக்கப்பட்ட விடயத்தில் அரசில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் அமைச்சர்கள் பலர் கடும் அதிருப்தி கொண்டிருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தருணம் வரும்போது இந்த அதிருப்தியை மஹிந்த ராஜபக்ஷவிடம் எடுத்துக் கூறுவதற்கு இவ்வாறான அமைச்சர்கள் சிலர் யோசனை கொண்டிருக்கின்றனர் எனவும் கூறப்படுகிறது.

அமைதிப் பேச்சுகளில் பேரியல் அஷ்ரப்

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஜெனீவாப் பேச்சு பெறுபேறுகள் பொருளாதாரத்தைப் பாதிக்கும்!

### நிபுணர்கள் கருத்து

கொழும்பு,பெப்.21

அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஜெனீவாவில் நடைபெறவுள்ள அமைதிப் பேச்சுகளின் பெறுபேறுகள் இலங்கையின் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க தாக்கமொன்றைச் செலுத்துமென்று பொருளாதாரத்துறை ஆய்வாளர் ஒருவர் நேற்று கருத்து வெளியிட்டுள்ளார்.

'ரொய்ட்டர்' செய்தி நிறுவனத்திற்கு கருத்து வெளியிட்ட லங்கா ஒரிக்ஸ் நிறுவன தலைமை ஆய்வாளர் வஜிர பிரேமவர்த்தனவே

(14ஆம் பக்கம் பார்க்க)

## பஸ் மோதி பெண் பலி; வவுனியாவில் பொலீஸார்-இளைஞர்கள் நேற்று முறுகல்

வவுனியா,பெப்.21

வவுனியா 'குட்செட்' வீதியில் இலங்கை போக்குவரத்துச்சபை பஸ்மோதி இளம் குடும்பப் பெண் ஒருவர் பலியானார். இதனால், ஆத்திரமடைந்த இளைஞர்களுக்கும் பொலீஸாருக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல்நிலை களேபரமாக வெடித்தது. இதில் சிலர் காயமடைந்தனர்.

களேபரத்தில் ஈடுபட்ட இளைஞர்களை அந்த இடத்தில் இருந்து அகற்றப் பொலீஸார் கண்ணீர்ப்புகைக் குண்டுப்பிரயோகத்தை மேற்கொண்டனர். இந்த அசம்பாவிதங்களால் வவுனியா நகரப்பகுதி காலை முதல் நண்பகல்வரை பெரும் பதற்றத்துடன் காணப்பட்டது.

குட்செட் பகுதியில் தனது குழந்தையுடன் வீதியைக் கடக்க முயன்ற விஜயராஜ் பத்மலோஜினி (வயது26) என்பவரே விபத்தில் பலியானார்.

(14ஆம் பக்கம் பார்க்க)



சேதமாக்கப்பட்ட பஸ்ஸையும் காவல் கடமையில் பொலீஸார் ஈடுபட்டிருப்பதையும் படங்களில் காணலாம்.

## அமைச்சரவை வழங்கிய காணியை வேண்டாமென நிராகரித்தார் சந்திரிகா!

### மேன்முறையீட்டு நீதிமன்றில் நேற்று அறிவிப்பு

கொழும்பு, பெப்.21

அமைச்சரவையின் தீர்மானத்தின்படி தனக்கு வழங்கப்பட்ட காணியை ஏற்றுக் கொள்ளாமல் நிராகரித்துள்ளார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அவர் இதனை அறிவித்திருக்கிறார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவிற்கு மாதிவெல பகுதியில், அவரது சேவையைக் கௌரவித்து ஓய்வுக் காலத்திற்கென ஒன்றரை ஏக்கர் காணியை அமைச்சரவை இலவசமாக வழங்கியதை ஆட்சேபித்து 'ராவய' பத்திரிகையின் ஆசிரியர் விக்டர் ஐவன் வழக்குத் தாக்கல் செய்திருந்தார். அந்த மனுமீதான விசாரணை நேற்று மேன்முறையீட்டு நீதி

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



ஜெனீவாப் பேச்சுக்கள் வெற்றிபெறவேண்டி குடாநாட்டில் இன்று சர்வமதப் பிரார்த்தனை நடைபெறவுள்ளது. இந்தப் பிரார்த்தனையின் ஏற்பாடுகள் குறித்து யாழ்.வணிகர் கழகத்தில் நேற்று நடந்த பத்திரிகையாளர் சந்திப்பில் எடுக்கப்பட்ட படங்கள் இவை. வர்த்தக சங்கத் தலைவர் சர்வமதப் பிரார்த்தனையின் முக்கியத்துவம் குறித்து விளக்கமளிப்பதை முதலாவது படத்தில் காணலாம். மனிதநேய அமைப்புகளின் பிரதிநிதிகளான எஸ்.பரமநாதன், சிவசுப்பிரமணியம் ஆகியோரும் இப் படத்தில் உள்ளனர். வணிகர் சங்கப் பிரதிநிதிகளை அடுத்துள்ள படத்தில் காணலாம்.
(படங்கள்:பிரியன்)

### இந்தியாவிலிருந்து படகுகளில்

# கடத்திவரப்படும் பறவைகள்மூலம் புலிகள் பகுதிக்கு பறவைக் காய்ச்சல்?

கொழும்பு,பெப்.21

இந்தியாவிலிருந்து படகுகளில் கடத்திக் கொண்டுவரப்படும் கோழிகள் மூலம் இலங்கையில், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் பறவைக் காய்ச்சல்நோய் தொற்றக்கூடிய அபாயம் இருப்பதாக நேற்றுக் கொழும்பில் அதிகாரிகள் அச்சம் வெளியிட்டனர்.

இந்தியாவில் பறவைக் காய்ச்சல்நோய் பரவ ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படும் நிலையில் அங்கிருந்து பறவை உணவுகளை இறக்குமதி செய்வதை இடைநிறுத்த சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்நிலையில் நேற்று 'ரோய்ட்டர்' செய்தி ஸ்தாபனத்திற்குக் கருத்து வெளியிட்டிருக்கும் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் எஸ்.கே.ஆர்.அமரசேகர, இந்தியாவிலிருந்து பெருமளவான பறவைகள் இலங்கைக்கு இடம் பெயர்வதுடன், படகுகள் மூலமாகவும் (கடத்தல்) வந்து சேர்வதாகக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் கூறியதாவது -

''இந்தியாவிலிருந்து இலங்கைக்கு இடம்பெயரும் அல்லது கடத்தப்படும் பறவைகள் முதலில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கே வந்து சேர்கின்றன.

ஆனால், அந்தப் பகுதிகளில் நாம் மிருக வைத்தியங்களை மேற்கொள்ள முடியாத ஒருநிலை இருக்கிறது. பறவைக்காய்ச்சல் இலங்கையில் தொற்றியதற்கான அடையாளங்கள் எதுவும் இதுவரை இல்லை. ஆனால், இப்போதுள்ள நிலைமையின்படி பறவைக் காய்ச்சல் நோய் இலங்கையிலும் தொற்றுவதற்கான சாத்தியங்களே கூடுதலாக இருக்கின்றன. இது கவலைக்குரியது.''

- இவ்வாறு கூறினார் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளர் அமரசேகர. (எ-க)

(மற்றொரு செய்தி 11ஆம் பக்கத்தில்)

## வந்தாறு மூலையில் இளைஞன் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலி

மட்டக்களப்பு வந்தாறுமூலையில் நேற்றுக் காலை இனந்தெரியாதோர் மேற் கொண்ட துப்பாக்கிச் சூட்டில் சிக்கி 21 வயதான இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

கைலாசபிள்ளை ரவீந்திரன் என்பவரே இவ்வாறு துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தவர் ஆவார். துப்பாக்கிச் சூட்டினால் படுகாயமடைந்த இவர் மட்டக்களப்பு பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் அங்கு மரணமானார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே இவரைச் சுட்டுவிட்டுத்தப்பிச் சென்றனர் எனப் பொலீஸார் தெரிவித்தனர்.

இவர் 9 எம்.எம். கைத்துப்பாக்கியால் சுடப்பட்டார் என்றும் இவரது உடம்பில் மூன்று சூட்டுக்காயங்கள் காணப்பட்டன என்றும் விசாரணையை மேற்கொண்ட ஏறாவூர் பொலீஸார் தெரிவித்தனர்.

(எ-க-13)

## வேகக்கட்டுப்பாட்டை இழந்த லொறி தடம்புரண்டது

வலி.வடக்கு,பெப்.21

லொறி தடம்புரண்டதில் சிக்கிப் படுகாயமடைந்த சாரதி உட்பட இருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று மாலை 5 மணியளவில் யாழ் - காங்கேசன்துறை வீதியில் சுன்னாகம் றொட்டியாலடிச் சந்திக்கு அண்மையில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மருதனார்மடத்திலிருந்து சுன்னாகம் நோக்கிப் பயணித்த லொறி, வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீடு ஒன்றினுள் புகுந்து தலைகீழாகப் புரண்டதாகக் கூறப்பட்டது.

இதனால் சம்பந்தப்பட்ட வீட்டின் மதில் மற்றும் மின்சார விநியோகத்தூண் என்பன பலத்த சேதமடைந்தன.

இதில் படுகாயமடைந்த எஸ்.ஜெகதீஸ்வரன் (வயது 38) என்பவரும் மற்றும் ஒருவருமே யாழ்.ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். (எ-86)

# வடமராட்சி வடக்குக் கடலில் மீனவர்கள் தாக்கப்படுவதைத் தடுக்கக் கோரி மகஜர்

### கடற்றொழிலாளர் சமாசம் பல தரப்புகளிடமும் சமர்ப்பித்தது

யாழ்ப்பாணம்,பெப்.21

வடமராட்சி வடக்கு கடற் பகுதியில், மீனவர்கள் மீது கடற்படையினர் மேற்கொண்டு வரும் தாக்குதல்கள் மற்றும் அத்து மீறிய செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்த விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் யாழ்.அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது விடயமாக மேற்படி சமாசப் பிரதிநிதிகள் யாழ்.அரச அதிபரிடம் மகஜர் ஒன்றையும் கையளித்துள்ளனர்.

இதற்கிடையில் - மேற்படி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசப் பிரதிநிதிகள், நேற்று இந்த மகஜரின் பிரதியை மனித உரிமை ஆணைக் குழுவின் யாழ்.மாவட்ட இணைப்பதிகாரியிடம் கையளித்து உரையாடினர்.



மனித உரிமை ஆணைக்குழு அதிகாரியிடம் மகஜர் சமர்ப்பிக்கப்படுகிறது.

கடற் றொழிலாளர் சமாசப் பிரதிநிதிகளால் கையளிக்கப்பட்ட மகஜரில்:-

2006 ஆம் ஆண்டு தொடக்கம் வல்வெட்டித்துறை, ஆதிகோயில், கெருடாவில், தொண்டைமானாறு போன்ற மீன்பிடிக் கிராமங்களில் கடற்றொழில் செய்வதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இன்றுவரையும் அந்தத் தடை நீக்கப்படவில்லை. இதனால் மேற்படி கிராமங்களைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் பெருஞ் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். குறிப்பாக இப்பகுதி மீனவர்களின் குழந்தைகள் போசாக்கின்மையால் வாடும் சூழ்நிலையும் ஏற்பட்டுள்ளது.

அத்துடன் தொழிலுக்குச் செல்லும் கடற்றொழிலாளர்கள் படையினரின் அடாவடித்தனங்களால் கடலில் பெரும் வேதனைகளை அனுபவித்து வருகின்றனர்.

மீனவர்களின் படகுகள் மீது கண்மூடித்தனமாக தாக்குதல்கள் நடத்தப்படுவதும், கடற்றொழில் உபகரணங்கள் அபகரிக்கப்படும் சம்பவங்களும் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. இந்த நிலைமையால் மீனவர்கள் பெரும் விரக்தியடைந்துள்ளனர்.

எனவே, சம்பந்தப்பட்டவர்களிடம் விசாரணை மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மகஜரின் பிரதி ஒன்று கடற்றொழில் திணைக்களத்தில் கையளிக்கப்பட் டுள்ளது. (எ-12-14)

# சங்கானை வைத்தியசாலையின் ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பு

### வைத்தியப் பொறுப்பதிகாரி தாக்கப்பட்டதன் எதிரொலி

யாழ்ப்பாணம்,பெப்.21

சங்கானை அரசினர் வைத்தியசாலையின் ஊழியர்கள் மேற்கொண்டுவரும் பணிப்புறக்கணிப்பு காரணமாக கடந்த ஞாயிற்றுக் கிழமைமுதல் வைத்தியசாலையின் பணிகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி தாக்கப்பட்ட சம்பவத்தையடுத்தே வைத்தியசாலை ஊழியர்கள் இந்தப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர் என யாழ். பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இது விடயமாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் விடுத்துள்ள பத்திரிகைச் செய்திக் குறிப்பில்,

கடந்த ஞாயிற்றுக்கிழமை மதியம் சங்கானை அரசினர் வைத்தியசாலையில் கடமையில் ஈடுபட்டிருந்த வைத்திய அதிகாரி ஒருவர் பொதுமகன் ஒருவரால் தாக்கப்பட்டுள்ளார். கடந்த சனியன்று வாகன விபத்தொன்றில் இறந்த ஒருவரின் சடலம் சங்கானை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இச்சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாகவே எமது உத்தியோகத்தர் தாக்கப்பட்டதாக அறிகின்றோம்.

வாகன விபத்தொன்றில் ஒருவர் உயிரிழப்பின் மரண விசாரணை அதிகாரியின் விசாரணையின் பின்னர் - அவரது உத்தரவு கிடைக்கப்பெற்றதன் பின்னரே வைத்தியசாலையிலிருந்து சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்கமுடியும்.

அந்தவகையில், மரணவிசாரணை அதிகாரி அழைக்கப்பட்டு, அவரது விசாரணைகள் யாவும் முடிவுற்ற பின்னர் அவரது உத்தரவு கிடைத்ததும் சடலத்தை ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. வைத்தியசாலைத் தரப்பில் எந்தவொரு தாமதமும் ஏற்படவில்லையென்பதைத் தெளிவுபடுத்த விரும்புகின்றோம்.

அவ்வாறு வைத்தியசாலை உத்தியோகத்தர்களில் தவறு ஏதும் இருந்திருப்பினும் அதனை உரியமுறையில் அணுகியிருக்கலாம். அதனைவிடுத்து, எமது வைத்திய உத்தியோகத்தரை மிலேச்சத்தனமாகத் தாக்கியதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இவ்வாறு எமது வைத்தியசாலை உத்தியோகத்தர் ஒருவர் சங்கானை வைத்தியசாலையில் பொதுமக்களால் தாக்கப்படுவது நான்காவது தடவை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

மிகமோசமான ஆளணிப் பற்றாக்குறை மத்தியில் பலத்த வேலைப்பளுவுடன் - அர்ப்பணிப்புடன் சேவையாற்றிவரும் யாழ். மாவட்ட சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு இச் சம்பவம் மிகுந்த அதிர்ச்சியையும் மனவேதனையையும் அளித்துள்ளது.

தொடர்ச்சியாகப் பல தடவைகள் பாதிக்கப்பட்ட சங்கானை அரசினர் வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் இந்தச் சம்பவத்தில் சம்பந்தப் [illegible] வரை பணிப்ப[illegible] ஈடுபட்டுள்ளனர்.

எதிர்காலத்தில் இப்படிப்பட்ட சம்பவங்கள் தொடருமானால், சம்பந்தப்பட்ட வைத்தியசாலைகளில் சில சேவைகளை - எமது உத்தியோகத்தர்களின் பாதுகாப்பைக் கருத்தில்கொண்டு மட்டுப்படுத்த நாம் நிர்ப்பந்திக்கப்படலாம்.

எனவே, எதிர்காலத்தில் எமது சேவைகளை இடையூறின்றி வழங்க பொதுமக்களின் ஒத்துழைப்பினை நாடிநிற்கின்றோம் - என்று அதிலுள்ளது. (எ-24-29)

### டிசெம்பர், ஜனவரி மாதங்களில்

# காணாமல் போனோர் தொடர்பான விசாரணைகள் நேற்று ஆரம்பமாகின!

யாழ்ப்பாணம்,பெப்.21

யாழ்.குடாநாட்டில் கடந்த சில மாதங்களாக நிலவிய அசாதாரண சூழ்நிலையின் போது காணாமற்போனவர்களின் முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகளை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகம் ஆரம்பித்துள்ளது.

இத் தகவலைத் தெரிவித்தார் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக அதிகாரி றோகித பிரியதர்சன.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:-

கடந்த டிசெம்பர், ஜனவரி மாதங்களில் குடாநாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலைகளின்போது 61 பேர் காணாமற் போயுள்ளனர் எனத் தெரிவித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகள் நேற்றுமுதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணைப்பதிகாரி தலைமையில் ஒரு குழுவினரும் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்கள் தலைமையில் இன்னொரு குழுவும் இந்த விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றன.

முதற்கட்டமாக, காணாமற்போனோரின் வீடுகளுக்குச் சென்று காணாமற் போனோர் தொடர்பான விரிவான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

விசாரணைகள் யாவும் அடுத்த வார இறுதிக்குள் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது - என்றார். (எ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# பேச்சு விடயங்களை மூடிமறைக்கும் அரசின் தந்திரம் வெற்றிபெறுமா?

நாளை சுவிற்ஸர்லாந்தின் ஜெனீவா நகரில் ஆரம்பமாகும் அரசு - புலிகள் சமாதானப் பேச்சுகள் தொடர்பாகச் செய்திகளைச் சேகரிக்கச் சென்றிருக்கும் ஊடகவியலாளர்களுக்கு இலங்கை அரசுத் தரப்பிலிருந்து கடிவாளம் போடப்பட்டிருப்பதாகச் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

பேச்சுகளின் ஆரம்பத்திலும், பேச்சுகளின் முடிவின் பின்னரும் இடம்பெறக்கூடிய உத்தியோகபூர்வ செய்தி அறிவிப்பு நிகழ்வுகளைத் தவிர, உள்வீட்டு விவகாரங்களை - பேச்சு மேசையில் இடம்பெறக்கூடிய அம்சங்களை - செய்தியாளர்கள் வெளியிடுவதை இயன்றவரை தடுக்க - 'கட்' பண்ண- அரசுத்தரப்பு தன்னால் இயன்றவற்றையெல்லாம் செய்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

அரசின் பிரதிநிதிகளாகப் பேச்சுமேசையில் ஏழுபேர் வரை அமரப்போகின்றார்கள். அவர்களுக்கு அவ்வப்போது உதவி வழங்கும் வள ஆளணியினர் என்று ஒரு டசின் பேருக்கும் அதிகமானோர் அவர்களுக்குப் பின்னால் அமரப் போகின்றார்கள். இவர்கள் எல்லோருக்கும் அரசுத் தரப்பிலிருந்து கடுமையான உத்தரவுகள் விடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுள் முக்கியமான ஒன்று - ஊடக வியலாளர்களுக்கோ, செய்தி முகவர்களுக்கோ பேச்சு மேசையில் நடைபெறப்போகும் விடயங்கள் குறித்து எதுவும் 'லீக்' செய்யக் கூடாது என்பதுதான்.

ரணில் விக்கிரமசிங்கவின் அரசு விடுதலைப் புலிகளோடு 2002-2003 ஆம் ஆண்டுகளில் ஆறு சுற்றுப் பேச்சுகள் நடத்தியபோது இவ்வாறு செய்தியாளர்களுக்கு மூக்கணாங் கயிறு போடும் நிலைமை இருக்கவில்லை. ஒவ்வொரு நாளும் பேச்சுக்கு முன்னரும், இடைநடுவில் மதியபோசன வேளையிலும் பின்னர் அன்றைய பேச்சின் முடிவிலும் இரு தரப்பு பேச்சுக் குழுப் பிரதிநிதிகளை மட்டுமல்லாமல், அனுசரணையாளர்களான நோர்வேயின் பிரதிநிதிகளையும்கூட செய்தியாளர்கள் சந்திக்கமுடிந்தது. பேச்சு மேசையில் இடம்பெற்ற விடயங்கள் தொடர்பாக முத்தரப்புத் தகவல்களையும் தனித்தனியாகக் கேட்டுப்பெற்று உடனுக்குடன் மக்களுக்கும், சர்வதேச சமூகத்துக்கும் செய்தியாளர்களால் வழங்க முடிந்தது.

அந்தப் பேச்சுகள் மூடிய அறைக்குள் மூன்றாம் பேருக்குத் தெரியாமல் பெரும் மூடு மந்திமாக நடத்தப்பட்டன என்றே கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது அதில் போட்டியிட்ட அப்போதைய பிரதமரான மஹிந்த ராஜபக்ஷவும், அவருக்காகத் தந்திரப் பிரசாரங்களை முன்வைத்த ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய போன்ற பௌத்த சிங்களப் பேரினவாதக் கட்சிகளைச் சேர்ந்தோரும் விமர்சனம் செய்துவந்தனர்.

தாங்கள் ஆட்சிக்கு வந்தால் புலிகளுடனான எந்த அமைதிப் பேச்சும் வெளிப்படையானதாகவும், பகிரங்கமானதாகவும் இருக்கும் என்றும் அவர்கள் பிரலாபித்து வந்தனர்.

ஆனால், இப்போது அதிகாரத்தைக் கைப்பற்றிய பின்னர் - 'சொல்லுவது ஒன்று; செய்வது வேறொன்று' என்ற தமது வழமையான பாணிப்படி- தமது வாக்குறுதிக்கு - மாறாக பேச்சுமேசையில் நடைபெறுவதை மூடிமறைப்பதன் மூலம் மக்களை - குறிப்பாக தென்னிலங்கைச் சிங்கள மக்களை - ஏமாற்ற முனைகின்றார்கள் அவர்கள்.

ஆனால், இந்த மூடி மறைப்புத் திட்டத்தில் அவர்கள் எவ்வளவு தூரம் வெல்லுவார்கள் எவ்வளவு சாதிப்பார்கள் என்பதை -

அல்லது பேச்சுமேடையில் நடைபெறுவனவற்றை ஊடகவியலாளர்கள் எவ்வளவு தூரம் அம்பலப்படுத்தி அரசுத் தரப்பின் திட்டத்தைக் கந்தலாக்குவார்கள் என்பதை -

அடுத்த இரண்டு,மூன்று தினங்களில் நாம் அறிந்து கொள்ளமுடியும்.

இதேவேளை, ஜெனிவாவின் 'சாட்டே டி பொய்ஸி' அரண்மனையில் அரசுப் பிரதிநிதிகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெறும் பேச்சுகளை நேரடியாக இரண்டு நாளும் கொழும்பு அலரிமாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் ஏனையோரும் அறிந்து கொள்வதற்காக அந்நிகழ்வுகள் அஞ்சல் செய்யப்படும் என்று சில தகவல்கள் வெளிவந்திருக்கின்றன.

பேச்சு மேசையிலிருந்து ஒரு தொலைபேசி இணைப்பு - 'ஹொட்லைன்'- அலரி மாளிகைக்கு அமையக்கூடும். ஆனால், பேச்சு மேசையில் நடப்பனவற்றை கொழும்பில் திரையில் பார்ப்பதற்கான - தொலைக்காட்சி போன்ற - வசதி ஏற்படுத்தப்படவேண்டுமானால், அதற்கான முன்னேற்பாட்டின் ஒரு பகுதியாக, அதுகுறித்து பேச்சின் மறுதரப்பான புலிகளுடனும் இணக்கம் காணப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அப்படி இணக்கம் ஏதும் காணப்பட்டதாகத் தகவல் இல்லை. எனவே, தொலைபேசி 'ஹொட்லைன்' வசதி மட்டும் இருக்கக்கூடும் எனக் கருதலாம்.

அத்தகைய ஏற்பாடு ஒரு வகையில் நல்லதே. தமிழர் தரப்பு அதை வரவேற்கலாம்.

பேச்சுமேசையில் முன்வைக்கப்படும் எந்த விடயம் குறித்தும் - கிளப்பப்படும் எந்தச் சர்ச்சை குறித்தும் - கொழும்பில் அரசின் தலைமையோடு ஆலோசித்துச் சொல்கின்றோம். ஆராய்ந்துவிட்டு பதில் தருகிறோம் என்று அரசுத் தரப்பு பிரதிநிதிகள் காலத்தை இழுத்தடித்துத் தப்பமுடியாது. உடனுக்குடன் விடயத்தைக் கேட்டறிந்து பதில் தர வேண்டிய நெருக்கடி - இக்கட்டு - அவர்களுக்கு இருக்கும்.

அந்த வகையில் ஜெனீவாப் பேச்சு மேசைக்கும், அலரி மாளிகைக்கும் இடையில் இருக்கப்போகும் 'ஹொட்லைன்' இணைப்பு தமிழர் தரப்புக்கு உதவும் ஒன்றாகவே அமையப் போகின்றது.

# யாழ். குடாநாட்டில் சனத்தொகை 5 லட்சத்து 98 ஆயிரத்து 872 பேர்!

யாழ். மாவட்டத்தில் ஒரு லட்சத்து 75 ஆயிரத்து 270 குடும்பங்களைச் சேர்ந்த 5 லட்சத்து 98 ஆயிரத்து 872 பேர் வசிப்பதாக யாழ். செயலக சனத்தொகைப் பட்டியல் தெரிவிக்கின்றது.

2005.12.31ஆம் திகதிய சனத்தொகைப் பட்டியலிலேயே மேற்கண்ட தகவல் உள்ளது. இந்தப் பட்டியலின் படி பிரதேச ரீதியான சனத்தொகையின் விவரம் வருமாறு:-

யாழ்ப்பாணம் 14 ஆயிரத்து 434 குடும்பங்களைச் சேர்ந்த 51 ஆயிரத்து 536 பேர், நல்லூர் 8 ஆயிரத்து 740 குடும்பங்களைச் சேர்ந்த 61 ஆயிரத்து 845 பேர், சாவகச்சேரி 20 ஆயிரத்து 418 குடும்பங்களைச் சேர்ந்த 73 ஆயிரத்து 48 பேர், நெடுந்தீவு ஆயிரத்து 710 குடும் பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 658 பேர், வேலணை 4ஆயிரத்து 782 குடும்பங்களைச் சேர்ந்த 17 ஆயிரத்து 588 பேர்.

ஊர்காவற்றுறை 4 ஆயிரத்து 338 குடும்பங்களைச் சேர்ந்த 14 ஆயிரத்து 635 பேர், மருதங்கேணி 4 ஆயிரத்து 477 குடும்பங்களைச் சேர்ந்த 16 ஆயிரத்து 469 பேரும் பருத்தித்துறை 14 ஆயிரத்து 802 குடும்பங்களைச் சேர்ந்த 50 ஆயிரத்து 848 பேர், கரவெட்டி 16 ஆயிரத்து 9குடும்பங்களைச் சேர்ந்த 46 ஆயிரத்து 106பேர், சங்கானை 13 ஆயிரத்து 496 குடும்பங்களைச் சேர்ந்த 46 ஆயிரத்து 687 பேர்.

தெல்லிப்பழை 6 ஆயிரத்து 901 குடும்பங்களைச் சேர்ந்த 24 ஆயிரத்து 60பேரும் சண்டிலிப்பாய் 15 ஆயிரத்து 41 குடும்பங்களைச் சேர்ந்த 54 ஆயிரத்து 192 பேர், உடுவில் 15ஆயிரத்து 727 குடும்பங்களைச் சேர்ந்த 52 ஆயிரத்து 359 பேர், கோப்பாய் 20 ஆயிரத்து 931 குடும்பங்களைச் சேர்ந்த 72 ஆயிரத்து 898 பேர், காரைநகர்3ஆயிரத்து 464 குடும்பங்ளைச் சேர்ந்த 10 ஆயிரத்து 943 பேர் என்று அந்தப் பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-202-204)

# மருதங்கேணியில் மணல் விநியோகம்; இந்த வாரம் முதல் மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,பெப்.21

மருதங்கேணி உதவி அரச அதிபர் அலுவலகத்தின் உப அலுவலகத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டுவந்த மணல் விநியோகத் திட்டம் இந்த வாரம் முதல் மீண்டும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இந்தத் தகவலை மணல் விநியோக அனுமதிப்பத்திரங்கள் வழங்குவதற்கான அனுமதிக்கப்பட்ட அலுவலர் இ.சிவபுண்ணியம் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் தெரிவிக்கையில்:-

கடந்த சில மாதங்களாகப் பல்வேறு காரணங்களை முன்னிட்டு மணல் விநியோகம் தடைப்பட்டிருந்தது. இந்த வாரம் முதல் மீண்டும் மணல் விநியோகத்தை ஆரம்பித்துள்ளோம்.

வீட்டுத் திட்டங்களுக்கும் அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களுக்குமே தற்போது மணல் விநியோகிக்கப்படும்.

மணல் விநியோகத்திற்கான அனுமதிப்பத்திரங்களை தும்பளையில் அமைந்துள்ள மருதங்கேணி உதவி அரச அதிபர் அலுவலகத்தின் உப அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும். விடுவிக்கப்படாத பிரதேசங்களுக்கான மணல் விநியோக அனுமதிப்பத்திரங்களை மருதங்கேணி உதவி அரச அதிபர் அலுவலகத்திலும் பெற்றுக்கொள்ள முடியும் என்றார்.

இதேவேளை -

திங்கள், செவ்வாய், புதன்கிழமைகளில் வழமைபோல அரச, அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு மணல் விநியோகிக்கப்படும்.

உலகவங்கி, எம்.ஆர்.ஆர்.ஆர்., ஆகிய வீட்டுத் திட்டங்களுக்கு வியாழன், வெள்ளி, சனி ஆகிய தினங்களில் மணல் விநியோகிக்கப்படும்.

ஏற்கனவே திகதிகள் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களுக்கு முன்னுரிமை வழங்கவுள்ளதால் அடுத்த மாதம் முதலாம் திகதிவரை புதிய அனுமதிப் பத்திரங்களுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

தனியாருக்குரிய மணல் அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்குப் பின்னரான வியாழன், வெள்ளிக்கிழமைகளில் வழங்குதவற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அதுவரையும் தனியாருக்குரிய மணல் விநியோகம் நடைபெறமாட்டாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-202-203)

# குடாநாட்டில் ஒய்வூதியக் கொடுப்பனவை துரிதப்படுத்த அதிகாரிகளுக்குப் பயிற்சி

யாழ்ப்பாணம்,பெப்.21

யாழ்.மாவட்டத்தின் ஓய்வூதியம் வழங்கும் செயற்பாடுகளைத் துரிதப்படுத்தும் நோக்குடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு 2 நாள் பயிற்சி நெறி வழங்கப்பட்டு வருகின்றது.

நேற்று யாழ்.செயலகத்தில் ஆரம்பமான இப் பயிற்சிக் கருத்தரங்கில் ஓய்வூதியக் கொடுப்பனவுகளுடன் சம்பந்தப்பட்ட கணக்காளர்கள், அலுவலர்கள் ஆகியோர் பங்குபற்றுகின்றனர்.

ஓய்வூதியத்தின் நிலுவையிலுள்ள கொடுப்பனவுகளைத் துரிதமாக மேற்கொள்வதற்கான பூரண அறிவை வழங்கவும், ஓய்வூதியக் கொடுப்பனவுகள் தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்கி சீராகவும் துரிதமாகவும் சம்பந்தப்பட்டவர்கள் செயற்படுவதை ஊக்கப்படுத்தவுமே இப் பயிற்சிக் கருத்தரங்கு நடத்தப்படுவதாக யாழ். அரச அதிபர் கே.கணேஸ் தெரிவித்தார். (த-202-204)

## நாளை

மாசி 10
புதன்கிழமை
22.02.2006
திதி: நவமி
முன் இரவு: 06.56 வரை
நட்சத்திரம் : கேட்டை
முன் இரவு : 10.44
சுபநேரம் : 05.01 - 06.31
ராகுகாலம் :12.31 - 02.01
(யாவும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

முகப் புகழ்ச்சி செய்பவரைப் பார்க்கிலும் கடித்துக் கொள்பவர்களே முடிவில் பெரிதும் பாராட்டப்படுவார்கள்.

நீதிமொழி.

# காரைநகரில் இன்று தென்னங்கன்று விநியோகம்

யாழ்ப்பாணம், பெப்.21

தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை வீட்டுத்தோட்ட மானியத்திட்டத்தின் கீழ் காரைநகர் பிரதேச செயலர் பிரிவிலுள்ள பயனாளிகளுக்கு இன்று தென்னங்கன்று விநியோகிக்கப்படவுள்ளன.

தென்னங்கன்றுகள் விநியோகிக்கும் வைபவமும், தென்னை நடுதல், உரப் பிரயோகம், பீடைக்கட்டுப்பாடு போன்ற விடயங்களடங்கிய கருத்தரங்கும் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு காரைநகர் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

யாழ்.மாவட்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெ.சத்தியேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதேச செயலர் க.சிறிமோகனனும் கௌரவ விருந்தினர்களாகத் தென்னைப் பயிர்ச் செய்கைச் சபையின் உதவிப் பிராந்திய முகாமையாளர் க.தேவேந்திரன், காரைநகர் பிரதேச பெரும்பாக உத்தியோகத்தர் சு.சோதிநாதன் ஆகியோரும் கலந்துகொள்வர். (த-202)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

**Greatdone x Dobermann pincher** 3 மாதக் குட்டிகள் 2, டோமன் 3 மாதக்குட்டி 1, டோமன் 2 வயது நாய் 1 மற்றும் அல்சேசன் **German chapperd** 1வயது பெண் நாய் என்பன விற்பனைக்குண்டு. அனைத்து தடுப்பூசிகளும் போடப்பட்டது. பூம்பொழில், நுணாவில் - பருத்தித்துறை வீதி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. **T.P. 0776170686, 0776568166** (47078)

தொகையான வெற்று பரல் (**தகரம் - 210 L**) முழுதாகவும் வெட்டி நிமிர்த்தியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: **021 222 2880.** (47081)

## வீடு வாடகைக்கு

பழைய பூங்கா வீதியில் சொலமன் லேனில் அமைந்துள்ள மாடி வீடு 5 அறை, கோல், வாகனத்தரிப்பிடமும் கொண்ட வீடு வாடகைக்கு. மற்றும் பிறவுண் வீதியிலும் 6 அறை கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு: **021- 222 2317, 021 222 5539, 0777-488185** (47080)

## பந்தல் விற்பனைக்கு

50 அடி சொக்கட்டான் பந்தல் அதனுடன் கூடிய மணவறை, கதிரைகள், சமையல் பாத்திரங்கள், சில்வர் பொருள்கள் அனைத்தும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: சீ.மகாலிங்கம் (ராசன்), தில்லையம்பதி கோண்டாவில் வடக்கு, கோண்டாவில். **T.P. 0776002626.** (46944)

## கார் விற்பனைக்கு

**16xxxx** தொடரிலக்கமுடைய **Full option Nissan Sunny (Super saloon) Car** விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 521/7, பருத்தித்துறை வீதி, நல்லூர். **T.P. 0773126835** (47067)

## தென்னங்கன்று விநியோகம்

செம்பியன்பற்று,பெப்.21

வடமராட்சிப் பகுதியில் 8 பரப்பு காணியுள்ளவர்களுக்கு தென்னங்கன்றுகளும் உரவகைகளும் இலவசமாக வழங்குவதற்கு தென்னை உற்பத்தி திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் மேலதிக விவரங்களுக்கு புலோலி கமநலசேவை நிலையத்தில் தொடர்பு கொள்ளுமாறு தென்னை உற்பத்தி அதிகாரி எஸ். சத்தியேந்திரன் கேட்டுள்ளார். (3-36)

## இயந்திரம் மூலம் நெல் அறுவடை

வலி.மேற்கு,பெப்.21

வலி.மேற்குப் பிரதேசத்தில் இயந்திரத்தின் மூலம் நெல் அறுவடையினை விவசாயிகள் ஆரம்பித்துள்ளனர்.

அராலி, வட்டுக்கோட்டை, மாவடி, சுழிபுரம், சங்கரத்தை ஆகிய இடங்களில் உள்ள வயல்களில் தற்போது விவசாயிகள் மும்முரமாக அறுவடையினை மேற்கொண்டுள்ளனர்.

அதிகமான வயல்களில் இயந்திரத்தின் மூலம் விவசாயிகள் நெல்அறுவடையினை மேற்கொண்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. (3-175)

## மணமகள் தேவை

*யாழ்.கௌரவ, கிறிஸ்தவ மத, விஞ்ஞானப் பட்டதாரி, நிரந்தர அரச ஆசிரியராகக் கடமைபுரியும் 29 வயது மணமகனுக்கு, அரச உத்தியோகத்தில் உள்ள (ஆசிரியராக இருப்பது விரும்பத்தக்கது) மணமகள் தேவை.*

*கிறிஸ்தவராக விரும்பும் இந்துமத மணமகளும் விரும்பப்படுவர்.*

*தொடர்பு: தொ.பே.இல.:*
**0777 296901**
*(47082) (21.16.19)*


## தூரிகை

**நுண்கலைகள் பயிலகம்**



**புதிய பயிற்சி வகுப்புகள்**
**கேக் ஐசிங் + அலங்கரிப்பு**
**Hair Style மணப்பெண் அலங்கரிப்பு**
**உடையமைத்தல்**
**துணி வர்ணமிடல் உட்பட 10இற்கு மேற்பட்ட பயிற்சிகள்**
**25.02.2006 இல் ஆரம்பம்.**

செங்குந்தா வீதி, கல்வியங்காடு. ம.ம.வி.வீதி, நெல்லியடி.
(47083) (39.16.19)


# பெண்கள் மீதான கெடுபிடிகளுக்கு பண்பாட்டு மையம் கடும் கண்டனம்

தமிழ்ப் பெண்கள் மீது இராணுவத்தினரும் ஒட்டுக்குழுக்களும் மேற்கொள்கின்ற கெடுபிடிகளுக்கு கிளிநொச்சி பெண்கள் பண்பாட்டு மையம் கடுமையான கண்டனம் தெரிவித்துள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரி பண்பாட்டு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

பொலநறுவை மாவட்டம் வெலிகந்தை இராணுவ முகாம் அருகில் வைத்து சிறிலங்கா ஆயுதப் படையினருடன் சேர்ந்து இயங்கும் ஒட்டுக் குழுவினால் ஆயுத முனையில் தமிழர் புனர்வாழ்வுக்கழக மட்டக்களப்பு மாவட்ட கணக்காளர் பிறேமினி உட்பட ஐவரும் அதேவேளை, வாழைச்சேனையில் இருந்து புறப்பட்ட மற்றொரு வாகனத்தில் வந்த த.பு கழக மண்முனை வடக்கு பிரதேசத்தைச் சேர்ந்த ஐவரும் அவர்கள் சென்ற வாகனத்துடன் காணாமல் போயுள்ளனர்.

இவர்களுள் இருவர் விடுவிக்கப்பட்டுள்ளார்கள். ஏனைய இரு பெண்கள் உட்பட எட்டுப் பணியாளர்களையும் விடுவிக்குமாறு சர்வதேச சமூகத்தை கோருகிறோம்.

சிங்களப் பேரினவாத ஆக்கிரமிப்பு இராணுவத்தினராலும் இவர்களுடன் சேர்ந்து இயங்கும் ஒட்டுக்குழுக்களாலும் தமிழ்த் பெண்கள் பாலியல் இரையாவதும், படுகொலை செய்யப்படுவதும் கடத்தப்படுவதும் அனைவருக்கும் கடும் விசனத்தையும், ஆத்திரத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறே மட்டக்களப்பு த.பு.கழக பணியாளர்களில் இரு பெண்கள் கடந்த 30, 31ஆம் திகதிகளில் பொலநறுவை மாவட்டம் வெலிகந்தை பகுதியில் சிறிலங்கா இராணுவ காவலரண் அருகில் வைத்துக் கடத்தப்பட்டுள்ளார்கள். மனிதாபிமானப் பணியில் ஈடுபடும் இவர்களை விடுவிப்பதற்கான அழுத்தத்தினை சர்வதேசமும் பிரயோகிக்க வேண்டுமென வேண்டுகின்றோம்.

2005.12.07 மட்டக்களப்பு வந்தாறு மூலை பலாச்சோலையில் ஒட்டுக் குழுவினரால் துரைராசா யோகேஸ்வரி, துரைராசா வதனி ஆகிய இரு சகோதரிகளும் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டு கொடூரமான முறையில் கொல்லப்பட்டார்கள்.

2006.01.07 யாழ்ப்பாணம் - மானிப்பாயில் அர்த்தநாரீஸ்வரி, ரேணுகா, சண்முகா ஆகிய ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாயும் இரு புதல்விகள் சிறிலங்காவின் இராணுவ ஆயுததாரிகளால் கதறக் கதறச் சுட்டுக்கொல்லப்பட்டார்கள். 2005.01.30 ஆம் 31ஆம் திகதிகளில் இரு பெண்கள் உட்பட எண்பர் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள். இப்படியாக வெளியில் வந்த சம்பவங்கள் குறைவானவைதான். வெளியில் வராமல் போன சம்பவங்கள் மிக அதிகம். இன்று உலகெங்கும் மனித உரிமைகள் பற்றியும், பெண்களின் உரிமை பற்றியும் அதிகம் பேசப்படுகின்றது. ஆனால் தமிழ்ப் பெண்களுக்கும் தமிழினத்திற்கும் அவர்களின் அடிப்படை மனிதஉரிமைகள் மீறப்படுவதை எவருமே இன்று வரை அதிகம் கண்டு கொள்வதாகத் தெரியவில்லை.

இதனை எவ்வாறு நாம் பொறுத்துக் கொள்ள முடியும். தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெற்ற சம்பவம் மிகவும் மோசமானது. சிறிலங்காவின் புதிய ஜனாதிபதி பதவி ஏற்றுள்ள நிலையில் - சமாதான முயற்சிகளைத் தொடரவேண்டும் என சர்வதேச சமூகத்தினர் முனைப்பாக செயற்படுகின்ற இந் நிலையில் - சிங்கள பேரினவாத மனோபாவம் கொண்ட சிங்கள ஆட்சியாளர்களின் ஆயுதப் படைகள், ஒட்டுக் குழுக்கள் ஆகியவற்றின் செயற்பாடும் சமாதானத்திற்கான சூழலையும் இயல்பு வாழ்வையும் சிதைத்துள்ளது. என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)


**COMPUTER EXPRESS**
**Institute of Information Technology**
இல. 15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
021-222 8250,0777 222422

**கம்யூட்டர் எக்ஸ்பிரசின் 2ம் ஆண்டு நிறைவையொட்டி முதன்முறையாக தமிழ்மொழி விளக்கத்துடன்**

**Mobile Phone Repairing Course**

அனுமதிகள் வரையறுக்கப்பட்டுள்ளதால் 22ம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளவும்.

வகுப்புக்கள் ஆரம்பம். **24/02/2006**

ஏனைய அனைத்து கணனிக் கற்கைநெறிகளிற்கான புதிய பிரிவுகள் 24,25,26 ம் திகதிகளில் ஆரம்பமாகின்றன.

கொழும்பிலிருந்து வருகைதரும் விரிவுரையாளரால் வகுப்புக்கள் நடாத்தப்படும்.


## தேர் ஏல விற்பனை



*நவாலி அந்திரான் முருகமூர்த்தி கோயிலில் இதுவரை பாவனையில் இருந்த தேர் 11-03-2006 சனிக்கிழமை பி.ப.3 மணிக்கு வலி.தென்மேற்குப் பிரதேச செயலர் அவர்களின் சமூகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். மேலதிக விவரங்களுக்கு ஆலய நிர்வாகத்துடன் தொடர்கொள்ளவும்.*

(47079)
(21.26.16.19)

*தலைவர்,*
**நவாலி அந்திரான் முருகமூர்த்தி கோயில்,**
நவாலி தெற்கு, மானிப்பாய்.

## மரண அறிவித்தல்

### அந்தோனியாப்பிள்ளை (இரெட்டினம்)

ஊர்காவற்றுறை, கரம்பனைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனியாப்பிள்ளை (இரெட்டினம்) 19.02.2006 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குறக்காட்டு சவரிமுத்து செபமாலை ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சுவாம்பிள்ளை இன்னாசிமுத்துவின் அன்பு மனைவியும் இந்திராணி (கனடா), விமலராணி (கனடா), ஜெயராணி (கனடா), ரவி (கனடா), ஸ்ரனிஸ்லாஸ் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற பொனிபஸ், இராசமணி மற்றும் சிசிலியா, இராசையா, சூசைப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் நிர்மலன் இராஜதுரை (மக்கள் வங்கி, கன்னாதிட்டி)யின் பெறாமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
**நிர்மலன் இராஜதுரை**
*(பெறாமகன்).*
*27/17, புங்கன்குளம் வீதி, யாழ்ப்பாணம்.*
(47086)
(39.21.16.19)


**COMPUTER EXPRESS**
Institute of Information Technology
No 15, Sirambiyadi Lane,Jaffna.
Tel:- 021-2228250, 0777-222422

**மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் ~ 2006**

**80% OFF**

| | | |
|---|---|---|
| Diploma in Microsoft Office 750/= Duration :- 3 Months | Diploma in Desktop Publishing ~~6000~~/= 1200/= Duration :- 4 Months | Diploma in Web page Designing ~~7000~~/= 1400/= Duration :- 4 Months |
| Diploma in Graphic Designing ~~7000~~/= 1400/= Duration :- 4 Months | Diploma in Hardware Engineering ~~6000~~/= 1200/= Duration :- 3 Months | Accounting Package ~~7000~~/= 1400/= Duration :- 3 Months |
| Diploma in Computer Science ~~7000~~/= 1400/= Duration :- 4 Months | Honors Diploma in Computer Science ~~9000~~/= 1800/= Duration :- 5 Months | Diploma in Auto CAD ~~6000~~/= 1200/= Duration :- 3 Months |

**Advances Courses**

**50% OFF**

| | | |
|---|---|---|
| Diploma in Net Working | ~~4000~~ | 2000 |
| Diploma in Video Editing | ~~6000~~ | 3000 |
| Diploma in Multimedia | ~~5000~~ | 2500 |

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும். சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ், வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி.

வகுப்புகள் ஆரம்பம்
**Batch I :- 24/02/2006**
**Batch II :- 25/02/2006**
**Batch III:- 26/02/2006**

February 28th திகதிக்கு முன்னர் பதிவு செய்துகொள்ளவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# லட்சக்கணக்கான கோழிகள் மகாராஷ்டிராவில் அழிப்பு!

புதுடில்லி,பெப்.21

மகாராஷ்டிராவில் பறவைக் காய்ச்சல் நோய் தாக்கிய 8 லட்சத்தக்கும் மேற்பட்ட கோழிகளை அழிக்கும் பணி தீவிரமாக நடந்து வருகிறது.

நோய் தாக்காத மற்றைய கோழிகளுக்கு தடுப்பு மருந்து கொடுப்பதும் முழு வீச்சில் நடைபெறுகிறது. கோழிப் பண்ணைகளில் பணியாற்றுவோருக்கு பாதுகாப்பு சாதனங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

கண்காணிப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துமாறு மாநில அரசுகளை மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

இதனிடையே, நந்துர்பார் மாவட்டத்தில் ஒரு பெண்ணும் அவரது மகனும் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கு பறவைக் காய்ச்சல் நோய் ஏற்பட்டுள்ளதா என்பது பரிசோதிக்கப்பட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதே மாவட்டத்தைச் சேர்ந்த கோழிப் பண்ணை விவசாயி (வயது 27) ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை சூரத் நகரில் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு இறந்தார்.

நிலைவரத்தைத் தொடர்ந்து கண்காணிப்பதற்காக மத்திய அமைச்சரவைச் செயலர் மற்றும் மத்திய அரசு செயலர்களை உள்ளடக்கிய மத்திய கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் சிவராஜ் பட்டீல் தெரிவித்தார்.

இதனிடையே உத்தரப் பிரதேச மாநிலம் எடாவா மாவட்டத்தில் உள்ள ஒரு கோழிப் பண்ணையில் திடீரென ஆயிரம் கோழிகள் இறந்தன.

பறவைக் காய்ச்சல் பீதி காரணமாக டில்லியில் ஞாயிற்றுக்கிழமை கோழிக் கறி விலையில் பெரும் சரிவு ஏற்பட்டது. (ஐ)

## பறவைக்காய்ச்சல் வைரஸ் பரவுவது எப்படி?

சென்னை,பெப்.21

பறவைக் காய்ச்சல் நோய்க்குக் காரணமான வைரஸ் கிருமிகள் வெளிநாடுகளில் இருந்து இடம்பெயரும் பறவைகள் மூலமே பரவுகின்றன.

இந்த வைரஸ் கிருமிக்கு 'எச்5என்1' எனப் பெயரிடப்பட்டுள்ளது.

பறவைக்காய்ச்சல் வைரஸ் தாக்கிய வெளிநாட்டுப் பறவைகளிடம் இருந்து வாத்துகள், கோழிகள் மூலமும் இந்நோய் பரவும்.

வெளிநாட்டுப் பறவைகள் இடம்பெயரும் வழித்தடத்தில் கோழிப் பண்ணைகள் இருந்தால் இந்நோய் எளிதில் பரவ வாய்புள்ளது. ஆனால், தமிழகத்தில் வேடத்தாங்கல் போன்ற பறவைகள் சரணாலயம் உள்ள பகுதியில் கோழிப் பண்ணைகள் எதுவும் இல்லை.

பறவைக்காய்ச்சலால் ஏதேனும் ஒரு கோழி பாதிக்கப்பட்டால் கூட இந்நோய் சிறிதுநேரத்தில் மற்றைய கோழிகளுக்கும் பரவும்.

இதையடுத்து சிலமணி நேரங்களில் ஆயிரக்கணக்கான கோழிகள் ஒரேநேரத்தில் இறக்கும்.

பறவைக்காய்ச்சல் வைரஸ் கிருமிகளை எதிர்க்கும் சக்தி கோழிகளுக்கு இல்லாததால் அவை எளிதில் பாதிக்கப்பட்டு அவற்றின் மூலம் மனிதர்களுக்கு நோய் பரவுகிறது. இக்கிருமிகள் தாக்கினால் மனிதர்களுக்கு காய்ச்சல், இருமல்,உடல் வலி, தொண்டை வரட்சி, கண் பாதிப்பு, மூச்சுத் திணறல் ஆகியவை ஏற்படும். (ஐ)

## பயப்படவேண்டாம் என்கிறது மத்திய அரசு!


புதுடில்லி,பெப்.21

பறவைக்காய்ச்சல் நோய் தொடர்பாக மக்கள் பீதியடையத் தேவையில்லை என்று இந்திய மத்திய அரசு அறிவித்திருக்கிறது.

இந்தியாவில் மனிதர்களுக்கு பறவைக் காயச்சல் தொற்று இருப்பதற்கான அறிகுறி இல்லை. இதுபற்றி மக்கள் பயப்படத் தேவையில்லை. நிலைமை கட்டுக்குள் இருக்கிறது. - என்று மத்திய சுகாதாரத்துறை தெரிவித்திருக்கிறது. (ஐ)

## மகாராஷ்டிரா பறவைக் காய்ச்சல் எதிரொலி: தமிழகத்துக்குள் கோழிகள் கொண்டுவரத் தடை!

சென்னை,பெப்.21



மகாராஷ்டிரா உட்பட வெளி மாநிலங்களில் இருந்து தமிழகத்துக்குள் கோழிகள் - முட்டைகளை வாகனங்களில் கொண்டுவரத் தமிழக அரசு தடை விதித்துள்ளது.

மகாராஷ்டிராவில் உள்ள நந்துர்பார், துலே ஆகிய இடங்களில் கோழிப் பண்ணைகளில் பறவைக் காய்ச்சலுக்கு 50 ஆயிரம் கோழிகள் உயிரிழந்தன. பறவைக் காய்ச்சலுக்கு ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதையடுத்து கோழிகள் மூலம் பறவைக் காய்ச்சல் நோய் பரவக்கூடும் என்ற அச்சம் இந்தியா முழுவதும் ஏற்பட்டுள்ளது. தடுப்பு நடவடிக்கைகளை எடுக்கும்படி அனைத்து மாநில அரசுகளையும் மத்திய அரசு உஷார் படுத்தியுள்ளது.

இதனால் ஞாயிற்றுக்கிழமை தமிழகம் முழுவதும் கோழி இறைச்சி விற்பனையில் கடும் சரிவு ஏற்பட்டது. சென்னையின் பல்வேறு இடங்களில் ஒரு கிலோ கோழி இறைச்சியின் விலை ரூபா 42 முதல் 30 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டது.

பறவைக் காய்ச்சல் நோய் பரவாமல் தடுக்கும் நடவடிக்கைகளை தமிழக அரசு எடுத்து வருகிறது. தமிழகத்தில் முதல் கட்டமாக மகாராஷ்டிரா உட்பட வெளி மாநிலங்களில் இருந்து வாகனங்களில் கோழிகள், முட்டைகள், வாத்துகளை எடுத்து வர அரசு தடை விதித்துள்ளது.

இதற்காக தமிழக எல்லைப் பகுதியான ஓசூர், தாளவாடி, கவரப்பேட்டை, செருக்காடு ஆகிய இடங்களில் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. அனைத்து வாகனங்களும் கண்காணிக்கப்படுகின்றன.

தமிழகத்துக்குள் ஓர் இடத்தில் இருந்து மற்றோர் இடத்துக்கு கோழிகளை எடுத்துவரும் வாகனங்கள் மற்றும் அவற்றின் டயர்களில் தெளிப்பான்கள் மூலம் தடுப்பு மருந்துகளைத் தெளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ)

## அஹமதாபாத் ரயில் நிலையத்தில் குண்டுவெடிப்பு!

அஹமதாபாத்,பெப்.21

குஜராத் மாநிலத்தில் அஹமதாபாத் ரயில் நிலையத்தில் நேற்றுமுன்தினம் அதிகாலை இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவம் ஒன்றில் 22 பேர் படுகாயமடைந்தனர்.

அதிகாலை 1.40 மணியளவில் ரயில் நிலையத்தில் பயணிகள் நிறைந்திருந்த சமயம் இரண்டாவது 'பிளாட்பாரத்தில்' திடீரெனக் காதைப் பிளக்கும் சத்தத்துடன் குண்டு வெடித்தது. இதனால் ரயில்வே ஊழியர்கள் நால்வர் உட்பட 25 பேர் காயமடைந்தனர். அங்கு பெரும் பீதி ஏற்பட்டது. (ஐ)




## கைவிலங்குடன் சங்கராச்சாரியார் விளம்பரத்துக்கு பா.ஜ.க. கண்டனம்!

சென்னை,பெப்.21

சங்கராச்சாரியார் கைகளில் விலங்கினை இட்டு அ.தி.மு.க சார்பில் விளம்பர பதாகைகள் வைக்கப்பட்டதற்கு பா.ஜ.கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அக்கட்சியின் அகில இந்தியத் துணைத் தலைவர் இல.கணேசன் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

"காஞ்சிபுரம் தாலுகா அலுவலகம் அருகே அ.தி.மு.க சார்பில் வைக்கப்பட்ட விளம்பரத்தில் காஞ்சி சங்கராச்சாரியார் கைகளில் விலங்கிட்டு அதை சாதனையாக தெரிவித்துள்ளதை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

சங்கராச்சாரியாருக்கு விலங்கிடப்படாத நிலையில் உண்மைக்கு மாறாக விளம்பர பதாகையில் விலங்கிட்டவர்கள் தங்களது விலங்கு உணர்வை வெளிப்படுத்தி உள்ளனர். இதை ஒரு சாதனையாக அவர்கள் அறிவித்துள்ளனர். இது சங்கராச்சாரியார் கைது விஷயத்தில் தமிழக அரசு அதீத ஆர்வம் காட்டியது என நாங்கள் கூறியது உண்மை என்று ஒப்புக்கொள்வது போல் உள்ளது.

இந்து மக்களது போற்றுதலுக்குரிய ஒருவரை இழிவுபடுத்தி, இந்துக்களது மனத்தை புண்படுத்தும் இந்த அநாகரிக விளம்பரம் உடனடியாக அப்புறப்படுத்தப்பட வேண்டும்.

இல்லையெனில், இதனால் ஏற்படும் எதிர் விளைவுகளுக்கு தமிழக அரசே பொறுப்பேற்க வேண்டும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## முட்டை அரை அவியல் வேண்டாம்! இறைச்சியை வேகவைத்து உண்ணுக!

### தமிழக மருத்துவர்கள் ஆலோசனை

சென்னை,பெப்.21

இந்தியாவில் பறவைக் காய்ச்சல் பீதி ஏற்பட்டிருப்பதை அடுத்து, கோழி இறைச்சி உண்போர் அதனை நன்கு சமைத்துச் சாப்பிடுமாறு தமிழக டாக்டர்கள் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

பொதுமக்கள் கோழி இறைச்சியை நன்றாகச் சமைத்துச் சாப்பிடலாம் என்று டாக்டர்கள் தெரிவித்தனர்.

மகாராஷ்டிரா மாநிலத்தில் பறவைக் காய்ச்சலுக்கு ஒருவர் உயிரிழந்ததைத் தொடர்ந்து நாடு முழுவதும் உஷார் நிலை உருவாகியுள்ளது.

"கோழி இறைச்சியைக் குழம்பு வைத்துச்சாப்பிட்டாலோ அல்லது பொரித்தாலோ நன்றாக வேகவைத்துச் சாப்பிடுவது நல்லது. இதேபோன்று முட்டையை நன்றாகச் சமைத்துச் சாப்பிடவேண்டும். பச்சை முட்டையைச் சாப்பிடுவது, முடையை அரை அவியலாகச் சாப்பிடுவது ஆகியவற்றைத் தவிர்ப்பது நல்லது" என டாக்டர்கள் தெரிவித்தனர்.

பறவைக் காய்ச்சல் காரணமாகக் கோழி பாதிக்கப்பட்டால், கழிச்சல் மற்றும் மூச்சுத் திணறல் ஏற்படும். இந்த அறிகுறிகளைக் கோழி வளர்ப்பவர்கள் காணும்போது அது சிறிது நேரத்திலேயே இறந்துவிடும். இந் நிலையில் 3 கிலோமீற்றர் தொலைவுக்கு உள்ள கோழிகள் அனைத்தையும் அழித்து விடவேண்டும் என்று இந்திய மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. (ஐ)

## கனியிருக்க காயை ஏன் தேர்ந்தெடுக்கிறோம்? தேர்தல் கூட்டணி குறித்து வைகோ சூசகம்!



பூந்தமல்லி, பெப்.21

இனிப்புத் தரும் கனியிருக்க கசப்பான காயை நாங்கள் ஏன் தேர்ந்தெடுக்கிறோம் என தேர்தல் கூட்டணி குறித்து வைகோ சூசகமாகத் தெரிவித்தார்.

பூந்தமல்லி நகர ம.தி.மு.க. துணைச் செயலாளர் து. கந்தன் இல்லத் திறப்பு விழாவில் ம.தி.மு.க. பொதுச்செயலர் வைகோ ஞாயிற்றுக்கிழமை உரையாற்றினார்.

ஏழை எளிய மக்களின் நலனில் அக்கறையுடன், ஒழுக்கத்தோடு கட்டுப்பாட்டுடன் செயற்பட்டுவரும் இயக்கம் ம.தி.மு.க.

இயற்கையைப் பார்த்து கற்றுக்கொள்ளவேண்டும். எறும்புகள் வரிசையாகச் செல்கின்றன. தூக்கணாங்குருவி கஷ்ரப்பட்டு கூடு கட்டுகிறது. அதைப் போல ம.தி.மு.க.12 ஆண்டுகள் கஷ்டப்பட்டு பல தியாகங்களைச் செய்து வளர்ந்துள்ளது.

'பொடா' வழக்குத் தொடர்பாக பூந்தமல்லிக்கு வந்த 19 மாதங்களும் கந்தன் போன்றவர்கள் எனக்காகக் காத்திருந்து பல உதவிகளைச் செய்தார்கள். அந்த நன்றியை மறப்பேனா? நன்றி மறப்பவனல்ல இந்த வைகோ.

தன்மானத்தையும், சுயமரியாதையையும் இந்த வைகோ எப்போதும் விட்டுக்கொடுக்க மாட்டார். பழிக்கு, நிந்தைக்கு அஞ்சுவோம் புகழுக்காக உயிரையும் கொடுப்போம். மானத்தைக் காக்க மரணம் வரை போராடுவோம். யாரிடமும் மண்டியிட மாட்டோம். ஒவ்வோர் அடியும் கவனமாக எடுத்து வைக்கிறோம். ஒவ்வொரு சொல்லையும் கவனமாகப் பயன்படுத்த வேண்டும். ஒரே ஒரு சொல் தவறியதால் மதுரை தீக்கிரையானது. பாண்டிய மன்னன் தீராப் பழி கொண்டான். ஒரு சொல்லால் இரு நாடுகளுக்கிடையே போர் மூண்டது. அதனால் சொல்லும் போது கவனம் வேண்டும். சொல்லிவிட்டு பின்னால் வருத்தப்படக்கூடாது - என்று வைகோ தனது உரையில் தெரிவித்தார். (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உருளைக்கிழங்குச் செய்கையில நோய்ப்பீடைகளை இனங்காண்போம்!

இலங்கையில் உருளைக்கிழங்குச் செய்கையானது 1948ஆம் ஆண்டில் விவசாயத் திணைக்களத்தால் பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கப்பட்டது. அதன்பின் 1957ஆம் ஆண்டளவில் மலைநாட்டில் வெற்றிகரமாகப் பயிரிடப்பட்டது. நாளடைவில் யாழ்ப்பாண மாவட்டத்திலும் உருளைக்கிழங்குச் செய்கை விருத்தியடைந்தது. 1990ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இலங்கையின் மொத்த உற்பத்தியில் 20 வீதமானது குடாநாட்டிலேயே உற்பத்தி செய்யப்பட்டது. ஆனால், தற்போது பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் விஸ்தீரணமும் ஓர் அலகிற்கான உற்பத்தி அளவும் வீழ்ச்சியடைந்துள்ளன. அதற்கான காரணங்கள் வருமாறு:-

1. நாட்டில் தோன்றிய அமைதியற்ற சூழ்நிலை.
2. விதைக்கிழங்கு விநியோகத்தில் ஏற்படும் சீரின்மை.
3. காலநிலையில் ஏற்படும் சடுதியான மாற்றங்கள்.
4. இதனால் அதிகரித்துச் செல்லும் நோய், பீடைத் தாக்கங்கள்.
5. அதிகரித்துச் செல்லும் கூலி, உள்ளீட்டுச் செலவுகள்.

**ச.சிவநேசன்**
**விவசாயப் போதனாசிரியர்**

6. சீரான சந்தைப்படுத்தல் வசதியின்மை.

மேற்படி காரணங்களுள் நோய்ப் பீடைத் தாக்கங்கள் பாரிய பங்கை வகிக்கின்றன. இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான செலவு அதிகரித்துச் செல்வதால் உற்பத்திச் செலவு அதிகரித்துச் செல்கின்றது. அத்துடன், விளைபொருளின் தரமும் சேமித்து வைக்கக்கூடிய தன்மையும் குறைவடைகின்றது.

நோய்ப் பீடைத் தாக்கம் அதிகரித்துச் செல்வதற்குப் பின்வரும் காரணங்கள் முக்கியமானவை:

1. சடுதியாக ஏற்படும் காலநிலை மாற்றம்.
2. போதிய அளவு சேதனப் பசளைகளைப் பாவிக்காமை.
3. கட்டுப்பாடற்ற மிதமிஞ்சிய இரசாயனப் பாவனை.
4. நோய் பீடைகளைச் சரியாக இனம் காணாது பொருத்தமற்ற இரசாயனங்களை விசிறுவது.
5. மேற்கூறிய காரணங்களினால் இரசாயனங்களுக்கு எதிர்ப்புத் தன்மை உள்ள புதிய குல வகைப்பீடைகள் உருவாகியமை.


தற்போது நோய்கள் பெருகுவதற்கு வாய்ப்பான காலநிலை உருவாகி உள்ளதால் நோய்கள் பெருகிப் பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடிய நிலை உருவாகியுள்ளது.

இந்நிலையில் நாம் நோய்ப் பீடைகளைச் சரியாக இனங்கண்டு பொருத்தமான இரசாயனங்களைப் பாவிப்பது நன்மையயக்கும். ஆதலால், கீழ்க்குறிப்பிடப்படும் நோய்ப் பீடைகளைச் சரியாக இனங்கண்டு தகுந்த கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.

**பிற்கூற்று வெளிறல்**

பைரொப்தரா இன்வெஸ்ரன்ஸ் (PHYTOPHTHORA INFESTANS) எனும் பூஞ்சணமே இந்நோக்குரிய காரணியாகும்.

இந்நோய் பெரும்பாலும் இலைகளிலேயே ஆரம்பிக்கின்றது. சில சமயம் இலைச்சோணை, தண்டு, கிழங்குகளிலும் ஆரம்பிக்கலாம். பயிர் பூக்கும் காலத்தில் பொதுவாக நோய்த்தொற்று கூடுதலாகக் காணப்படும். மழை, அதிக ஈரப்பதன் உள்ள போது வெப்பநிலையும் 15 பாகை C - 20 பாகை C ஆக இருக்குமாயின் நோயின் தாக்கம் தீவிரமாகக் காணப்படும். காலநிலை வாய்ப்பாக இருந்தால் நோய் பெருகி முழு இடமும் தாக்குப்படுவதோடு தண்டுகளில் மென் அழுகலையும் ஏற்படுத்தும். மழை பெய்யுமாயின் மழைநீர், பனித்தண்ணீருடன் நோய்க்காரணிகள் கழுவப்பட்டு மண்ணுக்குள் செல்வதால் மண்ணிலும் கிழங்குகளிலும் தொற்று ஏற்படும்.



**நோயை அடையாளம் காணல்**

ஆரம்பத்தில் இலையின் நுனியில் விளிம்புகளில் ஒழுங்கற்ற வடிவமுடைய சிறிய மஞ்சள் புள்ளிகள் உருவாகும். பின்பு புள்ளிகள் பெரிதாகிக் கடும் பச்சையில் இருந்து கடும்மண்ணிறமாக நிறமாற்றமடையும். இலையின் கீழ்ப்பகுதியை அவதானித்தால் நோய்தாக்கிய பகுதியின் விளிம்பிற்கும் நோய்தாக்காத பகுதிக்கும் இடையில் வெண்மையான பூஞ்சண இழைகள் உருவாகியிருப்பதைக்காணலாம். பின்பு இலை சுருண்டு தூங்கிக் காணப்படும். கிழங்கின் மேற்பகுதி கடும் நிறமாகித் தாக்கப்பட்ட பகுதிகள் கடும் மண்ணிறமாக மாறி உலர்ந்து வைரமாகக் காணப்படும்.

**முற்கூற்று வெளிறல்**

இது 'ஒல்ரனேரியா சொலனை' என்ற பங்கசுவால் ஏற்படுகின்றது. இதுவும் பிற்கூற்று வெளிறல் போன்று இலை, தண்டு என்பவற்றைத் தாக்கும். காற்றாலும் பரவக் கூடியது, பரவ நீர் அவசியமில்லை. உயர் வெப்பநிலையும் உயர் ஈரப்பதனும் வாய்ப்பான சூழல் ஆகும். ஆரம்பத்தில் பயிரின் அடியில் உள்ள முதிர்ந்த இலைகளைத் தாக்கத் தொடங்கும்.

**அடையாளம் காணல்**

ஒழுங்கற்ற கறுப்புச் சேர்ந்த மண்ணிறமான புள்ளிகளாக ஆரம்பித்து பின் ஒரு மைய வட்ட வடிவங்களாகப் பெருத்துச் செல்லும். கடும் கபிலநிறமான அல்லது கறுப்பு சேர்ந்த கபிநிலநிறமான பூஞ்சண இழைகள் உருவாகும். தாக்கப்பட்ட பகுதி மெல்லிய மென்பச்சை நிறமுடைய விளிப்புகளைக் கொண்டிருக்கும். தீவிரமாகப் பெருகும்போது இலை மஞ்சளடைந்து காய்ந்து உதிர்ந்துவிழும்.

| இரசாயனப் பெயர் | பொதுப் பெயர் | பாவனை அளவு |
|---|---|---|
| குளோரோதலனில் 75% தூள் | டக்கோனில் | 0.9 - 1.3 கிலோ / கெக் |
| மங்கோசெப் 80% தூள் | டைத்தேன் M-45 | 1.8 - 2.6 கிலோ / கெக் |
| மனெப் 80% | போலிறாம் M | 0.9 - 1.3 கிலோ /கெக் |
| மனெப் 60%, சிநெப் 10% } தூள் | புளுமங்கோசான் | 1.0 - 1.6 கிலோ / கெக் |
| மங்கோசெப் 64%, மெற்ரலக்சில் 08% } தூள் | றிடோமில் | 0.9 - 1.3 கிலோ கெக் |
| புரொப்பிநெப் 70% தூள் | அன்றக்கோல் | 0.9 - 1.3 கிலோ கெக் |

**கட்டுப்பாடு**

**பயிர்ச்செய்கையின் ஆரம்பத்தில் செய்யப்படவேண்டியது:-**

✱ எதிர்ப்பு இனங்களை நாட்டவும் -

✱ தொற்று நீக்கப்பட்ட ஆரோக்கியமான கிழங்குகளை நாட்டவும் -

✱ தொடர்ச்சியாக 'சொலனேசிக்' குடும்பப் பயிர்களைப் பயிரிடாது மாற்றுப்பயிர் செய்யவும் -

✱ முன்னைய போகத்தில் செய்யப்பட்ட பயிர் மீதிகளை உடனடியாக அகற்றவும் நோய்த்தாக்கம் ஏற்பட்டிருப்பின் எரிக்கவும்.

**பயிர்ச்செய்கையின்போது செய்யப்படவேண்டியவை:-**

நோய் ஏற்பட்டவுடன் கட்டுப்படுத்துவது கடினம் ஆகையால் 7-10 நாள்கள் இடைவெளியில் சிபார்சுசெய்யப்பட்ட பங்கசு நாசினியை விசிறவும்.

ஒரே மருந்தைத் தொடர்ச்சியாக விசிறாது மாறுபட்ட தொழிற்படுதிறனுடைய மருந்துகளை மாற்றிமாற்றி விசிறவும்.

எக்காரணம் கொண்டும் இரண்டு மருந்துகள் கலந்து விசிறக்கூடாது.

பூச்சிநாசினியையும் பங்கசுநாசினியையும் கலந்து விசிறக் கூடாது.

மழை பெய்யுமாயின் மழை விட்டவுடன் உடனடியாகப் பூஞ்சண நாசினியை விசிறவும். ✱

# இந்தியாவிலிருந்து வந்து வலி.மேற்கில் மீளக்குடியேறியோருக்கு உதவிகள்

வலி.மேற்கு,பெப்.21

இந்தியாவில் இருந்து வந்து வலி.மேற்கில் மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கு ஐ.ஓ.எம். நிறுவனத்தினால் மலசலகூடங்களும் வீடுகளும் அமைத்துக்கொடுக்கப்படவுள்ளன. இதற்கான நடவடிக்கைகளைப் பிரதேச செயலகத் திட்டமிடல் பகுதியினர் மேற்கொண்டுள்ளனர்.

1995ஆம் ஆண்டு இடம்பெற்ற இடப்பெயர்வின்போது இடம்பெயர்ந்து சென்று இந்தியாவில் வசித்து மீண்டும் திரும்பி வந்து மீளக்குடியமர்ந்துள்ள வருமானம் குறைந்த குடும்பங்களுக்கே ஐ.ஓ.எம். நிறுவனத்தினரால் இந்த உதவிகள் செய்து கொடுக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (த-175)

# யாழ். விஞ்ஞான சங்கம் நடத்தும் கட்டுரை, வினா-விடைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், பெப்.21

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் நடத்தும் கட்டுரை, வினா-விடை எழுத்துப் போட்டிகள் நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெறவுள்ளன.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய நான்கு மாவட்டங்களிலும் இருந்து சுமார் 65 பாடசாலையைச் சேர்ந்த 450இற்கும் மேற்பட்ட மாணவர்கள் இப் பரீட்சைகளுக்குத் தோற்றுகின்றனர்.

வலிகாமம், தீவகம் கல்வி வலய மாணவர்களுக்கான போட்டிகள் யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும், வடமராட்சி வலய மாணவர்களுக்கான போட்டிகள் வடமராட்சி வட இந்து மகளிர் கல்லூரியிலும், தென்மராட்சி வலய மாணவர்களுக்கான போட்டிகள் சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும், கிளிநொச்சி மாவட்ட மாணவர்களுக்கான போட்டிகள் கிளிநொச்சி மத்திய கல்லூரியிலும், முல்லைத்தீவு மாவட்ட மாணவர்களுக்கான போட்டிகள் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியிலும், மன்னார் மாவட்ட மாணவர்களுக்கான போட்டிகள் புனித சவேரியார் பெண்கள் கல்லூரியிலும் நடைபெறும்.

போட்டிக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் யாவும் சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத மாணவர்களும் இப் பரீட்சைக்குப் புதிதாகத் தோற்ற விரும்பும் பாடசாலைகளின் மாணவர்களும் பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தல் கடிதத்துடன் தத்தமக்குரிய பரீட்சை நிலையங்களுக்கு முன் கூட்டியே சமுகமளிப்பின் இப்போட்டிகளில் கலந்துகொள்ளும் வாய்ப்பு அவர்களுக்கு நிச்சயம் உண்டு என்று யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பாடசாலை நிகழ்ச்சிக் குழுச் செயலாளர் [illegible] தெரிவித்துள்ளார். (ஐ)

# வாசகர் திருமுகம்

## உள்ளூராட்சித் தேர்தலின் அவசியமும் தபால் மூல வாக்களிப்பும்

தமிழ் மக்களைப் பொறுத்தவரை நாடாளுமன்றத் தேர்தல், உள்ளூராட்சித் தேர்தல் இரண்டும் தற்பொழுது அவசியமான தேர்தலாக விளங்குகின்றன. ஏனெனில் தமிழ் மக்கள் தங்களுடைய நம்பிக்கைக்குரிய பிரதிநிதிகளை உரிய இடங்களுக்கு அனுப்புவதற்காகவும் 'குரங்கின் கைப் பூமாலையாக' பிரதிநிதித்துவம் நேர்மையற்றவர்களிடம், விலைபோகக்கூடியவர்களிடம், தமிழின உணர்வு அற்றவர்களிடம், கைப்பொம்மைகளிடம், பதவியாசை பிடித்தவர்களிடம் சென்றடையக்கூடாது என்பதில் தமிழ்மக்கள் உறுதியாக இருக்கின்றார்கள்.

தேர்தல் நடக்குமா? நடக்காதா? என்பது வேறு விடயம். தேர்தல் நடைபெற்றால் அரச ஊழியர்களும், தமிழ்மக்களும் வாக்களிக்கத் தயாராக வேண்டும். வாக்களிக்க வேண்டும். பிரதிநிதிகளைத் தெரிவு செய்யவேண்டும்.

தற்பொழுது அரச ஊழியர்கள் தமது தபால மூல வாக்களிப்பு விண்ணப்பங்களை உரிய முறையில் நிரப்பி ஒப்படைக்க அக்கறையில்லாமல் அலட்சியப்போக்குடன் இருக்கின்றார்கள். மேலதிகாரிகளும் விண்ணப்பப் படிவங்களை உரிய ஊழியர்களிடம் உரிய நேரத்தில் வழங்க அக்கறை இல்லாமல் இருக்கின்றார்கள். எனவே, தேர்தற் கடமையில் ஈடுபடும் அரச ஊழியர்கள் தபால் மூல வாக்களிப்பு விண்ணப்பப் படிவங்களை உரியவர்களிடம் பெற்று, உரிய முறையில் நிரப்பி மேலதிகாரிகளிடம் ஒப்படைத்து தமது தபால் மூல வாக்களிப்பு உரிமையை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

*துன்னாலை, வடமராட்சி.* **வே.சிவதாசன்**

## ஆசிரியர்களும் தேர்தல் கடமைகளும்

அண்மையில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் கடமைகளில் பல ஆசிரியர்கள் தேர்தல் கடமைகளுக்காக நியமிக்கப்பட்டு பணியாற்றினார்கள். இந்த நியமனங்கள் சட்டரீதியான நியாயம் அற்றவையாகவும், சமூக நீதித் தன்மை அற்றவையுமாக எதுவித ஒழுங்கு முறைகளும் இன்றி அமைந்திருந்தது. இந் நியமனங்களில் சேவை மூப்பும், அனுபவமும் நிறைந்த ஆசிரியர்கள் பலர் வாக்களிப்பு எழுதுநர்களாக நியமிக்கப்பட்டனர். அதேநேரம் அனுபவம் குறைந்த பல முகாமைத்துவ சேவையாளர்கள் (இலிகிதர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள்) கனிஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களாகவும், சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களாகவும் நியமிக்கப்பட்டனர்.

இங்கு தேர்தல் திணைக்களம் இந்த அலுவலர்களை நியமிப்பதற்காக ஒரு சம்பள படிமுறையை வகுத்துச் செயற்படுகிறது. இச் சம்பள படிமுறையானது ஆசிரியர்களுக்கு பாரபட்ச சமான தன்மையைக் கொண்டுள்ளது. இதில் ஆசிரியர்கள் தனியான ஒரு வகுதியாக வகைப்படுத்தப்பட்டு அவர்களில் உயர் சம்பள நிலையினர் - கீழ்நிலையிலுள்ள தேர்தல் அலுவலர்களாக நியமிக்கப்படக் கூடியதாக அமைக்கப்பட்டுள்ளது.

இதனால் பல வாக்களிப்பு நிலையங்களில் 10-15 வருடங்களுக்கு மேலான சேவையைக் கொண்ட ஆசிரியர்கள் அண்மைய 1-2 வருடங்களுக்குள் நியமனம்பெற்ற இளநிலை முகாமைத்துவ சேவையாளர்களின் கீழ் கடமையாற்றப் பணிக்கப்பட்டனர். இதன் உச்சமாக பல இடங்களில் ஆசிரியர்கள் தங்களிடம் கல்வி பயின்ற மாணவர்களின் வழிகாட்டலில் பணியாற்றும் நிலையை அனுபவித்தனர்.

இக் காரணங்களினால் இம்முறை நடைபெறும் தேர்தல்களில் ஆசிரியர்கள் தேர்தல் கடமைகளில் ஈடுபட விரும்பவில்லை. தேர்தல் கடமை செய்ய வேண்டுமானால் ஆசிரியர்களும் அவர்களின் சேவை மூப்பு, அனுபவம் எனும் அடிப்படையில் வேறுபாடு அற்ற முறையில் கடமைகள் ஒதுக்கப்படும் போது ஏற்று செயற்பட முடியும். இதனை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனித்து ஆவன செய்ய வேண்டும் என அநேக ஆசிரியர்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

**செல்வம்**
*மானிப்பாய்.* **(யாழ். மாவட்ட ஆசிரியர்கள் சார்பில்).**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் கொண்டுள்ள விடுதலைப் பற்றே ஜெனீவா சந்திப்புக்கு வழிவகுத்தது

## சுவிஸ் ஈழத்தமிழர் மத்தியில் தமிழ்ச்செல்வன்

ஜெனீவா, பெப்.21

தாயகப் பிரதேசத்தில் மக்கள் காட்டிய உறுதிப்பாடே ஜெனீவா சந்திப்புக்கு வழி வகுத்தது என அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

சுவிஸில் ஈழத்தமிழர்கள் மத்தியில் உரை யாற்றுகையில் அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

எங்களுடைய மக்கள், நாங்கள் தேசப் பற்றும் விடுதலைப் பற்றும் எங்கள் அரசியல் வாழ்வையும் இராணுவப் பலத்தையும் நாங்கள் எவ்வளவு தூரம் கட்டி வைத்திருக்கிறோமோ அதுதான் எங்களுக்கான தீர்வைக் கொண்டுவரும். இன்றைக்குக்கூட ஜெனீவா சந்திப்பு எங்களுடைய மக்கள் காட்டிய உறுதிப்பாடுதான். ஜெனீவா சந்திப்புக்கு இலங்கை அரசும் நாங்களும் இணங்கவேண்டிய இடத்திற்கு கொண்டுவந்தது. தாயகத்தில் நடந்து கொண்டிருக்கின்ற நிகழ்வுகளை நீங்கள் அறிவீர்கள். ஒரு யுத்த சூழல் உருவாகியிருக்கின்றது.

அதாவது எங்கள் மக்கள் மீதான படுகொலைகள், கொலைகள் யுத்த காலம் போலவே அங்கு கெடுபிடிகளும் நெருக்கடிகளும் இராணுவ அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்ட சூழ்நிலையில் சர்வதேச சமூகத்தின் ஓர் இறுதி முயற்சியாகத்தான் இந்த ஜெனீவா சந்திப்பை - ஒழுங்குபடுத்தியுள்ளது.

இந்தச் சந்திப்பு உண்மையிலேயே பெரிய நன்மைகளை அல்லது எங்களது மக்களுடைய எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் என்பதை இப்பொழுது கூறமுடியாது.

ஏனெனில், அங்கு களநிலைமைகள் மிக மோசமாக இருக்கிறது. இற்றைக்கு நான்கு வருடங்களுக்கு முன்னால் உருவாக்கப்பட்ட இந்த யுத்த நிறுத்த அமுலாக்கம், இந்த யுத்த நிறுத்த உடன்படிக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகளை அமுல்படுத்துவது பற்றிக் கதைக்கப்போகிறோம்.

இது உண்மையிலேயே இலங்கை அரசாங்கத்தினுடைய ஓர் ஏமாற்றுத்தனத்தையும் கபட நோக்கத்தையும் தமிழ் மக்களுக்கு எந்த தீர்வையுமே இதுவரை எந்த சிங்கள இனவாத அரசுகளும் வைக்கப் போவதில்லை. என்பதனைத் தான் நான்கு வருடங்களும் தெளிவாகக் காட்டுகின்றன.

இப்பொழுது எங்களுடைய மக்கள் எல்லாவற்றிலும் முழுமையாக நம்பிக்கை இழந்த சூழ்நிலையில் உள்ளார்கள். இது ஒரு சர்வதேச சமூகத்தினுடைய இறுதிக்கட்ட முயற்சியான நிலை. எங்களுடைய மக்கள் தங்களை தற்பாதுகாத்துக்கொள்வதற்கும் எங்களுடைய தாயகத்திலேயே ஆக்கிரமிப்புப் படைகளை விரட்டியடிப்பதற்கும் முழு அளவில் தயாரான நிலையில்தான் சர்வதேச சமூகம் ஒரு யுத்த நெருக்கடியைச் தவிர்த்து ஓர் இணக்கப்பாட்டின் அடிப்படையில் அமைதி முயற்சிகளில் ஈடுபடுவதன் ஊடாக இதற்கு ஒரு தீர் வைக்காணும்படி இருதரப்புக்கும் வேண்டுகோளின்படி நாங்கள் இதை இறுதிச் சந்தர்ப்பத்தில் காலடி வைத்துள்ளோம்.

இரு தரப்பினரும் சந்திப்பதால் பிரச்சினைகள் தீரும் என்று சொல்லமுடியாது. இது இலங்கை அரசாங்கத்தின் கையில்தான் இருக்கிறது. எங்களுடைய தாயகப் பிரதேசத்தை ஆக்கிரமிப்பு செய்து வைத்திருப்பது, எங்களுடைய மக்கள் மீது அரச இராணுவப் பயங்கரவாதம் கட்டவிழ்த்து விட்டிருப்பதும் இலங்கை அரசாங்கம்தான்.

ஆகவே, இலங்கை அரசாங்கம் யுத்த நிறுத்த உடன்படிக்கையை ஏற்றுக்கொண்ட நடைமுறைகளை நடைமுறைப்படுத்துமாக இருந்தால் எங்களுடைய மக்களுக்கு தற்காலிகமான அமைதி, ஓர் இயல்பு வாழ்க்கை கிடைக்கும். அதை எவ்வளவு தூரம் அவர்கள் செய்வார்கள். அதை நாங்கள் நம்பமுடியாது. புறப்படுகின்ற காலப்பகுதியிலேயே இலங்கை ஜனாதிபதியும் அதன் கூட்டுக் கட்சிகளும் இனவாதிகளும் சொல்லிக் கொண்டிருக்கின்ற கருத்துகள் மிகவும் மோசமானவை.

அதாவது, எங்களுடைய இருப்பையே இல்லாது செய்வதற்கான கருத்துகளை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். இனவாதக் கருத்துகளை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். எவ்வளவு தூரம் தங்களுடைய அர்ப்பணிப்பை காட்டப்போகிறார்களோ என்பது கேள்விக்குறியாகத்தான் இருக்கிறது. இருந்தாலும் இந்த சந்திப்பை தவிர்க்க முடியாமல் சர்வதேச சமூகத்திற்கு எங்களுடைய நல்லெண்ணத்தையும் எங்களுடைய அர்ப்பணிப்பையும் நாங்கள் வெளிப்படுத்தும் நோக்கோடும் தான் எங்களுடைய தலைவர் இந்த முடிவை எடுத்திருக்கின்றார். (க-3)

## எல்லே, வலைப்பந்தாட்டப் போட்டிகளில் வதிரி பொம்பேஸ் அணி சம்பியனானது

யாழ்ப்பாணம்,பெப்.21

கரவெட்டிப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடத்தப்பட்ட எல்லே, வலைப்பந்தாட்டப் போட்டிகளில் வதிரி பொம்பேஸ் வி.க. வெற்றிபெற்றுச் சம்பியனானது.

கடந்த வாரம் வதிரி பொம்பேஸ் வி.க. மைதானத்தில் பெண்களுக்கான வலைபந்தாட்டப் போட்டிகள் இடம்பெற்றன.

இதில் இறுதியாட்டத்திற்கு அல்வாய் மனோகர வி.கவும் வதிரி பொம்பேஸ் வி.கவும் தெரிவாகியிருந்தன.

இறுதியாட்டத்தில் வதிரி பொம்பேஸ் வி.க. 32 புள்ளிகளைப் பெற்று சம்பியனானது.

அல்வாய் மனோகரா வி.க. மைதானத்தில் ஆண்களுக்கான எல்லே போட்டிகள் நடைபெற்று இறுதியாட்டத்திற்கு கரவெட்டி ஐக்கிய வி.கவும் வதிரி பொம்பேஸ் வி.கவும் தெரிவாகின.

இரண்டு இன்னிங்ஸ் கொண்டதாக நடைபெற்ற இறுதியாட்டத்தில் வதிரி பொம்பேஸ் வி.க. 8 புள்ளிகளைப் பெற்றுச் சம்பியனானது. (3-203-204)

## தெம்சன் இல்லம் முதலாமிடம்

யாழ்.பரியோவான் கல்லூரி இல்ல மெய் வன்மைப் போட்டியில் தெம்சன் இல்லம் 239 புள்ளியைப் பெற்று முதலாவது இடத்தைப் பெற்றுள்ளது.

பிற்றோ இல்லம் 184 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும் கண்டி இல்லம் 161 புள்ளியைப் பெற்று மூன்றாவது இடத்தையும் ஜோன்சன் இல்லம் 146 புள்ளியைப் பெற்று நான்காவது இடத்தையும் பச்சிக்றர் இல்லம் 107 புள்ளியைப் பெற்று ஐந்தாவது இடத்தைப் பெற்றுள்ளன.

கல்லூரியின் மைதானத்தில் அதிபர் எஸ்.தனபாலன் தலைமையில் மெய்வன்மைப் போட்டிகள் நடைபெற்றன. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இங்கிலாந்து பெட போர்ட் சுகாதார சபையின் காது, மூக்கு, தொண்டைசத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் ரோய்ஸ் அரசரட்ணம் கலந்துகொண்டார். (3-190)

## ஈட்டி எறிதலில் சாதனை



யாழ்ப்பாணம்,பெப்.21

சென்.ஜோன்ஸ் கல்லூரியில் நடைபெற்ற இல்ல மெய்வன்மைப் போட்டியில் எ.தவநீதன் ஈட்டி எறிதலில் புதிய சாதனை ஒன்றை நிலைநாட்டியுள்ளார்.

2004ஆம் ஆண்டு 17 வயதுப் பிரிவினருக்கான ஈட்டி எறிதல் நிகழ்வில் எஸ்.தேவனந்தன் 23.80 மீற்றர் தூரத்திற்கு எறிந்து சாதனையை நிலைநாட்டியிருந்தார்.

இரண்டு வருடங்களின் பின்னர் இம்முறை எ.தவநீதன் 41.71 மீற்றர் தூரத்திற்கு ஈட்டி எறிந்து தேவனந்தனின் சாதனையை முறியடித்து புதிய சாதனையை நிலைநாட்டினார். (3-190)

## மெய்வன்மைப் போட்டி

குருநகர்.பெப்.21

யாழ்.புனித மரியாள் பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை.பிற்பகல் 1.30 மணிக்கு முன்னைய சிங்கள மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் அதிபர் எம்.செபஸ்ரியாம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ்.ஆயரின் செயலாளர் வண.பிதா எஸ்.றோசான் அடிகளார் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (3-51)

## 'வடக்கின் போர்' அடுத்த மாதம்

யாழ்ப்பாணம்,பெப்.21

சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் யாழ்.மத்திய கல்லூரிக்கும் இடையிலான வடக்கின் போர் **(Battle of the North)** என வர்ணிக்கப்படும் மாபெரும் துடுப்பாட்டப் போட்டியின் 100ஆவது போட்டி அடுத்த மாதம் நடைபெறவுள்ளது.

அடுத்த மாதம் 9ஆம், 10ஆம், 11ஆம் திகதிகளில் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இப்போட்டி நடைபெறவுள்ளது.

போட்டிக்கான ஒழுங்குகளை இரு கல்லூரிகளும் மேற்கொண்டு வருகின்றன. (3-190)




## உள்ளரங்கப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,பெப்.21

மணிவதனன் ஜெயச்சித்திரா சகோதரரின் 11ஆவது ஆண்டு ஞாபகார்த்தமாக நடத்தப்பட்ட உள்ளரங்க விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்றோரின் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அந்த முடிவுகள் வருமாறு:-

**மேசைப்பந்தாட்டம்**

ஒற்றையர் ஆண்கள்: மோகன், டில்சான், தருஷன்.

இரட்டையர் ஆண்கள்: டில்சால், தருஷன், செந்தில்வேல் - செந்தில்நாதன், மகேந்திரன் - சோமசுந்தரம்.

**கலப்பு இரட்டையர்**

டில்சான் - காயத்திரி, ஜெவ்றி - மைத்திலி, கேந்திரா - ஜசோதா.

ஒற்றையர் பெண்கள்: ஜசோதா, நிலாந்தி, காயத்திரி.

இரட்டையர் பெண்கள்: ஜசோதா - நிருசியா, நிலாந்தி - யாழினி, நிஷாந்தினி - சுவர்ணா.

**45 வயதுக்கு மேற்பட்டோர்**

மகேந்திரன், மாணிக்கராஜா.

**கரம்**

ஒற்றையர் ஆண்கள்: பிரியதர்சன், யுகேந்திரா, குமரேசன்.

இரட்டையர் ஆண்கள்: பிரியதர்சன் - டில்சான், சற்குணமூர்த்தி - விமலகாந்த.

**கலப்பு இரட்டையர்**

பிரியதர்சன்- ஜசோதா, மோகன்- சுகன்யா.

ஒற்றையர் பெண்கள்: பிரதீபா, ஜசோதா, வைதேகி.

இரட்டையர் பெண்கள்: பிரதீபா - வைதேவி, ஜசோதா - நிரு சியா.

**45 வயதுக்கு மேற்பட்டோர் - ஒற்றையர்**

சற்குணமூர்த்தி, அமிர்தலிங்கம், மாணிக்கராஜா.

(3-190)

## கொக்குவில் இந்து - சென்றல் ஆட்டம் சம நிலையில் முடிந்தது

யாழ்ப்பாணம்,பெப்.21

யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் 19 வயதிற்கு உட்பட்டோருக்கான அணிகளுக்கு இடையே நடைபெற்றுவரும் சிநேகபூர்வமான கிரிக்கெட் போட்டித் தொடரில் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும், யாழ்.மத்திய கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற ஆட்டம் சமநிலையில் முடிவுற்றது.

மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 83 ஓட்டங்களைப் பெற்றது.

றஜந்தன் 23 ஓட்டங்களையும், வினேஷன் 18 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

கிறிஸ்ரிஜோண்சன் 17 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் வியாஷன் 12 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் வினேந்குமார் 26 ஓட்டங்களைக் கொடுத்து 2விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணி எட்டு விக்கெட்டுக்களை இழந்து 1?4 ஓட்டங்களைப் பெற்றது.

தயான் 68 ஓட்டங்களையும், சுதர்சன் 38 ஓட்டங்களையும், பிரசாந் 22 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

ஜெயறூபன் 42 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும் வினேஷன் 34 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் செந்தூரன் 40 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி ஆறு விக்கெட்டுக்களை இழந்து 103 ஓட்டங்களைப் பெற்றது.

உல்லசகுமாரன், றஜந்தன், சிவாஸ்கர் ஆகியோர் முறையே தலா 24 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

மதிப்பிரியன் 2? ஓட்டங்களைக் கொடுத்து 4விக்கெட்டுக்களை [illegible] (3-190)



உரும்பிராய் தெற்கு கிராம முன்னேற்றச் சங்கத்தினால் நடத்தப்பட்ட முன்பள்ளி விளையாட்டு விழாவின்போது, பரிசுபெற்ற மாணவர்களுக்கு மேற்படி சங்கத்தின் தலைவர் த.திருநாவுக்கரசு சான்றுப்பத்திரத்தினை வழங்கிக் கௌரவிக்கின்றார். (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச சபையின் அதிகாரங்கள் செயலகங்களுக்குக் கையளிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.21

உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்கள் அனைத்தும் அவசரகால சட்டத்தின் பிரகாரம் மாவட்ட செயலர்கள், பிரதேச செயலர்களுக்கு வழங்குமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற விசேட கூட்டமொன்றில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகளின் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.

இந்தத் தீர்மானம் தொடர்பான ஜனாதிபதியின் கையெழுத்துடன் வர்த்தமானி அறிவித்தல் ஒன்றினை வெளியிடவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதற்கமைய உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்கள் நேற்று முதல் மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்களுக்கு வழங்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (3-13)

# பாதிக்கப்படும் பெண்களுக்கு உதவ மகளிர் அமைப்பு முன்வந்துள்ளது

தென்கிழக்கு,பெப்.21

இல்லத்து வன்முறைகள், பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் உளவியல் பாதிப்பு இவைகளினால் பாதிப்புற்ற பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு ஆதரவளிக்க ''தேவை நாடும் மகளிர் அமைப்பு'' முன்வந்துள்ளது.

இதன்படி மேற்கூறப்பட்ட பாதிப்புற்றோருக்கு இலவச சட்ட உதவி, ஆலோசனை, பிரதிநிதித்துவம், தற்காலிகள் புகலிட வசதி, விழிப்புணர்வுக் கருத்தரங்குகள், செயலமர்வு ஆகியன தொடர்பாக இந்த அமைப்பிடம் உதவிகள் பெறலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வமைப்பு மாவட்டத்தில் 22/1, நக்காலேன், சுண்டிக்குளி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ளது.

இவ்வமைப்புடன் தொடர்புகொண்டு பாதிப்புற்றோர் இலவச உதவிகளைப் பெறலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3-122)

## உரப்பையில் துப்பாக்கி ரவைகள்

வத்தளை, ஹுணுப்பிட்டியில் குப்பைக் கூழமொன்றிலிருந்து பெரும் தொகையான துப்பாக்கி ரவைகளை பொலீஸார் நேற்றுமுன்தினம் மீட்டனர். உரப்பை ஒன்றில் இந்த ரவைகள் கட்டிவைக்கப்பட்டிருந்தன என்ற ரகசியத் தகவல் ஒன்றை அடுத்தே தாம் தேடுதல் நடத்தி இவற்றைக்கண்டு பிடித்ததாகவும் பொலீஸார் தெரிவித்தனர்.

வத்தளை பொலீஸார் தீவிர விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (க-3)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர் திரு.வி.குருநாதன்
அவர்களின் சகோதரர்

**வி.கதிர்காமநாதன்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி. - கல்லூரிச் சமூகம்.

(46066)(42-11-19)

## 31ஆம் நாள் நினைவலையில்...



அமரர்
**சிதம்பரப்பிள்ளை நல்லையா**
(சீனட்டி - வல்வெட்டி)

*மலர்வு* *18-04-1930*  *உதிர்வு* *24-01-2006*

*மாதமொன்றான பின்னும்*
*மனமது அமைதி காணாதிங்கு*
*மாண்டழ வைத்து நீங்கள் -*
*ஆண்டவன் பாதம் சென்றீர் - அதனால்*
*துயர் களைந்தோம் -*
*துதிப்போம் அமைதி பெற*
*காணுக சாந்தி! சாந்தி!!*

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (22-02-2006) புதன்கிழமை பிற்பகல் 2மணிக்கும், வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 23-02-2006 வியாழக்கிழமையும் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு வேண்டுகின்றோம்.

*சீனட்டி,*
*வல்வெட்டி.* (46968)(21-11-19-42)

அன்னாரின் பிரிவால் துயருறும்:
- குடும்பத்தினர்.

## வலி.கிழக்கில் வீடமைப்புக் கடன்

தென்மராட்சி,பெப்.21

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட குடியிருப்பாளர்களுக்கு வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினர் வீடமைப்புக் கடன் வழங்கவுள்ளனர்.கடன் பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்கள் பிரதேச செயலகத்தில் பிரதி புதன்கிழமைகளில் வீடமைப்பு அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் பெற்றுக் கொள்ளலாமெனத் தெரிவிக்கப்பட்டது.(3-117)

## கந்தபுராண படனம்

திருநெல்வேலி தலங்காவற்பிள்ளையார் ஆலயத்தில் தற்போது கந்தபுராணப் படனம் இடம்பெற்று வருகின்றது.

தைப்பூச தினமான கடந்த 11ஆம் திகதி ஆரம்பமாகித் தினமும் கந்தபுராண படனம் நடைபெற்றுவருகின்றது. (எ)

**VNC**

தரமான முறையில் கொங்கிறீற் கற்கள், தூண்கள் 100 அடி நீளம், 40 அடி அகலம் கொண்ட தொட்டிகளில் அறுக்கப்பட்டு பின்னர் நீரில் ஊறவிட்டு விற்பனை செய்யப்படுகின்றன. 1 அடி நீளம் 4'' அகலக் கல்லின் விலை 26/= மட்டும். நேரடியாகப் பார்வையிட்டு முற்கூட்டியே பதிவுசெய்து பெற்றுச்செல்லவும்.

**VNC**
கும்பழாவளை பிள்ளையார் கோயில் அருகில்
அளவெட்டி மத்தி, அளவெட்டி.
(46913) (24.42)

**IIS**

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

பிரிவு I : 18.02.2006
பிரிவு II : 22.02.2006
பகல் 10.00 மணி

அனைத்து Diploma கற்கை நெறிகளுக்குமான வார, வாரஇறுதி நாள் வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன என்பதை அறியத்தருகின்றோம்

இயக்குநர்
IIS, யாழ்ப்பாணம்

## மரண அறிவித்தல்கள்



### *அந்தோனிப்பிள்ளை மரியராஜா*

(SCC கம்பனி சவூதி அரேபியா, பாதுகாப்பு உத்தியோகத்தர், இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம், ஓய்வுபெற்ற இராணுவக் கோப்ரல்)

மல்லாகம், குளமங்காலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை மரியராஜா 17.02.2006 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை-ஞானம்மா தம்பதியரின் இளைய மகனும் காலஞ்சென்றவர்களான அருளானந்தம் (மட்டக்களப்பு), செபமாலை இரத்தினம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் மனுவேல் - மேரி தம்பதியரின் மருமகனும் றூத் புஸ்பராணியின் அன்புக் கணவரும் றோய் (கனடா), மொறின், றெஜி (லண்டன்), சாந்தி (லண்டன்), ஜெசி (லண்டன்), ரவிச்சந்திரன் (செல்வன்- லண்டன்), ஜெயச்சந்திரன் (இராசன்-லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஸ்ரான்லி (கனடா), செல்வராஜா (செல்வம்), இரகுநாதன் (லண்டன்), மாலினி (லண்டன்), அமலராணி (லண்டன்), றூபஸ் (லண்டன்) ஆகியோரின் மாமனும் யோசப்பின் ஜெனீபர், சரோன், நெய்லின், டினியா, டினேசியா, மாஷல், வேஜின், சிறிஸ்ரினா, யோயல், ஜொய்சி, றோகர் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (22.02.2006) புதன் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு குளமங்கால் புனித சவேரியார் ஆலயத்தில் திருப்பலியின் பின்னர் குளமங்கால் சவேரியார் சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மல்லாகம். (47057)(42-11-19) செல்வராஜா (மருமகன்).

### *தம்பிமுத்து நாகம்மா*



ஆனைக்கோட்டை, மூத்த நயினார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி தம்பிமுத்து நாகம்மா அவர்கள் நேற்று (20.02.2006) திங்கட்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிமுத்துவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் நாகேஸ்வரி (மணி - சுவிஸ்), திருச்செல்வம் (செல்வன் வீடியோ), தியாகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயும் பரமேஸ்வரி, சிவபாலன் (சுவிஸ்), செல்வலஷ்மி, தவராஜசிங்கம் ஆகியோரின் மாமியும் அமிர்தினி, தாரணி, கபிலன், கௌதமன், பிரியங்கா, குணசீதன் ஆகியோரின் பேர்த்தியும் கீர்த்திகன், ஆதித்யன், மாதங்கி ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (20.02.2006) திங்கட்கிழமை நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
*ஆனைக்கோட்டை.* *(சி/46540)(42-11-19)* - குடும்பத்தினர்

## நீங்காத நினைவுகளுடன் ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

*தோற்றம்* *28 . 05 . 1937*



*மறைவு* *15 . 02 . 2001*

**அமரர் Dr. கந்தையா பாலசிங்கம்**
*(பிரசன்னா வைத்திய நிலையம்)*
திதி: அட்டமி (21.02.2006)

பாசத்தால் எமைக் கட்டி
பண்பையே எமக்கூட்டி
அன்பினால் எமை அணைத்து
அரைவாழ்வில் உயிர் அணைந்தீர்கள் – அப்பா

விண்ணகத்தில் நீங்கள் தெய்வம்
வீட்டிலே அம்மா தெய்வம்
நலமாக நம்முடனே அவர்
நீடூழி வாழ உங்களிடம் வேண்டுகின்றோம்.

பாச மைந்தர் நாங்கள் – உங்கள்
ஆசைக் கனவுகளை
நனவாக்கிட உங்கள்
ஆசிகளை வேண்டுகின்றோம்.

உங்கள் கனவுகள் எல்லாம்
நனவாகும் வேளையிலே
எம்மருகில் நீங்களில்லை
என்றாலும் வானிருந்து வாழ்த்துவீர்கள்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*15, பேரின்பநாயகம் வீதி,*
*கச்சேரியடி,*
*யாழ்ப்பாணம்.* (46993)(42-11-19)

உங்கள் பிரிவால் துயருறும்
**மனைவி, பிள்ளைகள்.**

## மன்னாரில் கல்வியியற் கல்லூரி அமைக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,
பெப்.19

மன்னார் மாவட்டத்தில் தேசியக் கல்வியற் கல்லூரி ஒன்றினை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மன்னார் மாவட்ட ஆயர் அலுவலகம் கல்வி அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தக் கோரிக்கை தொடர்பாக கல்வி அமைச்சிடம் மன்னார் ஆயர் மகஜர் ஒன்றினை கையளித்துள்ளார்.

கல்வியியற்கல்லூரி நிறுவுவதற்கான காணிகளை தாம் வழங்கத் தயாராக இருக்கிறேன் என்றும் ஆயர் தெரிவித்துள்ளார். (3-7)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்: 25.06.1925
மறைவு: 22.01. 2006

அமரர்
**வேலுப்பிள்ளை தாமோதரம்பிள்ளை**

அன்போடு ஆதரித்து அரவணைத்த ஐயாவே!
பண்போடு வாழ்ந்து மறைந்த ஐயாவே!
இன்றோடு முப்பத்தொரு நாள்களானாலும் நினைவுகள்
ஒன்றோடுஒன்று நிலைத்தே இருக்கும்.

*இன்று (21.02.2006) செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய கிரியைகளிலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள், அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

"முருகன் அகம்"
சில்லாலை மேற்கு,பண்டத்தரிப்பு.

மனைவி, குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனர்வாழ்வுக் கழக உறுப்பினர்களை விடுவிக்க ஜனாதிபதி உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்

## வவுனியா அரச சார்பற்ற நிறுவனங்கள் கோரிக்கை

வவுனியா,பெப்.21

தமிழர் புனர்வாழ்வுக் கழக ஊழியர்கள் ஐவர் கடத்தப்பட்டமை தொடர்பாக உடனடியாகத் தலையிட்டு ஐவரையும் விடுவிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் வவுனியா மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியம் கேட்டிருக்கின்றது.

இது குறித்து அந்த நிறுவனம் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வறுமை, போர், ஆழிப்பேரலை போன்ற அனர்த்தங்களால் பாதிப்படைந்த மக்களுக்கு தேவையான பல விடயங்களை இன்றைய காலகட்டத்தில் செயற்படுத்தி வருவதில் அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்கு மிக முக்கியமானதாகும்.

இச்சந்தர்ப்பத்தில் இலங்கை அரசின் சட்ட திட்டங்களுக்கு அமைவாக பதிவு செய்யப்பட்டு, சட்ட ரீதியாக செயற்பட்டு வருகின்ற அரசசார்பற்ற நிறுவனங்களில் ஒன்றான தமிழர் புனர்வாழ்வுக் கழக உறுப்பினர்களின் கடமைகளைச் செய்யவிடாது தடுத்தல் மிகவும் வேதனைக்குரிய விடயமாகும். தற்போது இவர்களைப் பற்றிய எந்தத் தகவலையும் பெறமுடியவில்லை.

வவுனியா மாவட்டத்தில் கடமைபுரிகின்ற அனைத்து நிறுவனங்களையும் இணைத்து ஒரு காத்திரமான அபிவிருத்தி வேலைகளைச் செய்து வருபவர்கள் என்ற அடிப்படையில் எமது அங்கத்துவ நிறுவனத்தின் ஊழியர்கள் கடத்தப்பட்டதை நாம் கண்டிப்பதோடு, இவ்விடயத்தை தங்களது மேலான கவனத்திற்குக் கொண்டு வருகின்றோம்.

இலங்கையின் அதியுயர் பீடத்திலுள்ள நீங்கள் இவ்விடயத்தில் உடனடியாகத் தலையிட்டு இவ் ஐவரின் விடுதலைக்கு வழி சமைக்குமாறு வவுனியா அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றிய சார்பில் கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது.

(த-164)

# வள்ளிபுனம் வித்தியாலய விளையாட்டுப் போட்டி.

புதுக்குடியிருப்பு,பெப்.21

புதுக்குடியிருப்பு பிரதேசத்திலுள்ள வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலய மேல் பிரிவு இல்லவிளையாட்டு விழா கடந்த 15ஆம் திகதி பாடசாலை முதல்வர் செ.ரவீந்திரராஸ் தலைமையில் பி.ப.2 மணிக்கு நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம அதிதிகள், பாரதி சிறுவர் இல்ல மாணவிகளின் 'பாண்ட்' வாத்திய இசையுடன் அழைத்து வரப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகின.

மங்கள விளக்கினை முதன்மை விருந்தினர் முல்லை வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியத்திரனம் ஏற்றி வைக்க தமிழீழ தேசியக் கொடியினை வள்ளிபுனம் அரசியல் துறைப் பிரதேசப் பொறுப்பாளர் செ.கலைச்செல்வன் ஏற்றிவைத்தார்.

விளையாட்டு நிகழ்வினை - வலயக் கல்விப் பணிப்பாளர் ஆசிகூறி ஆரம்பித்து வைத்தார்.

(த-352)

# நன்னீர் மீன்பிடித் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தத் திட்டம்

## வள்ளங்கள், உபகரணங்கள் அன்பளிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள நீர்ப்பாசனக் குளங்களில் நன்னீர் மீன்பிடியை மேற்கொண்டுவரும் மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

பசுமைப் புரட்சிக்கான நிறுவனத்தின் ஒழுங்கமைப்பில் ஐ.சி.ஆர்.சி. நிறுவனத்தின் நிதியுதவியுடன் மீன்பிடி வள்ளங்கள், வலைகள் மற்றும் அவற்றுக்கான ஏனைய உபகரணங்கள் வழங்கப்படுகின்றன.

முல்லைத்தீவு, தண்ணிமுறிப்பு நன்னீர் மீன்பிடிச் சங்கத்தைச் சேர்ந்த 100 பயனாளிகளுக்கு 50 மீன்பிடி வள்ளங்கள் மற்றும் அவற்றுக்கான உபகரணங்கள் வழங்கப்பட்டன. முத்தையன் கட்டு, விசுவமடு, உடையார்கட்டு சங்கங்களைச் சேர்ந்த தலா 20 பயனாளிகளுக்கும் வவுனிக்குளம் சங்கத்தைச் சேர்ந்த 40 பயனாளிகளுக்கும் இந்த உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வறுமைக்கோட்டின் கீழ் வசிக்கும் நன்னீர் மீன்பிடித் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு இந்த உதவிகள் வழிசெய்யும் என்றும் கூறப்பட்டது. (த-352)

# துணுக்காய் வலயப் பாடசாலைகளுக்கு 'நிகொட் II' திட்டத்தின் கீழ் கட்டடங்கள்

புதுக்குடியிருப்பு,பெப்.21

முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய் கல்வி வலயத்தில் உள்ள மல்லாவி மத்திய கல்லூரி, மாங்குளம் மகா வித்தியாலயம், பாலிநகர் மகாவித்தியாலயம் ஆகிய மூன்று பாடசாலைகளுக்கு 2 மாடிக் கட்டடங்கள் அமைக்கப்படவுள்ளன.




'நிகொட் II' திட்டத்தின் கீழ் ஒவ்வொன்றும் சுமார் 6 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளது.

அத்துடன், இந்தத் திட்டத்தில் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்திற்கும் பாண்டியன்குளம் மகாவித்தியாலயத்திற்கும் விஞ்ஞான ஆய்வுகூடங்கள் அமைக்கப்படவுள்ளன. அதற்காக சுமார் 56 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

துணுக்காய் வலயப் பாடசாலைகள் யுத்தத்தினால் பெருமளவில் சேதமடைந்தமை கடந்த காலங்களில் யாவரும் அறிந்ததே.

இப்போதும் பல பாடசாலைகள் எந்தவித அடிப்படை வசதிகளும் இன்றி இயங்கி வருகின்றன.

(த-353)

# முல்லைத்தீவு வலய மாணவர்களின் சுகாதாரத்தை மேம்படுத்த ஏற்பாடு

புதுக்குடியிருப்பு. பெப்.21

முல்லைத்தீவு வலயப் பாடசாலை மாணவர்களிடையே சுகாதாரக் கல்வியை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முல்லைத்தீவு கல்வி வலயமும் யுனிசெவ் நிறுவனமும் இணைந்து இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றன.

இதற்கான செயற்றிட்டம் தயாரிக்கும் செயலமர்வொன்று கடந்த 10 ஆம் திகதி புதுக்குடியிருப்பு மத்தியகல்லூரியில் நடைபெற்றது.

இச் செயலமர்வில் முல்லைத்தீவு வலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் பொ.பேரின்பநாயகம், உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் ச.மைக்கல் திலகராசா உட்பட 'யுனிசெவ்' பிரதிநிதிகளும் பாடசாலை அதிபர்களும் கலந்துகொண்டனர்.

இதில் இச்செயற்றிட்டம் தொடர்பாக ஆராயப்பட்டதுடன் சுகாதாரக் கல்வியை மேம்படுத்துவதை மையமாகக் கொண்டு பகுப்பாய்வுகளும் செய்யப்பட்டன.(த-353-203)



ஸ்கந்தபுரம் - கோணாவில் வீதி கடந்த மழைகாலத்தில் சேதமடைந்தது.

இவ்வீதி இதுவரை சீர் செய்யப்படாமையால் பயணிகள் அருகிலுள்ள வயல் ஊடாகவே போக்குவரத்துச் செய்ய வேண்டி உள்ளதாக விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரவில் இவ்வீதியால் பயணிக்கின்ற பலர் இந்தப் பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளாகிவருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. நடுவீதியில் குளம் போன்று அமைந்திருக்கின்ற பள்ளத்தையே இங்கு காண்கிறீர்கள்.

(படம்: வெள்ளாங்குளம் செய்தியாளர்)

# இலவசக் கணனிப் பயிற்சி வகுப்பு

புதுக்குடியிருப்பு,பெப்.21

முல்லைத்தீவு மாவட்ட பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தினரால் ஐ.எல்.ஓ.நிறுவன அனுசரணையுடன் இலவசக் கணனிப்பயிற்சி வகுப்பு ஒன்று நடத்தப்பட்டு வருகின்றது.

முதற்கட்டப் பயிற்சிகள் ஏற்கனவே முடிவடைந்த நிலையில் அடுத்த கட்டப் பயிற்சிகள் கடந்தமாதம் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைய வளாகத்தில் இந்தப் பயிற்சி நடத்தப்பட்டு வருகின்றது.

பெண்கள் அதிகமாக இந்தப் பயிற்சி நெறியில் இணைந்து தொழில் வாய்ப்பைத் தேடிக்கொள்ளக்கூடியதாக உள்ளது.

முதலாவது தொகுதியில் பயிற்சி பெற்ற மாணவர்களில் பெரும்பாலானவர்கள் தற்பொழுது பல்வேறு அலுவலகங்களில் கடமை புரிந்து வருகின்றனர்.

இந்த மாவட்டத்தில் மின்சார வசதி போதுமான அளவில் ஏற்படுத்திக் கொடுக்கப்படாமையால் கணனிப் பயிற்சிகளை குறிப்பிட்டளவு நேரத்திற்கே வழங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் -

மின்சார வசதி போதியளவு கிடைக்குமாயின் இன்னும் அதிகமானவர்களுக்கு பயிற்சிகள் வழங்கமுடியுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-353-203)

# ஆழிப்பேரலையால் அழிந்த பகுதிகளை மீளக்கட்டியெழுப்ப ரூ.308 மில்லியன் நிதி

புதுக்குடியிருப்பு,பெப்.21

- முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக்கட்டியெழுப்பும் திட்டத்தின் கீழ் 308 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு அரச அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

இந்த நிதி மூலம் மாவட்ட கடற்றொழில் அபிவிருத்தி அலுவலகம், மாவட்ட மிருக வைத்திய அதிகாரி அலுவலகம், அளம்பில் கமநல சேவை நிலையம் என்பன மீள அமைக்கப்படவுள்ளதுடன் கரையோர வீதிகளும் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மாவட்ட கடற்றொழில் அபிவிருத்தி அலுவலகத்திற்கும் அதன் விடுதிக்கும் சுமார் 92 மில்லியன் ரூபாவும் மிருக வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு 44 மில்லியன் ரூபாவும் அளம்பில் கமநல சேவை நிலையத்திற்கு 62 மில்லியன் ரூபாவும் வீதி திருத்தத்திற்கு 110 மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் -

இவற்றுக்கான கேள்வி அறிவித்தல்கள் விரைவில் கோரப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆழிப்பேரலையால் முல்லைத்தீவு மாவட்டத்தில் இயங்கி வந்த அரச அலுவலகங்கள் யாவும் முற்றாக அழிவடைந்தமை குறிப்பிடத்தக்கது.

(த-353-203)



வடக்கு - கிழக்கு கரையோர சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்கள் தொடர்பான தேவைப் பகுப்பாய்வுக் கலந்துரையாடல் கடந்த 16ஆம் திகதி ஊரியான் பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் பொருண்மிய மதியுரையக திட்ட இணைப்பாளர் டாக்டர் மனோகரன் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: கிளிநொச்சி செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மங்களவின் குத்துக்கரணங்கள்

தமிழில்: விபெல்ஸி

**வெளிநாட்டமைச்சர் மங்கள சமரவீர முன்னுக்குப் பின் முரணாகப் பேசுபவர்; கொள்கையற்றவர் என எதிர்க்கட்சியினர் கூறவில்லை. அவரே தனது பேச்சுகள், நடவடிக்கைகள் மூலம் நிரூபித்து வருகிறார். அவரது பேச்சும் நடவடிக்கைகளும் பல விடயங்களில் இவ்வாறே அமைந்து வருகின்றன. அமெரிக்கா குறித்த மங்களவின் அணுகுமுறை இதற்கு மற்றுமோர் எடுத்துக் காட்டாகும். இதுகுறித்து இக்கட்டுரை ஆராய்கிறது. கபில புஞ்சி மான்னகே எழுதி 'இருதின' வார இதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

'ஒரு சமயம் ருசியாக அமையும் பானம், மற்றொரு சமயம் நஞ்சாக அமைவது போல'... என்ற பழமொழி இந்த நாட்டின் அரசியல் வரலாற்றைப் புரட்டிப் பார்க்கும்வேளை கசப்பான உண்மையாக மனதில் உறைக்கும். குறிப்பாக எதிரணியில் இயங்கநேரும் வேளையில்-கையில் பொத்திப் பிடித்துக்கொண்டு அடிக்குமேல் அடி அடித்து நோக வைக்கும் விதத்தில் பதவியிலிருக்கும் அரசின் நடவடிக்கைகளைக் குற்றஞ்சாட்டி விமர்சிக்கும் அரசியல்வாதிகள், தாம் அதிகாரத் தரப்பாக மாறும் வேளையில் தம்மை மாசுமறுவற்ற 'தேவதூதர்கள்' போன்று வெளியில் காட்டிக்கொள்ள விழையும் போக்கு இந்த நாட்டின் அரசியலில் அவதானிக்கக்கூடிய கசப்பான சம்பவங்களாக அமைகின்றன. இதற்கு முக்கிய உதாரணமாக இந்த நாட்டின் இனப்பிரச்சினை தொடர்பான தீர்வு முயற்சிகளுக்கு அனுசரணையாளராகச் செயற்பட்டுவரும் நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் தொடர்பான எமது நாட்டு அரசியல்வாதிகளின் நிலைப்பாட்டைக் குறிப்பிட இயலும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நோர்வே நாட்டின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் குறித்து ஐ.ம.சு.கூட்டணி அரசும் ஜே.வி.பி.மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகளும் மேற்கொண்ட விமர்சனங்கள் குறித்து நாட்டுமக்கள் சகலரும் நன்கறிவர்.

ஆனால், ஜனாதிபதித் தேர்தல் முடிவுற்று மூன்று மாதங்கள் முடிவடையும் இன்றைய நிலையிலும் இலங்கையின் சமாதான நடவடிக்கைகள் தொடர்பான அனுசரணை முயற்சிகளை நோர்வே அரசும் அதன் பிரதிநிதி எரிக் சொல்ஹெய்முமே மேற்கொண்டு வருவதை சகலரும் அறிவர். ஆனால், முன்னர் தமது எதிர்ப்பு நிலைப்பாடு தொடர்பான வெட்க உணர்வு காரணமாகவோ என்னவோ இன்று அரசும் எரிக்சொல்ஹெய்ம் விடயத்தில் வாய் மூடி மௌனம் சாதிக்கிறது. அதேபோன்று ஜே.வி.பி. மட்டுமன்றி ஜாதிக ஹெல உறுமய தரப்புகளும் மௌனம் காக்கத் தலைப்பட்டுள்ளன.

இது உதாரணத்துக்குக் குறிப்பிட்டுக் காட்ட முயன்ற ஒரு சம்பவம் மட்டுமே; இவ்விதமான நூற்றுக்கணக்கான சம்பவங்கள் சரியாகக் கணக்கிடுவதானால் அதற்கும் மேலான பல சம்பவங்கள் இந்த நாட்டின் சந்தர்ப்பவாத-வெட்க உணர்வற்ற - அரசியல்வாதிகளால் சுயநல நோக்கில் மேற்கொள்ளப்பட்டிருந்தமையை வரலாற்றுப் பதிவுகள் வெளிப்படுத்தும்.

இன்று இந்த நாட்டின் அரசியலரங்கில் சம்பந்தப்பட்டியங்கும் அரசியல்வாதிகளின் தராதரத்தை-தம்மால் தேர்ந்தெடுக்கப்பட்டு நாடாளுமன்றத்துக்கு அனுப்பிவைக்கப்பட்ட தமது பிரதிநிதிகளின் சுயரூபத்தை -சந்தர்ப்பவாத அரசியல் வாதிகளின் இரட்டைவேட நடத்தைகளை-நாட்டின் பொதுமக்கள் முன்னால் ஒப்புக்கொள்வதற்கான உரிய சந்தர்ப்பமாக இது கருதப்படுகிறது.

நாட்டின் பொருளாதார நிலை, சமாதான நடவடிக்கை ஆகிய இருமுக்கிய சிக்கல்களும் குழப்பியடிக்கப்பட்டு நாசப்படுத்தப்பட்டிருந்த பின்னணியில் 2001ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பதவியிலிருந்த பொ.ஐ.முன்னணி அரசை ஐ.தே.முன்னணி பதவியிலிருந்து கவிழ்த்தது. ஒருபுறம் பொருளாதாரப் பின்னடைவும் மறுபுறம் யுத்த சூழலும் என நாட்டில் தீச்சுவாலை பற்றியெரிந்த அந்த வேளையில், ரணில் விக்கிரமசிங்க அதிகாரத்தைக் கையேற்றார்.

அதையடுத்து, யுத்தசூழலுக்குத் தற்காலிகத் தீர்வு என்ற வகையில் 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி ரணிலின் தலைமையிலான அரசு விடுதலைப் புலிகளுடன் யுத்தநிறுத்த உடன்பாடொன்றை ஏற்படுத்திக் கொள்வதில் வெற்றிகண்டது. அரசின் அத்தகைய முயற்சிக்கு இந்தியா, அமெரிக்கா மற்றும் முக்கிய ஐரோப்பிய நாடுகள் உட்பட சர்வதேச நாடுகள் ஆதரவு தெரிவித்தன.

ஆனால், அந்தவேளையில் எதிர்க்கட்சி வரிசையிலிருந்த விமல்வீரவன்ஸ மற்றும் மங்கள சமரவீர ஆகியோர் இத்தகைய சர்வதேச சமூகத்தின்-குறிப்பாக அமெரிக்காவின் இத்தகைய ஆதரவை "அது இந்த நாட்டின் உள் விவகாரங்களில் அமெரிக்காவின் அனாவசியமற்ற தலையீடு" என்ற வகையிலேயே கருத்து வெளியிட்டு வந்தனர்.

இலங்கையை அமெரிக்காவின் மற்றொரு பிராந்தியமாக உருவாக்க ரணில் விக்கிரமசிங்க அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷுடன் இணைந்து திட்டம் தீட்டுவதாகவும் அன்று விமல் வீரவன்ஸவும் மங்கள சமரவீரவும் குற்றஞ்சாட்டி வந்தனர்.

இலங்கையின் சமாதான நடவடிக்கைகளுக்கு சுமுகமான பின்னணியொன்றை உருவாக்கும்நோக்கில் அந்தவேளையில் அமெரிக்க உதவி ராஜாங்கச் செயலாளராக இருந்த றிச்சார்ட் ஆர்மிடேஜ் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டார். அந்தவேளையில், அவரது விஜயத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்றைய வெளிநாட்டமைச்சர் மங்கள சமரவீர உட்பட எதிர்க்கட்சி வரிசையிலிருந்த பலர் பலவித எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

அந்தவகையில், இந்த நாட்டின் பொதுமக்களது மனங்களில் அமெரிக்க விரோத உணர்வை உருவாக்குவதன் மூலம் ரணில் விக்கிரமசிங்கவின் அரசை அபகீர்த்திக்கு உட்படுத்துவதே இவர்களது அடிப்படை நோக்கமாக அமைந்திருந்தது. இது எதிர்காலப் பொதுத் தேர்தல் வெற்றியை நோக்காகக் கொண்டதொரு திட்டமாகுமென அவ்வேளையில் விமர்சிக்கப்பட்டது.

இருந்தபோதிலும், கடந்த ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவை மாற்றங்களின்போது அதுவரை நாளும் தீவிர அமெரிக்க எதிர்ப்பு அரசியல் வாதியாகத் தம்மை வெளிப்படுத்தி வந்த மங்கள சமரவீர, வெளிநாட்டமைச்சராக நியமிக்கப்பட்டார்.

அவ்விதம் வெளிநாட்டமைச்சராகப் பதவியேற்ற பின்னர் மங்கள சமரவீரவின் அரசியற் செயற்பாடுகள் அமைந்தவிதம் சுவாரஸ்யம் மிக்கதொன்றாகும். இடைநடுவில் தடைப்பட்டுப்போயிருந்த இந்த நாட்டின் சமாதான முயற்சிகள் மீண்டும் ஆரம்பிக்கப்படுவதற்கு அமெரிக்க அரசின் உதவிபெறப்படவிருப்பதாக மங்கள சமரவீர பெருந்தொனியில் கருத்துவெளியிட்டார். அதுமட்டுமல்லாது, தமது முதலாவது வெளிநாட்டுப் பயண நாடுகளிலொன்றாக அமெரிக்காவையும் சேர்த்துக் கொண்டு இலங்கையின் சமாதான நடவடிக்கைகளில் அமெரிக்கா அனுசரணைப் பணி ஆற்ற வேண்டுமெனக் கோரி அமெரிக்க ராஜாங்கச் செயலர் கொன்டலிஸா ரைஸ் அம்மையாரின் முன் மண்டியிட்டார்.

அதேபோன்று ரணில் விக்கிரமசிங்க அரசின் ஆட்சிக்காலத்தில் அமெரிக்காவின் தலைமையில் ஜப்பானில் இடம்பெற்ற இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் இணைத் தலைவர்கள் மாநாட்டில் இந்த நாட்டின் சமாதான முயற்சிகளை முன்னிறுத்தி 45 ஆயிரம் கோடி ரூபா உதவி நிதிபெற ரணிலின் அரசு முயன்றது. அந்தவேளையில், ரணிலின் அந்த முயற்சியை இலங்கையை அமெரிக்காவுக்குத் தாரைவார்த்துக் கொடுக்கும் முயற்சியென மங்கள சமரவீர குழுவினர் விமர்சித்தனர்.


இந்த நாட்டின் அருஞ்சொத்தான சிகிரிய மற்றும் சிங்கராஜவனம் என்பவற்றை அமெரிக்காவுக்கு ரணிலின் அரசு விற்றுவிட இருப்பதாக கூக்குரலிட்டனர்.

ஆனால், தாம் எதிர்க்கட்சியில் செயற்பட்ட வேளை வெளியிட்ட இத்தகைய அமெரிக்க விரோதக் கருத்துக்களை மறந்து மங்கள சமரவீர நாட்டின் வெளியுறவு அமைச்சர் என்ற ரீதியில் இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் அமெரிக்காவின் உதவியைக் கோரி நின்றதை நாட்டுமக்கள் அவதானிக்க நேர்ந்தது.

இந்த நாட்டின் சமாதான முயற்சிகளுக்கு சர்வதேச சமூகத்தின் ஆதரவு அவசியம் என்பதில் இருவித கருத்தேதும் கிடையாது. சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லவும் -சமாதானப் பேச்சுகளில் விடுதலைப் புலிகளைப் பங்குகொள்ள வைப்பதற்கும் -சமாதான முயற்சிகளுக்கு இறுதித்தீர்வொன்றை எட்டுவதற்கும் -சர்வதேச சமூகத்தின் ஆதரவும் ஒத்துழைப்பும் அவசியமானதொன்றே.

தற்போது பதவியிலிருக்கும்போது மங்கள சமரவீரவின் மூளை இயங்கும் அளவில் ஒரு சிறு அளவாவது அவர் எதிர்க்கட்சி வரிசையில் இருந்தபோது இயங்காதிருந்தமையே பிரச்சினைக்குரிய விடயமாகும். பதவியிலிருக்கும் இந்தவேளையில் தேவைப்படும் அமெரிக்காவின் உதவி அன்று எதிர்க்கட்சி வரிசையில் இருந்தவேளையில் மங்கள சமரவீரவுக்கு அரசியல் ஆயுதமாகப் பயன்பட்டதே பிரச்சினைக்குரிய விடயமாகும்.





இவ்விதம் மங்கள சமரவீர அமெரிக்கா குறித்து ஓரிரு தடவை மாத்திரம் குற்றம் சுமத்தினார் எனக் கொள்ள இயலாது.இந்தநாட்டின் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவேண்டிய கால எல்லை குறித்த கருத்துமுரண்பாடுகள் உச்சக்கட்டத்திலிருந்த வேளையில் கூட மங்கள சமரவீர அமெரிக்கா மட்டுமன்றி பிரிட்டன் உட்பட்ட மேற்குலக நாடுகள் பலவற்றின் மீதும் கடுமையான குற்றச்சாட்டைச் சுமத்திக் கருத்து வெளியிட்டு வந்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் கடந்த ஆண்டின் இறுதியிலேயே நடத்தப்பட வேண்டுமென சுமார் 60 நாடு கள் அங்கம் வகிக்கும் சர்வ தேச ஜனநாயக நாடுகளின் சங்கம் ஒருமனதாகத் தீர்மானித்திருந்தது. (இதில் ஆசிய பசுபிக் பிராந்திய ஜனநாயக நாடுகள் சங்கத்தின் தலைவராக ரணில் விக்கிரமசிங்க அந்தவேளையில் பதவி வகித்து வந்தார்.

அந்தத் தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக் கும் வகையில் இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினையில் தலையிடவும் -அரசமைப்பு விதிகளுக்கு மாறாகச் செயற்படுமாறு அழுத்தம் அளிக்கவும் -சர்வதேச ஜனநாயக நாடுகள் சங்கத்துக்கு எந்தவித உரிமையும் கிடையாதென அவ்வேளையில் மங்கள சமரவீர அறிக்கை வெளியிட்டிருந்தார்.

அதுமட்டுமன்றி, அத்தகைய ஜனநாயக விரோத ஆலோசனையைத் தெரிவித்தமைக்காக இலங்கை அரசிடமும் நாட்டு மக்களிடமும் அச்சங்கம் மன்னிப்புக் கோரவேண்டுமெனவும் அவர் தெரிவித்திருந்தார். அன்று அவ்வித இறுமாப்புடன் கருத்து வெளியிட்ட மங்கள சமரவீர, இன்று அமெரிக்காவின் உதவிகோரி அமெரிக்காவின் பின்னால் அலைவதை ஒருவகையில் விதியின் விளையாட்டு எனவே கருதஇயலும்.

மங்கள சமரவீரவின் வெளியில் விரோதம் உள்ளுக்குள் நட்பு என்ற விதத்திலான இந்த அமெரிக்கா குறித்த கொள்கை நிலைப்பாடு மீண்டுமொரு தடவை மிக அண்மையில் அம்பலத்தில் அரங்கேறியது.

அணுஆயுதத் தயாரிப்புக்கு எதிராக ஈரான் மீது தடை விதிக்கப்படவேண்டுமென ஐ.நா. பொதுச் சபையின் பாதுகாப்புக் குழுவில் அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்துக்கு இலங்கை ஆதரவாக வாக்களித்த சம்பவம் காரணமாகவே மங்களவின் இந்த இரட்டைவேட நடிப்பு வெளிவந்துள்ளது.

அமெரிக்கா ஈராக் நாட்டை ஆக்கிரமிப்பதற்குப் பல ஆண்டுகள் முன்னதாகவே அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையிலான பனிப் போர் ஆரம்பமாகியிருந்தது.

ஈரான் அணுஆயுதத் தயாரிப்பில் ஈடுபடுவதாகக் குற்றஞ்சாட்டியே அமெரிக்கா இந்தப் பனிப்போரை ஆரம்பித்திருந்தது.

ஆயினும், அமெரிக்காவின் அந்தக் குற்றச்சாட்டை ஈரான் மறுத்ததோடு, மின்சாரம் தயாரிப்பதற்காகவே அணுத் தயாரிப்பில் ஈடுபடுவதாகப் பதிலளித்திருந்தது. இதனால், ஈரானுக்கு எதிராகத் தடைவிதிக்க அமெரிக்கா முயன்றபோதிலும் அதற்கு ஐ.நா.சபையின் பாதுகாப்புக் குழுவின் அனுமதி பெறப்பட வேண்டியிருந்தது.

ஈரான் பலகாலமாகவே இலங்கையுடன் நெருங் கிய உறவைப் பேணி வந்ததொரு நாடாகும். முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் ஆட்சிக் காலத்தில் இலங்கைக் பாதுகாப்புப் படையினருக்கான ஆயுதங்கள் ஈரானிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

இந்த நாட்டின் எரிபொருள் தேவையின் குறிப்பிடத்தக்கதொரு அளவு எரிபொருள் ஈரானிடமிருந்தே கொள்வனவு செய்யப்படுகின்றது. இவ்விதம் பல வழிகளில் இலங்கைக்கு உதவிவரும் ஈரான் நாட்டின் மீது அமெரிக்கா பிரயோகிக்கும் அழுத்தத்துக்கு ஆதரவாக இலங்கை வாக்களித்துள்ளது. அமெரிக்கா இலங்கைக்கு வழங்கிவரும் அடிப்படைத் தேவைகளுக்கான உதவிகள் மற்றும் சமாதான நடவடிக்கைகளுக்கான உதவிகள் என்பவற்றால் இலங்கை ஒருபோதும் அமெரிக்காவின் விருப்பத்துக்கு மாறாகச் செயற்பட முடியாதென ஐ.நா.சபையின் பாதுகாப்புக் குழுவில் அமெரிக்கா ஈரானுக்கு எதிராகக் கொண்டு வந்த தடை உத்தரவுப் பிரேரணைக்கு ஆதரவாக இலங்கை வாக்களித்தமைக்கான காரணம் என மங்கள சமரவீர விளக்கம் அளித்துள்ளார்.

தற்போது இவ்விதம் அமெரிக்காவுக்கு வக்காலத்து வாங்கும் வகையில் ஆதரவு தெரிவித்துக் கருத்து வெளியிடும் இதே மங்கள சமரவீர 2003 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில் இதற்கு முற்றிலும் மாறானதொரு கருத்தை-முற்றிலும் அமெரிக்க அரசுக்கு எதிரான வகையில் கருத்தை வெளியிட்டிருந்தார். இதேபோன்று அணுஆயுதங்களைக் கொண்டிருப்பதாலே ஈராக் மீது குற்றம் சுமத்தி அமெரிக்கா ஈராக்கை ஆக்கிரமித்தவேளையிலேயே மங்கள சமரவீர இத்தகைய தகிடுதத்தொம் கருத்தை வெளியிட்ட சம்பவம் இடம்பெற்றது.

அந்தவேளையில் நாட்டின் பிரதமராகப் பதவிவகித்த ரணில் விக்கிரமசிங்க ஐ.நா. சபையில் ஆற்றிய உரை குறித்து விமர்சித்துக் கருத்து வெளியிட்ட மங்கள சமரவீர ஈராக்கை அமெரிக்கா ஆக்கிரமித்தமை குறித்துக் கடுமையாகக் குற்றஞ்சாட்டியிருந்தார்.

அமெரிக்காவில் மட்டுமல்லாது ஐரோப்பா மற்றும் ஏனைய பல நாடுகளிலும் ஈராக்கில் அமெரிக்காவின் ஆக்கிரமிப்பைக் கடுமையாக எதிர்க்கும் நிலையில் இலங்கைப் பிரதமரின் உரை இலங்கை மக்களின் பொது அபிப்பிராயத்தை முற்றுமுழுதாகப் புறக்கணிக்கும் வகையில் அமைந்துள்ளது. தமது தலைவரான ஜோர்ஜ் புஷ் ஈராக் நாட்டின் மீது போர் தொடுத்து அதனை ஆக்கிரமித்தமையை நியாயப்படுத்துவதாகப் பிரதமரின் (ரணிலின்) உரை அமைந்துள்ளது.

அன்று ஜனாதிபதி புஷ் ஈராக் நாட்டை ஆக்கிரமித்த வேளையில், எதிர்க்கட்சி வரிசையில் இருந்து கொண்டு மேற்கண்ட விதத்தில் விமர்சனம் மேற்கொண்ட மங்கள சமரவீர, இன்று அரச தரப்பில் இடம்பிடித்துக்கொண்டுள்ள நிலையில் முன்னுக்குப் பின் முரணான - முற்றிலும் மாறுபாடான- கருத்தை வெளிப்படுத்தியுள்ளார். இன்று புஷ் ஈரானை ஆக்கிரமிக்க மேற்கொள்ளும் முயற்சி மங்கள சமரவீரவுக்கு நியாயமானதொன்றாகத் தோன்றுகின்றது. இந்நாட்டின் இன்றைய வெளியுறவு அமைச்சரின் ராஜதந்திர செயற்பாட்டின் இலட்சணம் இதுவே.

அதேபோன்று அன்று கசப்பான பானம் போன்றிருந்த அமெரிக்க உறவு இன்று மங்கள சமரவீர மற்றும் அவரது குழுவினருக்குச் சுவையான பானம் போன்றாகியுள்ளது.

அந்தவகையில், அன்று அமெரிக்கா ஈராக்கை ஆக்கிரமித்த வேளையில் அமெரிக்கா மீது நிந்தாஸ்துதி பாடிய ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சியினர் ஈரான் தொடர்பான பிரச்சினையில் இன்று வாய்மூடி மௌனம் சாதிக்கின்றனர். இது இலங்கையின் வழமையான அரசியல் பாணியே என்பதைத் தவிர வேறெதனைக் கூறஇயலும். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி.மு.க. கூட்டணியில் ம.தி.மு.க. தொடரும்!

## வைகோ நேற்று திட்டவட்டமாக அறிவிப்பு

சென்னை,பெப்.21

தி.மு.க. கூட்டணியில் ம்.தி.மு.க. தொடர்ந்து நீடிக்கிறது என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அறிவித்திருக்கிறார். தி.மு.க. கூட்டணியில் ம.தி.மு.க. இருக்குமா அல்லது இருக்காதா என்று கடந்த சில நாள்களாக இருந்து வந்த சந்தேகங்கள் இதன் மூலம் முடிவுக்கு வந்துள்ளது.

தி.மு.க. கூட்டணி வெற்றிக்குப் பாடுபடப்போவதாக வைகோ நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தி.மு.க. தலைவரும் அக்கட்சியின் தொண்டர்களும் மனம் காயப்படும் வகையில் சொல்லப்பட்ட கருத்துகளுக்காக அவர் அந்த அறிக்கையில் வருத்தம் தெரிவித்துள்ளார்.

தொகுதிப் பங்கீடு குறித்துப் பூர்வாங்கமாகப் பேசிவிட்ட நிலையில் கட்சி நிர்வாகிகளுடனும் மாவட்டச் செயலாளர்களுடனும் ஆலோசனை நடத்தி வருகிறோம் என்று அந்த அறிக்கையில் வைகோ தெரிவித்துள்ளார்.

*(முன்னர் வந்த செய்தி 'இந்தியச் செய்திகள்' பக்கத்தில் பிரசுரமாகி உள்ளது)* (ஐ)



## குறுகிய தொலைவு ஏவுகணையை பாகிஸ்தான் சோதித்தது

குறுகிய தொலைவுக்கு அணுகுண்டை எடுத்துச்சென்று வீசும் வல்லமை வாய்ந்த ஏவுகணையைப் பாகிஸ்தான் ஞாயிற்றுக் கிழமை சோதித்தது. 'ஹதாப் அப்தலி' என்பது அதன் பெயர். 200 கிலோமீற்றர் தொலைவு வரை பறந்து சென்று அணுகுண்டை ஏவக் கூடியது இந்த ஏவுகணை.

1996ஆம் ஆண்டே இது சோதிக்கப்பட்டு இராணுவத்தில் பயன்படுத்த ஏற்றது என்று சான்று கூறப்பட்டுவிட்டது. அதன் பிறகு இதில் சிற்சில மாறுதல்கள் அவ்வப்போது செய்து இதன் திறன் கூட்டி வரப்படுகிறது என்று பாகிஸ்தான் இராணுவ அதிகாரிகள் இஸ்லாமாபாத்தில் தெரிவித்தனர். சோதனை வெற்றிகரமாக நடத்தப்பட்டதைப் பாராட்டுவதாக முஷாரப்பும், பிரதமர் சௌகத் அஜீஸும் வாழ்த்து தெரிவித்திருக்கின்றனர். (ஐ)

## கருணாநிதியுடன் ராமதாஸ் சந்திப்பு

தி.மு.க. தலைவர் கருணாநிதியை பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுநர் ராமதாஸ் நேற்று அவரது கோபாலபுரம் இல்லத்தில் சந்தித்துப் பேசினார்.

சட்டப்பேரவைத் தேர்தலில் பா.ம.கவுக்கு ஒதுக்கப்படும் இடங்கள் குறித்தும் திருமாவளவன் தலைமையிலான விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பைத் தி.மு.க. கூட்டணியில் சேர்ப்பது குறித்தும் இருவரும் ஆலோசனை நடத்தினார்.

சுமார் ஒரு மணிநேரத்திற்கும் மேலாக நடைபெற்ற ராமதாஸின் இச்சந்திப்பின் போது பா.ம.க. தலைவர் ஜி.கே.மணி, முன்னாள் மத்திய அமைச்சர் ஏ.கே.மூர்த்தி ஆகியோர் உடனிருந்தனர். (ஐ)

உலக அரங்கில்

## இராணுவ இணையத் தளத்தில் ஒஸாமா பின்லேடனின் குரல்!



கெய்ரோ, பெப்.21

அல்கெய்டா தலைவர் ஒஸாமா பின்லேடனின் குரல் என்று கூறப்படும் 'ஓடியோ நாடா' ஒன்று இராணுவ இணையத்தளம் ஒன்றில் வெளியிடப்பட்டுள்ளது. ஒஸாமா பின்லேடன் தன்னை ஒருபோதும் உயிருடன் பிடிக்கமுடியாதென உறுதியாக இந்த குரல் நாடாவில் தெரிவித்திருப்பதுடன், பதவியிலிருந்து நீக்கப்பட்ட சர்வாதிகாரி சதாம் ஹுசேனின் நடைமுறைகளையே அமெரிக்க இராணுவமும் கடைப்பிடிப்பதாகக் குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

இது ஜனவரி 9ஆம் திகதி 'அல்ஜெஸீரா' தொலைக்காட்சியில் வெளியிடப்பட்டிருந்த ஒலிபரப்பின் முழுமையான பகுதியாக இருக்கவேண்டும் என்று கருதப்படுகின்றது. அந்த ஒளிபரப்பில் அமெரிக்காவுடன் போர்நிறுத்தம் ஒன்றுக்கு தாம் ஆயத்தமாகவிருப்பதாக அறிவித்த அதேவேளை, அமெரிக்கா மீது தமது அமைப்பு புதிய தாக்குதல்களைத் தொடரப் போவதாகவும் அறிவித்திருந்தார்.

''நான் சுதந்திரமாக வாழ்வதற்கே சத்தியம் செய்துள்ளேன். இறப்பின் சுவை மிகவும் கசப்பானது என்று நான்கருதினாலும் நான் அவமானப்படுத்தப்பட்டு அல்லது ஏமாற்றப்பட்டு சாவதை விரும்பவில்லை'' என்று பின்லேடன் இந்த ஒலிநாடாவில் தெரிவித்துள்ளார்.

சதாம் ஹுசேனின் நடவடிக்கைகளை அமெரிக்க இராணுவ நடவடிக்கைகளுடன் ஒப்புவமை செய்யும் வகையில் ஒலிநாடாவில் ஒலித்த குரல் பின்வருமாறு கூறியது -

''ஜிகாத் தொடர்ந்தும் பலத்துடன் முன்னெடுக்கப்படுகின்றது. அல்லாவுக்கே எல்லா புகழும் உரித்தாகட்டும். அமெரிக்க இராணுவமும் அதன் முகவர்களும் எடுத்துவரும் கொடூர நடிவடிக்கைகள் எந்த வகையிலும் சதாம் ஹுசேனின் குற்றச்செயல்களுக்கு வித்தியாசமாகக் குறிப்பிடக்கூடியதாய் இல்லை'' (ப)





ஆபிரிக்காவிலும் நைஜீரியாவிலும் பறவைக் காய்ச்சல் வைரஸ் பரவி இருக்கிறது. இதனால், வருமானத்துக்கான பிரதான தொழிலாக கோழிப் பண்ணை நடத்துவோர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அங்கு பண்ணையாளர் ஒருவரை மருத்துவர்கள் பரிசோதிப்பதையும் கிராமப் பெண் ஒருவர் தனது கோழி ஒன்றைக் கொல்வதற்காக எடுத்துச் செல்வதையும் படங்களில் காணலாம். (ஐ)

## முஷாரப்புக்கு சீனாவில் அஞ்சல் தலை

பெய்ஜிங்,பெப்.21

பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஷாரப் சீனாவுக்கு 5 நாள் சுற்றுப்பயணம் மேற்கொள்வதையொட்டி சிறப்பு அஞ்சல் உறை ஞாயிற்றுகிழமை வெளியிடப்பட்டது.

இரு நாடுகளுக்கு இடையில் எப்போதும் நீடித்துவரும் உறவை உணர்த்தும் வகையில் இரு நாடுகளின் தபால் தலைகளும் முஷாரப்பின் கையெழுத்துடன் கூடிய புகைப்படமும் அஞ்சல் உறைமேல் அச்சிடப்பட்டிருக்கிறது.

சீன அதிபர் ஹு ஜின்டாவோவின் அழைப்பின் பேரில் பர்வேஷ் முஷாரப் பயணம் மேற்கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஜேர்மனியிலும் தடுப்பு நடவடிக்கை

லண்டன்,பெப்.21

ஜேர்மனியின் வட பகுதியில் பறவைக் காய்ச்சல் தொற்று பரவியிருப்பது அந்நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. பறவைக் காய்ச்சல் காணப்படும் பால்டிக் கடல் தீவுகளுக்கு விமானத்தில் பறந்து சென்றுள்ள அந்நாட்டு பிரதமர் அஞ்செலா மெர்கெல் இது மிகவும் 'பாரதூரமான' விடயம் என்று வர்ணித்துள்ளார்.

இதைக் கட்டுப்படுத்த தமது அரசு தன் வசமுள்ள எல்லா அதிகாரங்களையும் பயன்படுத்தும் என்று அவர் கூறியுள்ளார்.

பறவைக் காய்ச்சல் மேலும் பரவாமல் தடுக்கவும் நோய் தொற்றாத விதத்தில் வளர்ப்புப் பறவைகளை தனியாகப் பிரித்து வைக்கவும் உதவும் பொருட்டு ஜேர்மன் இராணுவத்தினர் அங்கு அனுப்பப்பட்டு வருகின்றனர். (ப)

## இந்தியாவிலிருந்து இறைச்சி இறக்குமதிக்கு இலங்கை தடை

கொழும்பு, பெப்.21

இந்தியாவில் பறவைக் காய்ச்சல் நோய் தாக்கம் ஏற்பட்டிருப்பதாக செய்திகள் வெளியானதையடுத்து இந்தியக் கோழி இறைச்சி இறக்குமதிக்கு ஸ்ரீலங்கா அரசாங்கம் தடை விதித்துள்ளது.

சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் எஸ்.கே. ஆர்.அமரசேகர இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

மேலும் விலங்குகளைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் அனைத்து உப தயாரிப்பு பொருள்களும் நேற்றுமுன்தினம் முதல் தடை செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

மேற்கு இந்தியாவில் ஆயிரக்கணக்கான கோழிகள் பறவைக் காய்ச்சல் நோய்க்குப் பலியாகி உள்ள நிலையில் ஸ்ரீலங்காவின் உள்ளூர் கோழிப் பண்ணைகளில் பார்வையாளர்களை அனுமதிக்க வேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

பறவைக் காய்ச்சல் பரவாமல் தடுப்பதற்காக இரு தொழில்நுட்பக் குழுக்களை அமைத்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)




## முகம்மது நபிகள் 'கார்ட்டூன்' விவகாரம்: மன்னிப்புக் கோரியது டென்மார்க் நாளிதழ்

டுபாய், பெப்.21

முகம்மது நபிகளின் 'கார்ட்டூனை' வெளியிட்டதற்காக டென்மார்க்கைச் சேர்ந்த பத்திரிகையான 'ஜைலாண்ட்ஸ் - போஸ்டன்' ஞாயிற்றுக்கிழமை மன்னிப்புக் கோரியுள்ளது.

இது தொடர்பாக கொட்டை எழுத்துக்களில் ஒரு பக்க அளவில் மன்னிப்பு கோரும் விளம்பரத்தை அரபு நாடுகளில் வெளியாகும். 'அஷர்க் அல் - அவாசத்' என்னும் நாளிதழில் டென்மார்க் பத்திரிகை வெளியிட்டுள்ளது.

''அந்தப் படங்கள், உலகம் முழுவதும் உள்ள கோடிக்கணக்கான முஸ்லிம்களின் மனத்தைப் புண்படுத்திவிட்டது. நடந்துவிட்ட சம்பவங்களுக்காக ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம். அவ்வாறு நடக்க வேண்டும் என்பது எங்களது எண்ணமில்லை.

''எந்த மதத்தையும் அவமானப்படுத்த வேண்டும் என்பதோ, அவமதிக்க வேண்டும் என்பதோ எங்களது நோக்கமல்ல, நாங்கள் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டுவிட்டோம். அதற்காக மன்னிப்புக் கோருகிறோம். யாரையும் குறிவைத்து அந்தப் படங்களை வெளியிடவில்லை என்பதை வலியுறுத்தித் தெரிவித்துக்கொள்கிறோம். கருத்து வேறுபாட்டை அகற்றுவதற்கு இது உதவும் என நம்புகி றோம்; கடவுள் ஆசீர்வதிக்கட்டும் என்று அந்த விளம்பரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் இறுதியில் ' ஜைலாண்டஸ் போஸ்டன்' நாளிதழின் தலைமை ஆசிரியர் கார்ஸ்ட் டன் ஜஸ்ட் கையொப்பம் இட்டுள்ளார். 'ஜைலாண்டஸ் போஸ்டன்' இதழின் இணையப் பக்கத்திலும் அதே மன்னிப்புக் கடிதம் அரபு மொழியில் வெளி யிடப்பட் டுள்ளது.

கடந்த செப்ரெம்பரில் அந்த 'கார்ட்டூன்கள்' முதன்முதலாக டென்மார்க் நாட்டு நாளிதழான 'ஜைலாண்ட்ஸ் போஸ்டனி'ல் பிர சுரிக்கப்பட்டன. அதைத் தொடர்ந்து ஐரோப்பிய நாடுகளில் இருந்து வெளியாகும் பல்வேறு இதழ்களும் அதை மறுபிரசுரம் செய்தன. அதைத் தொடர்ந்து உலகம் முழுவதும் உள்ள முஸ்லிம்கள் அதற்கு எதிராகப் போராட்டத்தில் இறங்கினர். லிபியா, நைஜீரியா, பாகிஸ்தான் உட்பட பல்வேறு நாடுகளில் நடந்த போராட்டங்களில் இதுவரை 32 பேர் பலியாகி உள்ளனர். இந்நிலையில், அந்த கார்ட்டூன்களை வெளியிட்டதற்காக மன்னிப்புக் கோரியுள்ளது அந்த டென்மார்க் நாளிதழ். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வியியற் கல்லூரிகளுக்கு

# ஆங்கில பாடத்துக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம்,பெப்.21

தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு ஆங்கிலப் பாடநெறிக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கென நடத்தப்பட்ட பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கான நேர்முகப் பரீட்சை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் எதிர்வரும் 27ஆம் திகதி காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:-

எஸ்.றஜீகலா (மிருசுவில்), எஸ்.றோசாமேரி (எழுதுமட்டுவாழ்), ரி.பொன்னம்பலநாதன் (நெல்லி.வடக்கு), பி.சுமன் (கட்டைப்பிராய்), கே.றகீதா (ஏழாலை மேற்கு), ஆர்.றஜனிகா (ஸ்ரேசன் வீதி, யாழ்ப்பாணம்), கே.கார்த்திகா (கலட்டி), சிபோஜினி (சில்லாலை கிழக்கு), ரி.சோபா (வவுனியா), வை.கிசானந் (அரியாலை), எஸ்.அரியரட்ணம் (புதுக்குடியிருப்பு), வி.ஜனார்த்தனி (வவுனியா), எ.சுயநிதா (இடைக்காடு).

என்.ஐங்கரேசன் (ஆனைக்கோட்டை), எ.எவ்.சுகந்தி (கிளிநொச்சி), எஸ்.ஜதர்னி (வவுனியா), சி.எஸ்.மனோராஜன் (சுண்டுக்குழி), எ.யூட் மரீனா (கண்டி வீதி, யாழ்ப்பாணம்), ரி.சோபியா (நல்லூர்), எம்.மதற்சானி (யோகபுரம்), ஈ.எட்வேட் (சுண்டுக்குழி), ஜே.ஆர்.ரவீந்திரகுமார் (உரும்பிராய் தெற்கு), ஐ.ஐ.சர்மிளா (யாழ்ப்பாணம்), எம்.இமையந்தி (அச்சுவேலி), எஸ்.கஜாலினி (தண்ணீரூற்று-முள்ளியவளை), வி.இந்துசா (சாவகச்சேரி), ஏ.தர்சன் (பருத்தித்துறை), ஜே.சிந்துஜா (யாழ்ப்பாணம்), எஸ்.சிவகரன் (புலோலி).

பி.நிசானி (மானிப்பாய்), ரி.தாரணி (புலோலி), எம்.தங்கராஜா (யாழ்ப்பாணம்), எஸ்.நளினி (உயரப்புலம், ஆனைக்கோட்டை), எஸ்.மேனகா (அளவெட்டி), எவ்.பிரசாத் (கொழும்புத்துறை), ஜீ.விஜயதர்சினி (சண்டிலிப்பாய்), ரி.நாகேந்திரன் (மீசாலை), ஏ.நிரோசினி (யாழ்ப்பாணம்), என்.பிரசாந்தன் (நீர்வேலி), ரி.கௌசலா (சுண்டிக்குழி), என்.அருள்வாணி (சங்கானை), ஜே.ஜெயப்பிரியா (உரும்பிராய்), பி.றூபா (சங்கத்தானை), ஆர்.ஏ.பி.பீரிஸ் (வங்காலை), ஈ.ஆர்.எல். கொன்சேகா (அல்வாய்), பி.கிரிஷா (கொக்குவில்).

கே.கபிலா (வவுனியா), எஸ்.துர்க்காயினி (வவுனியா), எஸ்.ரி.நபியா (தர்மபுரம்), வை.அர்ச்சனா (சாவகச்சேரி), எஸ்.லாவண்யா (வட்டுக்கோட்டை), என்.கல்பனா (வவுனியா), வை.நிருஜா (யாழ்ப்பாணம்), வி.யோகரட்ணம் (சுண்டுக்குழி), கே.அஸ்வினி (ஆனைக்கோட்டை), சி.நிஷாந்தி (திருநெல்வேலி), எஸ்.சுவேதிகா (சங்கரத்தை), எஸ்.விசாலினி (ஆனைப்பந்தி), எம்.சோபனா (கைதடி), வி.சந்துரு (கல்முனை), ரி.கோபி (மூதூர்). (த-14)

# படையினர் இரத்ததானம்

யாழ்ப்பாணம்,பெப்.21

யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கியின் நிர்வாகம் கேட்டுக்கொண்டதற்கமைய 51ஆவது படைப்பிரிவின் இராணுவ அதிகாரிகளும் சிப்பாய்களும் கடந்த சனிக்கிழமை இரத்ததானம் செய்தனர்.

இத்தகவலை பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகத்தின் செய்திக் குறிப்பு தெரிவிக்கின்றது.

அச்செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இரத்த வங்கி, யாழ்.பாதுகாப்பு படை நடவடிக்கை தலைமையகத்தில் கேட்டுக் கொண்டதற்கிணங்க தலைமையத் தளபதியின் ஆலோசனைக்கும் வழிகாட்டலுக்கும் அமைய 51 ஆவது படைப்பிரிவின் கீழுள்ள பிரதேசத்தில் கடமையாற்றும் இராணுவ அதிகாரிகளும் சிப்பாய்களும் இரத்ததானம் மேற்கொண்டனர்.

கடந்த சனிக்கிழமை யாழ்.போதனா வைத்தியசாலையில் இந்த இரத்ததான நிகழ்வு நடைபெற்றது. (த-202)

# மூளாயில் 10 லட்சம் ரூபா செலவில் சிறுவர் பாடசாலைக்குக் கட்டடம்

சுழிபுரம்,பெப்.21

மூளாயில் சிறுவர் பாடசாலைக்கான கட்டடம் ஒன்று 10 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளது.

யாழ். மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா இக்கட்டடத்திற்கான அடிக்கல்லை அண்மையில் நட்டுவைத்தார்.

வலி.மேற்குப் பிரதேச சபைச் செயலாளர் இ.இராஜதுரை இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

புலம்பெயர்ந்து கனடாவில் வசிக்கும் கலாநிதி திருமதி நவசீலன் இதற்கான நிதியைக் கனடாவில் இயங்கும் றீசால்ஸ் கிட்ஸ் நிறுவனத்தின் ஊடாக வழங்கியுள்ளார்.

இந்தப் பாடசாலையை அமைப்பதற்கான காணியை மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர் ஆலய நிர்வாகத்தினர் அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

சிறுவர் கல்விக்கும் பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவனம் இக்கட்டடம் அமைக்கும் வேலைத் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது என மூளாய் முன்பள்ளி இயக்குநர் திருமதி பொன்மலர் இராஜேஸ்வரன் தெரிவித்துள்ளார். (3-24-203)


**வட்டு-சங்கரத்தை விவசாய சம்மேளனம்**

**வருடாந்த பொதுச் சபைக் கூட்டம்-2006**

இடம் : வட்டு.மத்திய கல்லூரி மண்டபம்

காலம் : 25-02-2006 சனிக்கிழமை 10 மணி

க.இராசையா
செயலாளர், வட்டு-சங்கரத்தை,
விவசாய சம்மேளனம்.

(சி/47972)(26.32.11)



**University of Jaffna - Srilanka**

**Diploma in English for Teachers of English Examination 2004/2005**

The above Examination will commence on 27th March 2006. Applications are invited from the candidates for the above Examination.

Duly completed application forms for registration for the above exam shall be submitted to the Head/ELTC on or before 2nd March 2006. Application forms are obtainable from Head/ELTC from 21.02.2006.

Candidates those who have not submitted the in course assessment should submit it to the Head ELTC on or before 28th February 2006.

Registrar,
University of Jaffna.
20.02.2006.

(C/47977)



**31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்**



திருமதி
**மங்களம் செல்லத்துரை**

மலர்வு
12.02.1933

உதிர்வு
22.01.2006

அன்பின் பிறப்பிடமாய்
ஆசையின் உறைவிடமாய்
இல்லத்து அரசியாய் - எமை
ஈன்ற அன்னையே!
ஆறாத் துயர்தனில் - உம்
ஆத்மா சாந்தியடைய
ஆண்டவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

இன்று (21.02.2006) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு பணிவுடன் அழைக்கின்றோம்.

குறிப்பு:
அழைப்பு கிடைக்காதவர்கள் தயவுசெய்து இந்த அழைப்பை ஏற்றுக் கலந்துகொள்ளவும்.

திருமால் இல்லம்,
கோப்பாய் மத்தி, கோப்பாய்.

குடும்பத்தினர்.



**31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்**



அமரர்
**வீரகத்தி ருக்மணி**

தோற்றம் 10.06.1924
மறைவு 22.01.2006

தாயில்லா வாழ்வதனை நினைக்கலாமோ
தெய்வமது தெய்வமான நிலையதனில்
தேறுகிறோம் யாமே.... அம்மா
நெஞ்சம் நெகிழ்ந்து எந்நாளும்
உமை நினைந்துருகின்றோம்.

இன்று (21.02.2006) செவ்வாய்க்கிழமை எமது தெய்வத்தின் 31ஆம் நாள் நினைவிலும் ஆத்மசாந்தி கிரியை யிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

கம்பர்மலை,

- குடும்பத்தினர்.


## மானிப்பாய் சாயி நிலையத்தில் சிவராத்திரி விழா

மானிப்பாய்,பெப்.21

மானிப்பாய் சோதிவேம்படி வீதியிலுள்ள பகவான் ஸ்ரீசத்திய சாயிபாபா நிலையத்தில் மகாசிவராத்திரி வைபவம் எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிறு மாலை 6 மணிமுதல் மறுநாள் அதிகாலை 4மணி வரை இடம்பெறவுள்ளது.

சத்திய சாயி பாடசாலை மாணவர்களின் சமய நிகழ்வுகளும் பெரியோரின் உரைகளும் இடம்பெறவுள்ளன. (த-90)

## இயந்திர பூசை

சுழிபுரம்,பெப்.21

வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலய இயந்திரபூசை எதிர்வரும் 15ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகிறது.

இயந்திர பூசை தினமும் தனியொருவர் உபயமாகத் தொடர்ந்து நாற்பத்தைந்து தினங்கள் நடைபெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து எதிர்வரும் மே மாதம் கும்பாபிஷேகம் நடைபெறும். புதிதாக தென்னிந்திய சிற்பக் கலைஞரால் வடிவமைக்கப்பட்ட அம்பாள் மூல விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டு மண்டலாபிஷேகம் நாற்பத்தைந்து தினங்கள் நடைபெறவுள்ளது. (த-28)

## ஊர்காவற்றுறை தேவாலயத்தில் உறுதிப்பூசுதல் நிகழ்வு

குருநகர்,பெப்.21

ஊர்காவற்றுறை புனித மரியாள் தேவாலயத்தில் எதிர்வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை உறுதிப்பூசுதல் வழங்கும் நிகழ்வு நடைபெறவுள்ளது. யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை இந்நிகழ்வில் கலந்துகொண்டு தெரிவு செய்யப்பட்ட சுமார் ஐம்பது பேருக்கு இத்தேவதிரவிய அனுமானத்தை வழங்குவார். (த-51)

## வியாபார உரிமம் பெறுமாறு அறிவுறுத்து

வலி.தென்மேற்கு,பெப்.21

வலி.தென் மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு பட்டினப் பகுதியிலுள்ள உணவகங்கள், தேநீர்க் கடைகள், பேக்கறிகள் ஆகியன 2006 ஆம் ஆண்டுக்கான வியாபார உரிமத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்றும் இவ்வாறு பெறாத விடத்து சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள் ளது.

இப்பகுதியில் ஐஸ்கிறீம் உற்பத்தி செய்வோர், நல்லெண்ணெய் உற்பத்தி செய்வோர், இனிப்பு, தேன்முறுக்கு வகைகள் உற்பத்தி செய்வோரும் இவ்வருடத்திற்கான வியாபார உரிமத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் பிரதேச சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (த-135)

## சைக்கிள் திருட்டு

வலி.தென்மேற்கு,பெப்.21

நள்ளிரவு வேளையில் பண்டத்தரிப்பு சந்தைக்கு சமீபமாகவுள்ள வீடு ஒன்றில் சுமார் 8 ஆயிரம் ரூபா பெறுமதியான சைக்கிள் ஒன்று திருடப்பட்டுள்ளது. கடந்த 18 ஆம் திகதி சனிக்கிழமை நள்ளிரவு வேளை யில் வீட்டு விறாந்தையில் பூட்டப்பட்ட நிலையில் விடப்பட்டிருந்த சைக்கிளே இவ்வாறு திருடப்பட்டுள்ளது.

வீட்டிலுள்ளோர் சத்தம் கேட்டு திருடனை கலைத்துப் பிடிக்க முயற்சித்த போதிலும் திருடன் பூட்டிய சைக்கிளைத் தூக்கிக் கொண்டு தப்பி ஓடிவிட்டான் என்று தெரிவிக்கப்பட்டது. (த-135)

## குழந்தைகளுக்குத் தடுப்பூசி

வலி.தென்மேற்கு,பெப்.21

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒரு வயதுக்கும் மூன்று வயதுக்கும் இடைப்பட்ட குழந்தைகளுக்கு ஜப்பான் மூளைக்காய்ச்சல் நோய்த் தடுப்பு ஊசி மருந்து போடப்பட்டு வருகின்றது.

இப்பிரிவு அரசினர் வைத்தியசாலைகளிலுள்ள தாய்-சேய் சிகிச்சை நிலையங்களில் பொதுச்சுகாதார பரிசோதகர்கள், குடும்ப நல சுகாதார அலுவலர்கள் ஆகியோரால் கடந்த வாரம் முதல் இந்தத் தடுப்பூசி மருந்து போடப்பட்டு வருவதாக மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை-இப்பிரிவு அரசினர் வைத்தியசாலை தாய்-சேய் சிகிச்சை நிலையங்களுக்குக் கடந்த வாரம் 'திரிபோஷா' சத்துணவு மாப் பக்கற்றுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. (த-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாகம்ஸ் சுன்னாகம்**
விஜய், திரிஷா நடித்த
**ஆதி**
காட்சிநேரம்: பு.நே. 11.00, 3.00.7.00

**ராஜா யாழ்ப்பாணம்**

சிம்பு, ஜோதிகா,பிரகாஷ்ராஜ் நடித்த
**சரவணா**
நேரம்: பு.நே. 10.30, 2.15,மட்டும்
24 முதல் சத்தியராஜ், சிபிராஜ், நமீதா.
**கோவை பிரதர்ஸ்**
பு.நே. 10.30, 1.30,4.30

**நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்**
அக்ஷன் கிங் அர்ஜுன், கஜாலா,
விவேக் நடித்த
**மதராஸி**
புதியநேரம்: 10.00, 1.00, 4.00

**விற்பனைக்கு**
இசுசு எல்வ்(f) 350 42 SRI XXXX
அலுமினியம் FulBody
16 1/2 அடிநீளம்
விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:021 222 3261
S. ஜெகதீஸ்வரன் (47089) (18-34-49)

# முதலாவது பிறந்ததின வாழ்த்து



செல்வி
## அபிராமி உதயகுமார்
*ஹொலண்டில் வசிக்கும் உதயகுமார் - மல்லிகாதேவி தம்பதியரின்*
**செல்வப்புதல்வி**
## அபிராமி

*இன்று(21.02.2006) செவ்வாய்க் கிழமை தனது முதலாவது பிறந்த தினத்தை குதூகலமாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பான அப்பா, அம்மா, சுவிஸில் வசிக்கும் மாமா குலராஜா, அத்தை வசந்தறூபி, மச்சாள்மார்களான யனுசியா, தனுசியா, மச்சான் ஜனுசன், அம்மம்மா பூமணி, சித்திமார்களான ஜெயந்தி, ரஞ்சி, அண்ணாமார்களான சொபன் (லண்டன்), சுரேஸ்கரன்,சுதாகரன், மண்டானில் வசிக்கும் அப்பப்பா அரியகுட்டி, அப்பம்மா, அத்தை புவனேஸ்வரி குடும்பம், சுவிஸில் வசிக்கும் அத்தை பவானி குடும்பம் , பிரான்ஸில் வசிக்கும் அம்மம்மா பசுபதி, அம்மப்பா கந்தசாமி, மாமாமார்களான ராஜகுமார்,பாலகுமார்,நந்தகுமார்,சித்தப்பாமார்களான சிவநேசன் குடும்பம், குலம் குடும்பம், அமிர்தலிங்கம் குடும்பம், மனோகரன் குடும்பம், விஜயரத்தினம் குடும்பம், தாத்தாமார்,அண்ணாமார்,அக்காமார், மச்சாள்மார், மச்சான்மார் மற்றும் உற்றார், உறவினர் ஆகியோர் நோய்நொடியின்றி சகல சௌபாக்கியங்களும்பெற்று, நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.*

**இலந்தைக்காடு,**
**வல்வெட்டித்துறை.** (47093) (18-34-49) **பூமணி (அம்மம்மா).**

# ஓராண்டு நினைவஞ்சலி



அராலியைப் பிறப்பிடமாகவும்
கோண்டாவிலை வதிவிடமாகவும் கொண்ட
அமரர் **சின்னப்பு சுப்பிரமணியம் (ராசு)**
**தோற்றம்** 05.02.1924
**மறைவு** 03.03.2005

கோண்டாவில் கிழக்கு
**திருமதி சுப்பிரமணியம் பவளம்**
**தோற்றம்** 10.05.1926
**மறைவு** 23.09.2004

*மண்ணில் நல்லவண்ணம் வாழ்ந்து எங்களை வாழவைத்தாய்*
*கண்ணில் நீர் வழிந்தோட கணப்பொழுதில் மறைந்து விட்டாய்*
*விண்ணில் அன்னை நாகம்மை வீற்றிருக்க அவளடியில்*
*கண்ணியமாய் வீற்றிருக்க கருணை செய்வாள் நாகம்மை*

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகிறோம். (சீ-47981) (18-34-49)

**உங்கள் பிரிவால் துயருறும்:**
**மகன்மார், மகள்மார், மருமகன்மார், மருமகள்மார், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.**

### முறைசாராக் கற்கை

யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் முறைசாராக் கல்வி கற்கை நெறிகளான கணனி, மனைமுகாமைத்துவம் என்பன ஆரம்பிக்கப்படவுள்ளன என்றும் - அதற்காக விண்ணப்பப்படிவங்களை கல்லூரி அலுவலகத்தில் இன்றுமுதல் பெற்றுக்கொள்ளலாம் என்றும் - கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார். (எ)

### வீதி விபத்தில் பெண் பலி!

பாணந்துறை, பெப், 21

பாணந்துறையில் நேற்று இடம்பெற்ற விபத்தில் பெண்ணொருவர் உயிரிழந்தார்.

பாணந்துறையிலிருந்து களுத்துறை நோக்கி வேகமாகச் சென்று கொண்டிருந்த காரொன்று பாதையை விட்டு விலகி வீதியோரமாக நின்றிருந்த நந்தாவதி பெர்னாண்டோ (வயது 40) என்ற பெண்ணை மோதித் தள்ளியதில் அவர் பலியானார்.

இந்தச் சம்பவத்தையடுத்து குறிப்பிட்ட காரின் சாரதி காரை கைவிட்டுத் தப்பியோடி விட்டார் எனப் பாணந்துறை பொலீஸார் தெரிவித்தனர். அவர்கள் இது தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்திருக்கின்றனர். (எ-க)

### கௌரவிப்பு நிகழ்வு

கோப்பாய், பெப், 21

புத்தூர் ஸ்ரீ சோமஸ் கந்தக் கல்லூரியில் ஆய்வு கூட உதவியாளராகக் கடமையாற்றி அண்மையில் ஓய்வு பெற்ற க.விஸ்வலிங்கத்தின் சேவையைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பாடசாலை அதிபர் வ. ஆறுமுகம் தலைமையில் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (எ-72)

### ஊர்காவற்றுறையில் கட்டாக்காலி நாய் அழிப்பு

யாழ்ப்பாணம், பெப், 21

ஊர்காவற்றுறை பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கட்டாக்காலி நாய்களை பிடித்து அழிக்கும் பணி நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது.

எனவே, அன்றையதினம் வளர்ப்பு நாய்களை கட்டி வைக்குமாறு ஊர்காவற்றுறைப் பிரதேச சபையின் செயலாளர் கேட்டுள்ளார். (எ-13)

# கண்ணீர்க் காணிக்கைகள்

*எமது பாடசாலையின் முன்னாள் ஆசிரியரான*
**திருமதி**
## இராசம்மா செல்லத்துரை
*அவர்களின் திடீர் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

*யாழ். சென். ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்.* (சீ-47982)(18-34-49)
**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழையமாணவர்கள்.**

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 04 - 09 - 1950



இறப்பு 22 - 01 - 2006

**அமரர் சின்னத்தம்பி மயில்வாகனம்**
திதி: 21.02.2006
குடும்பத்தின் கலங்கரை விளக்காய்
வாழ வழி காட்டிய தெய்வமாய்
பண்புக்கோர் சிகரமாய்
பாசத்தின் உறைவிடமாய்
பொறுமையின் திருவுருவாய் திகழ்ந்து
பக்குவமாய் எமைப் பராமரித்து
வேண்டுவன வேண்டியாங்கு ஈந்து
நெறிப்படுத்தி வாழ வைத்து
மீளாத் துயரில் எமைத் தவிக்கவிட்டு
மீளாத் துயில் கொண்ட
எம் அன்புத் தெய்வத்தின் கமலத் திருவடிக்கு
எமது கண்ணீரைக் காணிக்கையாக்குகிறோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*குமாரசாமி வீதி, புத்தூர் கிழக்கு.* (47095) (18-34-49) **குடும்பத்தினர்,**

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சத்தியமூர்த்தி அம்பிகாதேவி

அமரர் மலேசியா சத்திமூர்த்தி அவர்களின் அருமை மனைவியும் சுழிபுரம் மத்தி, கணபதிப்பிள்ளை தம்பதியரின் புத்திரியும் பன்னாலை மாணிக்கம் தம்பதியரின் மருமகளுமான அம்பிகாதேவி அவர்கள் 19.02.2006 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் சுகந்தி, அமரர் நவீந்திரன் ஆகியோரின் அருமைத் தாயும் அமரர் இராமநாதன், அமரர் தங்கராசா, இந்திரராசா (ஓய்வுபெற்ற பிரதி அதிபர், சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி), டாக்டர் சிவராசா, உருக்மணிதேவி அசோகன்(டென்மார்க்) ஆகியோரின் அருமைச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.02.2006) புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொழும்பு ஜெயரட்ண மலர்ச்சாலையில் நடைபெற்று, தகனக்கிரியை பிற்பகல் 2 மணிக்கு கொழும்பு கனத்தை இந்து மயானத்தில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சுழிபுரம் மத்தி, சுழிபுரம். தொ.பே. 011 2366317* (சீ-47980) (18-34-49)
**தகவல்: க.இந்திரராசா.**

## இராமநாதர் சபாபதிப்பிள்ளை

நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட இராமநாதர் சபாபதிப்பிள்ளை அவர்கள் நேற்று(20.02.2006)திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் இராமநாதர் - மீனாட்சிப்பிள்ளை தம்பதியரின் மகனும் கந்தப்பு - மரகதமொழி தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற பார்பதி (செல்லம்) அவர்களின் அன்புக் கணவரும் அமரர் சுப்பிரமணியம், அமரர் கனகசபை, அமரர் குமாரசாமி, அமரர் முருகேசு (மணியம்), அமரர் கந்தையா, அமரர் பராசக்தி, சோமசுந்தரம், காத்திப்பிள்ளை ஆகியோரின் சகோதரரும் அமரர் பரராசசிங்கத்தின் தந்தையும் சாரதாதேவியின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(21.02.2006)செவ்வாய்க்கிழமை பிற்பகல் 5 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நெடுந்தீவு கிழக்கு, கட்டராயன் சல்லி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நெடுந்தீவு கிழக்கு, நெடுந்தீவு.* (47092) (18-34-49)
**தகவல்: டாக்டர் கந்தப்பு மருதையனார் (மைத்துனர்).**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுன்னாகம் றொட்டியாலடிச் சந்திக்கு அண்மையில் நேற்றுமாலை லொறி ஒன்று தடம்புரண்டு தலைகீழாகக் கிடப்பதை முதலிரு படங்களிலும் சம்பவத்தில் படுகாயமடைந்த லொறிச் சாரதியை அடுத்துள்ள படத்திலும் காணலாம். (படங்கள்: பிரசன்னா, நேசன்)

# யார் பேச்சுக்குப் போனாலும் பிரதம நடிகர் பாலசிங்கமே!

## கேணல் ஜயபி பெர்னாண்டோ கருத்து

ஜெனீவாவில் பேச்சுகளுக்கு செல்லும் பிரதிநிதிகள் குறித்து கேணல் ஜயவி பெர்னாண்டோ பின்வருமாறு தனது கருத்தைத் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன் சமாதானப் பேச்சுக்கு செல்வது பேச்சுகள் மேற்கொள்வதற்காக அல்ல. அந்தப் பேச்சில் பங்குபற்றவே ஆகும். நடேசன் பங்குபற்றுவது விடுதலைப் புலிகளின் காவற் துறையின் செயற்பாடுகளை சர்வதேச சமூகத் திற்கு உயர்த்தி எடுத்துக்காட்டுவதற்கு அல்ல. விடுதலைப் புலிகளிடம் காவல்துறை மற்றும் நீதிமன்றங்கள் இன்று நேற்று அல்ல எப்போதோ உள்ளன என்பதை அறிந்தவர்கள் அறிவார்கள். யார் பேச்சுகளில் பங்குபற்றினாலும் பிரதம நடி கர் பாலசிங்கமே ஆவார். அரசு தற்போது பாலசிங்கம் குறித்தும் அரச பிரதிநிதிகள் குறித்தும் எதைக்கூறினாலும் எங்களுக்கு எங்கள் ஆள்கள் (அரச பிரதிநிதிகள்) பற்றிப் பிரச்சினைகள் உள்ளன. எமது பிரதிநிதிகளில் ஒருவர் ஊடகப் பேச்சாளர். அவருக்கு ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழிகளில் ஒரேவிதத்திலான பரிச்சயம் இல்லை. ஒரு பிரதிநிதி வாயைத் திறந்தால் அதை மூடவே மாட்டார். வாயைத் திறந்தால் அவர் நீதிமன்றத்திலேயே வாயை மூடுவார். நாங்கள் மற்றவர்கள் ஊமைகள் என்றே இதுவரை சிந்தித்து வந்தோம். எல்லாச் சட்டத்தரணி களுக்கும் வாதிடும் ஆற்றல் இல்லை என்பதை அளுத்கடைப்பக்கம் (நீதிமன்ற வளாகம்) செல்பவர்கள் அறிவார்கள். எனவே, நடேசன்பற்றிய எண்ணங்களைமறந்துவிட்டு பாலசிங்கத்தின் துல்லியமான பந்துவீச்சிற்கு முகங்கொடுக்கக்கூடிய இரண்டு துடுப்பாட்ட வீரர்களைத் தேர்ந்தெடுப்பது நல்லது.- எனத் தெரிவித்துள்ளார்.

## யாழ். வலய பேடன்பவல் விழா வேம்படி மகளிரில் நடக்கும்

சாரணியத் தந்தை பேடன் பவல் தின நிகழ்வு நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. யாழ். வலய பெண் சாரணியப் பாடசாலைகளை இந்த விழாவில் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.வலய ஆணையாளர் திருமதி நி.தர்மகுலசிங்கம் கேட்டுள்ளார். (எ)

## ஜெனீவாப் பேச்சுக்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நகரில் நடைபெறவுள்ள பேச்சுக்கள் சகல மக்களும் கௌரவத்துடன் வாழக்கூடிய வகையில் நீதியுடன் கூடிய நிரந்தர சமாதானத்தை எய்தும் வகையில் அமையவேண்டும். இதுவே எமது பிரார்த்தனை.

இதனை வலியுறுத்தி குடாநாட்டுப் பாடசாலைகளில் இன்று நடைபெறும் காலைப் பிரார்த்தனையின்போது சமாதானத்தை வலியுறுத்திய சொற்பொழிவுகள் நடைபெறும்.

நண்பகல் 12 மணியளவில் சகல ஆலயங்களிலும், பாடசாலைகளிலும் மணி ஒலிக்கப்பட்டு மூன்று நிமிடங்கள் ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட அனைவரும் எழுந்துநின்று மௌனப் பிரார்த்தனையில் ஈடுபடுவர்.

தொடர்ந்து சமாதானப் பேச்சு நடைபெறும் தினங்களான நாளை 22ஆம் திகதியும் மறுதினம் 23ஆம் திகதியும் சகல இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் ஆலயங்களிலும் விசேட பூசைகள், பிரார்த்தனைகள் இடம்பெறவுள்ளதுடன், அனைத்து மக்களும் ஆலயங்களுக்குச் சென்று வழிபாடு செய்யவேண்டும்.

### வணிகர் கழக மண்டபத்தில் சர்வமதப் பிரார்த்தனை

இதற்கிடையில் - யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புகளின் ஒன்றியம், யாழ். வணிகர் கழகத்துடன் இணைந்து ஏற்பாடு செய்துள்ள சர்வமதப் பிரார்த்தனை இன்று பிற்பகல் 2.30 மணி தொடக்கம் 3.30 மணிவரை யாழ். மானிப்பாய் வீதியில் உள்ள யாழ். வணிகர்கழக மண்டபத்தில் நடைபெறும்.

இந்தப் பிரார்த்தனையில் சர்வமதத் தலைவர்கள், மனிதநேய அமைப்புகளின் பிரதிநிதிகள், யாழ். வணிகர்கழகப் பிரதிநிதிகள் மற்றும் பலரும் கலந்துகொள்வர்.

சர்வமதப் பிரார்த்தனையைத் தொடர்ந்து நல்லூர் கந்தசுவாமி ஆலயம், யாழ். பெரிய கோயில், யாழ். ஜும்மா பள்ளிவாசல் ஆகியவற்றில் விசேட வழிபாடுகள் நடத்தப்படும் - என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் செய்தியாளர் சந்திப்பில் யாழ். வணிகர் கழகத் தலைவர் இ.ஜனக்குமார், யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் சு.பரமநாதன், செயலாளர் ஏ.கே. சுப்பிரமணியம் மற்றும் வணிகர்கழகப் பிரதிநிதிகள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

இதேவேளை - யாழ். குடாநாட்டில் உள்ள சகல வர்த்தக நிலையங்களுக்கு முன்பாகவும் இன்று மாலை 6 மணிக்கு தீபம் ஏற்றி சமாதானத்தில் எமக்குள்ள பற்றுதல் வெளிப்படுத்தப்படவேண்டும் என்று யாழ். வணிகர் கழகம் அழைப்புவிடுத்துள்ளது.

(எ-12-14)

## ஜெனீவா.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதார அபிவிருத்தி ஜெனீவாப் பேச்சுகளின் பெறுபேற்றின் அடிப்படையிலேயே தங்கியிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் கூறியதாவது:-

பேச்சுகள் தோல்வியடைந்து நாடு போர் ஒன்றுக்குச் செல்லுமாயின் அது உண்மையில் பொருளாதாரத் துறையினருக்கு பெரும் பிரச்சினையாக மாறிவிடும்.

நிரந்தரமான அமைதி, சமாதானம் இல்லாதபட்சத்தில் முதலீட்டாளர்கள் குறிப்பிட்ட முதலீட்டை செய்ய முடியாது. எனவே பேச்சுகளில் ஓர் இணக்கப்பாட்டை நாம் காணாவிட்டால் பெருமளவான முதலீடுகளை இழந்தவர்களாகி விடுவோம்.

தொடர்ந்து பேச்சு நடத்துவதற்கான நிகழ்ச்சி நிரலை அவர்கள் வகுத்துக்கொள்ள வேண்டும் அதுவே நல்ல பயனைத் தரும்.

- இவ்வாறு கூறினார் வஜிர பிரேமவர்த்தன. (எ-க)

## அமைச்சரவை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்றத்தில் நீதியரசர் சிசிர டி. ஆப்ரூ முன்னிலையில் இடம்பெற்றது.

அப்போது சந்திரிகா சார்பில் ஆஜரான சட்டத்தரணி கெஸ்டன் ஜயக்கொடி குறித்த காணியை சந்திரிகா நிராகரித்துவிட்டார் எனத் தெரிவித்தார்.

இது விடயம் குறித்து அமைச்சர் தினேஷ் குணவர்தனவிற்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டிருப்பதாகவும் மனு தொடர்பிலான தனது ஆட்சேபனைகளைத் தெரிவிக்க போதியளவு கால அவகாசம் தேவையென்றும் முன்னாள் ஜனாதிபதி சார்பில் ஆஜரான சட்டத்தரணி நேற்று மன்றில் கேட்டுக்கொண்டார்.

இதனையடுத்து வழக்கு விசாரணை ஏப்ரல் 26 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்புத் தொடர்பில் 'ராவய' பத்திரிகை ஆசிரியர் தாக்கல் செய்த மற்றைய மனு மீதான விசாரணையும் அன்றைய தினமே நடைபெறவுள்ளது.(எ-க)

## இ.தொ.காங்கிரஸ்,.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சூசகமான முறையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரியிருக்கின்றன.

சிவில் விமான சேவைகள் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சுப் பொறுப்புகளை இ.தொ.காவும், மலையகக் கல்வி அபிவிருத்தி என்ற அமைச்சுப் பொறுப்பை மலையக மக்கள் முன்னணியும் ஜனாதிபதியிடம் கோரியிருந்தன என நம்பகமாகக் கூறப்படுகின்றது.

ஆனாலும், இந்த இரு கட்சிகளுக்கும் அமைச்சுப் பொறுப்பை வழங்கக் கூடாதென்று ஜே.வி.பி. ஜனாதிபதியிடம் வலியுறுத்திக் கூறியுள்ளதாகத் தெரியவருகிறது. ஏற்கனவே அமைச்சரவை உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் அதிருப்தியடைந்திருக்கும் ஜே.வி.பி. அந்த எண்ணிக்கையைக் குறைக்குமாறு ஏற்கனவே கேட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (எ-க)

## கண்காணிப்புக் குழுவுக்குரிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சில் ஆராய்வோம். அதில் இணக்கம் ஏற்பட்டு, இருக்கும் ஒப்பந்த வாசகங்கள் முழு அளவில் - செம்மையாக - நடைமுறைப் படுத்தப்பட்ட பின்னர் கண்காணிப்புக் குழுவின் அதிகாரத்தை அதிகரிப்பது போன்ற விடயங்களை பார்க்கலாம்'' - என்று அந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த நான்கு வருட யுத்த நிறுத்த காலத்தில் அதிக எண்ணிக்கையான யுத்த நிறுத்த மீறல்கள் விடுதலைப் புலிகளாலேயே மேற்கொள்ளப்பட்டன என்ற புள்ளிவிவரம் கண்காணிப்புக்குழுத் தலைவரினால் ஜெனீவாப் பேச்சுகளின்போது முன்வைக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. அப்படி ஒரு குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டால் அதற்குச் சரியான பதிலடி தருவதற்கும் புலிகளின் பிரதிநிதிகள் தயாராக இருக்கின்றனர் என்று கூறப்படுகின்றது.

சிறுவர்களைப் படைக்குச் சேர்த்தல் என்ற விவகாரம் தொடர்பாகப் பெற்றோர்கள், உறவினர்களின் முறைப்பாடுகளின் அடிப்படையிலேயே அதிக எண்ணிக்கையான யுத்த நிறுத்த மீறல் குற்றச்சாட்டுகள் புலிகள்மீது சுமத்தப்பட்டிருக்கின்றன. இந்த விடயத்தில் -

முதலாவதாக - யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் இளைஞருக்குரிய பராயத்தை அடையாதவர்களைப் படைக்குத் திரட்டுதல் ஒரு தவறு என்று சுட்டிக்காட்டப்படவே இல்லை; வரையறை செய்யப்படவில்லை. எனவே, ஒப்பந்தத்தில் யுத்த நிறுத்த மீறல் என்று கூறப்படாத விடயத்தின் அடிப்படையில் அதிக எண்ணிக்கையான மீறல் குற்றச்சாட்டுகள் புலிகள்மீது சுமத்தப்பட்டுள்ளன; பதிவு செய்யப்பட்டுள்ளன.

அடுத்ததாக - சிறுவர்களை ஆயிரக்கணக்கில் படைக்குத் திரட்டிய நடவடிக்கையை மேற்கொண்டார் என்ற காரணமும், கருணாவை விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து இயக்கத் தலைமை வெளியேற்றியமைக்கு அடிப்படையாகும்.

இந்த இரண்டு விடயங்களும் கண்காணிப்புக்குழுவின் தலைவருக்கு ஜெனீவாப் பேச்சுகளில் வைத்துப் புலிகளின் பிரதிநிதிகளினால் சுட்டிக்காட்டப்படக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ)

## 'சண்டே லீடர்'...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யொன்று இருப்பதாகவும், அதனாலேயே அவரை மேற்கொண்டு பயணிக்க அனுமதிக்க முடியாதென்றும் பாதுகாப்பு அதிகாரிகள் திட்டவட்டமாகத் தெரிவித்ததையடுத்து சிக்கல் நிலை ஏற்பட்டது.

இதற்கிடையில் லசந்த விக்கிரமதுங்கவின் கடவுச்சீட்டு , விமான ஆசனப்பதிவுஅட்டை என்பன பாதுகாப்பு அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்டன.

விமான நிலையத்தின் குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர்களின் தலையீட்டையடுத்து லசந்த விக்கிரமதுங்க ஜெனீவா செல்ல அனுமதிக்கப்பட்டார். விமானம் புறப்படுவதற்கு சில நிமிடங்கள் இருக்கையிலேயே கடவுச்சீட்டு, விமான ஆசனப்பதிவு அட்டை என்பன லசந்தவிடம் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்[illegible]

## பஸ் மோதி பெண்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

6 வயதான அவரது குழந்தை படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டுள்ளது. இவரை மோதிய பஸ் அருகிலிருந்த வீடு ஒன்றின் மதிலுடன் மோதிய பின்பே நின்றுள்ளது என்று வவுனியாப் பொலீஸார் தெரிவித்தனர்.

விபத்தில் பெண் இறந்ததை அடுத்து ஆத்திரமடைந்த அப்பகுதி இளைஞர்கள் பஸ் கண்ணாடிகளை அடித்து நொறுக்கி வன்முறையில் இறங்கினர். சம்பவ இடத்திற்கு விரைந்த பொலீஸார் இளைஞர்களைக் கலைத்துவிட்டு பஸ்ஸை அங்கிருந்து அகற்ற முயன்றனர். இது இளைஞர்களுக்கு மேலும் ஆத்திரமூட்டியதுடன், பொலீஸாருக்கும் அவர்களுக்குமிடையில் முறுகல் நிலையையும் தோற்றுவித்தது. பஸ்ஸை நகரவிடாமல் தடைகளை ஏற்படுத்திய அவர்கள் வீதி மறியலிலும் ஈடுபட்டனர்.

இளைஞர்களைக் கலைக்கப் பொலீஸார் கண்ணீர்ப் புகைக்குண்டுகளை ஏவியதுடன் றப்பர் குண்டுகளால் துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொண்டனர். இதனால் அங்கு களேபரம் ஏற்பட்டது. பதிலுக்குப் பொலீஸார் மீது இளைஞர்கள் கற்களை வீசித் தாக்கினர். இதில் பொலீஸார் ஒருவர் சிறு காயத்திற்கு உள்ளானார். பொலீஸாரின் தாக்குதலில் இளைஞர்கள் மூவருக்குக் காயம் ஏற்பட்டது என அவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் களேபரத்தின்போது வீதியில் வந்த ஓட்டோ ஒன்று அடித்து நொறுக்கப்பட்டது. பொலீஸாரே தனது ஓட்டோவைத் தாக்கினர் என்று அதன் உரிமையாளர் இந்திரராஜா நந்தகுமார் தெரிவித்தார்.

நண்பகலுக்குப்பின்னர் நிலைமை வழமைக்குத் திரும்பியது. (எ-13-164)

## பேச்சுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துகொள்வதை ஏற்கனவே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வன்மையாக ஆட்சேபித்திருக்கிறது.

இந்நிலையில் நேற்று 'உதயன்' இற்குத் தகவல் வெளியிட்ட அரசின் சிரேஷ்ட முஸ்லிம் அமைச்சர் ஒருவர், இந்த விடயத்தில் தாமும் தமது சகாக்களும் கொண்டுள்ள அதிருப்தி வெகுவிரைவில் ஜனாதிபதியிடம் எடுத்[illegible]மென்று தெரிவித்தார். (எ-க)

Diploma in Internet & E-Mail
Speed Batch Only 10 Hours
Start on - 25-02-2006
Days :- Sat, Sun
Time :- 3.30 p.m
Only For 10 Students
Fees :- 1000/=
பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்
C.B Computer Academy
T.P No. 021-4590291 Station Road, Kondavil.

UNIT
புதிய P4 கணனிகள்
40,000/- முதல்
Monitor உடன்
தாயக மின்சார நிலைமைகளுக்கேற்ப வடிவமைக்கப்பட்டவை
சகல கணனி சார் உதிரிகளும் சலுகை விலையில்
347, K.K.S. Road, Manohara Theatre Junction, Jaffna.
T.P: 021- 4590720 / 0773134737

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறு[illegible]வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.02.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, 2006 ஏப்ரல்

வெளியீடு 01

## மாதிரி வினாப்பத்திரம்

### தமிழ்

திருமதி மீரா அருள்நேசன் B.A. (Hons) Dip. in Edu.
யாழ்ப்பாணம்.

## தமிழ் I

முதலாம் பகுதியிலுள்ள இரு வினாக்களுக்கும் இரண்டாம் பகுதியிலுள்ளவற்றுள் எவையேனும் நான்கு வினாக்களுக்கும் எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை தருக.

### பகுதி 1

1) பின்வரும் செய்யுள் பகுதிகளுள் எவையேனும் மூன்றினைத் தெரிவு செய்து
அ) அவற்றின் பொருளை இக்கால உரைநடையில் எழுதுக.
ஆ) தடித்த எழுத்தில் தரப்பட்டுள்ள பகுதிகளின் சிறப்பை விளக்குக.

1. மையற விளங்கிய மணிநிற விசும்பின்
கைதொழு மரபின் எழுமீன் போலப்
பெருங்கடற் பரப்பின் இரும்புறந் தோயச்
சிறுபெண் காக்கை பலவுடன் ஆடும்
துறைபுலம் புடைத்தே தோழி பண்டும்
உள்ளூர்க் குரிஇக் கருவுடைத் தன்ன
பெரும்போது அவிழ்த்த கருத்தாட் **புன்னைக்**
**கானலங் கொண்கன் தந்த**
**காதல்** நம்மொடு நீங்கா மாறே

2. ஆற்றுவா ராற்றல் பணித லது சான்றோர்
மாற்றாரை மாற்றும் படை

சால்பிற்குக் கட்டளை யாதெனிற் றோல்வி
துலையல்லார் கண்ணுங் கொளல்

இன்மை யொருவற் கிழிவன்று சால்பெனுந்
திண்மையுண் டாகப் பெறின்

சான்றவர் சான்றாண்மை குன்றின் **இருநிலந்தான்**
**தாங்காது மன்னோ பொறை**

3. தனைய ராயினார் தந்தை தாயாரை
வினையி னல்லதோ ரிசையை வேய்தலோ
நிலையல் ஒவிடா நெடிய வன்பழி
நினையில் ஓய்விடா
புனைதலோ ஐயா புதல்வர் ஆதல் நான்

இம்மை பொய்யுரைத்து இவறி எந்தையார்
அம்மை வெம்மைசேர் நரகை ஆளயான்
கொம்மை நல்நிதிக் குவையின் வைகி வாழ்
செம்மை சேர்நிலத்து அரசு செய்வெனோ.

4. இருகதி குறுவான் அதையும் உன்னிடமே
இறக்குவன் உனைப் பரிபாலித்து
அருளவும் வணங்கித் துதிக்கவும் மிகுந்தோர்
தமை யமைத்து அருள்வன் அன்பு ஓங்கி
பெருகுபார்ப்பு அதனைத்தேடி வந்து அடையும்
பறவைபோல் பிள்ளையைத் தேடி
வரும் அனை யினைப்போல் எனது கல்குக்கள் உன்
மாட்டினில் வருகவும் புரிவேன்.

(24 புள்ளிகள்)

2. (அ) பகுதியிலுள்ள கவிதையைப் படித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக?
(ஆ) பகுதியிலுள்ள உரைப் பகுதியை வாசித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக?

அ. 1. நிலாவையும் வானத்து மீனையும் காற்றையும்
நேர்பட வைதாங்கே
குலாவும் அமுதக் குழம்பைக் குடித்தொரு
கோல வெறி படைத்தோம்
உலாவும் மனச் சிறு புள்ளினை எங்கணும்
ஒட்டி மகிழ்திடுவோம்
பலாவின் கனிச்சுளை வண்டாயில் ஓர் வண்டு
பாடுவதும் வியப்போ.

2. தாரகை என்ற மணித்திரள் யாவையும்
சார்ந்திடப் போ மனமே
ஈரச் சுவையதி லூறி வருமதில்
இன்புறு வாய் மனமே
சீரவிருஞ்சுடர் மீனொடு வானத்துத்
திங்களையுஞ் சமைத்தே
ஒரழுகாக விழுங்கிடும் உள்ளத்தை
ஒப்பதோர் செல்வ முண்டோ

3. பன் றியைப் போலிங்கு மண்ணிடைச் சேற்றில்
படுத்துப் புரளாதே
வென்றியை நாடியில் வானத்தில் ஒட
விரும்பி விரைந்திடுமே
முன்றலில் ஓடுமோர் வண்டியைப் போலன்று
மூன்று லகுஞ் சூழ்ந்தே
நன்று திரியும் விமானத்தைப் போலொரு
நல்ல மனம் படைத்தோம்.

4. தென்னையின் கீற்றுச் சலசல வென்றிட
செய்து வருங் காற்றே
உன்னைக் குதிரை கொண் டேறித்திரியுமோர்
உள்ளம் படைத்து விட்டோம்
சின்னப் பறவையின் மெல்லொலி கொண்டாங்கு
சேர்ந்திடு நற் காற்றே
மின்னல் விளக்கிற்கு வானகம் கொட்டுமிவ்
வெட்டொலி யேன் கொணர்ந்தாய்

(1) நிலா, வான், காற்று ஆகியவற்றினை அனுபவிக்கும் கவியுள்ளத்தைத் தருக?
(2) மண்ணிடைச் சேற்றில் உழலாது கோலவெறி கொண்டு உயரப் பறக்கும் வேட்கை வெளியிடப்படுமாற்றினைத் தருக?
(3) பாரதியார் இப்பாடல்கள் மூலம் புலப்படுத்தக் கருதியது எதனை?
(4) இக் கவிதைகளில் காணப்படும் உவமைச் சிறப்பினைத் தருக?

*அல்லது*

(ஆ) மனித சமுதாயம் நாகரிக வாழ்க்கை வாழத்தொடங்கிய காலம் முதல் கண்டு வந்துள்ள பெருங் கனவுகளில் ஒன்று ஒரே உலகம் உருவாதல் வேண்டும் என்ப தாகும். உலகியல் அடிப்படையில் மட்டுமின்றி ஆன்மீக அடிப்படையிலும் பேதங்கள் அற்ற ஒருமையை சமய தத்துவங்கள் இலட்சியமாகக் குறிப்பிட்டு வந்துள்ளன. சமுதாய வரலாற்றை எடுத்து நோக்கினால் பெரியதொரு முரண் பாடு இருந்து வந்திருப்பது புலனாகும். ஒருபுறம் சகல விதமான எல்லைகளை யும் வரம்புகளையும் வேறு பாடுகளையும் கடந்த பொறுமையை மனிதன் விழைந்து வந்திருக்கின்றான். மறுபுறம் குலம்,சாதி, ஊர், நாடு, மொழி, இனம், நிறம் முதலிய எத்தனையோ உணர்வுகள் அவனைப் பாதித்தும் போதித்தும் வருவதைக் காண்கின்றோம். அப்பேதத்தை அவாவும் மனிதன் தான் பேதப்பட் டுக் கிடக்கின்றான். இது மனுக்குலம் அனுப வித்து எதிர்நோக்கும் மாபெரும் முரண்பாடு. நயத்தகு நாகரிகம் கண்ட சமுதா யங்களில் எல்லாம் தத்தம் எல்லை களைக் கடந்து உலகெலாம் தழுவும் உயர்ந்த குறிக்கோள் காலந்தோறும் எழுந் திருக்கக் காணுகின்றோம்.

'யாதும் ஊரே யாவரும் கேளீர்'
என்ற பழந்தமிழ்க் கவிஞனும்
'மனுக்குலம் ஒன்று மானுடம் ஒன்று'

என்று பாடிய கிரேக்கப் புலவனும் அகன்று விரிந்த காட்சியுடையவராகவே இருந்தனர். அவர்கள் அறிந்த உலகம் இன்றைய உலகம் அன்று கணியன், பூங்குன்றன் கண்ட உலகம் சிற்றூர்களின் தொகுதியே. ஆயினும், சிற்றூர்களினூடாக பேருலகு ஒன்றைக் கண்ட அற்புதக் காட்சி அவனைச் சாரும். பிளேற்றோவும் அவ்வாறே கிரேக்கத் தீவுகளுக்கும் அப்பால் மானிடத்தின் ஒருமைப்பாட்டைக் காட்சியில் கண்டனன்.

(1) இவ் உரைநடைப் பகுதியில் ஆசிரியர் புலப்படுத்தும் முக்கிய கருத்து யாது?
(2) மனுக்குலம் எதிர்நேக்கும் மாபெரும் முரண்பாடு யாது?
(3) மானிடத்தின் ஒருமைப்பாட்டைக் காட்சியில் கண்டவர்கள் யார்?
(4) மனித சமூகத்தின் முக்கிய எதிர்பார்ப்பு யாது?

(16 புள்ளிகள்)

### பகுதி 2

3. நல்குரவு எனும் அதிகாரத்திலே திருவள்ளுவர் கூறுவனவற்றை அடிப்படை யாகக் கொண்டு மேல் வருவனவற்றை விளக்குக.

(அ) வறுமையின் கொடுமை எடுத்து விளக்கப்படுமாறு
(ஆ) வறியவர்களுக்கு ஏற்படும் இழிவுகள்
(இ) வறுமையின் ஆற்றாமையில் செய்ய வேண்டியவை

(15 புள்ளிகள்)

4. இரட்சணிய யாத்தியத்தில்

(அ) யேசு கல்வாரிக்குச் சென்றதன் காரணங்கள்
(ஆ) யேசு கிறிஸ்து அனுபவித்த பாடுகள்
(இ) எருசலேம் மாந்தரது ஆற்றாமை
(ஈ) யேசு கிறிஸ்துவின் மாட்சிமைகள்

(15புள்ளிகள்)

5. பரதன் வாயிலாக தந்தை இறந்த செய்தியை இராமன் கேட்டது முதல் அரசுரிமையை ஏற்க மறுத்த பரனுக்கு அறிவுரை கூறிய பகுதி வரை

(அ) வசிட்டனின் தேற்ற வாசகம்
(ஆ) ...தில் காணப்படும் வாழ்வியல் கருத்துக்கள்
(இ) அரசுரிமையை ஏற்க மறுத்த பரதனுக்கு இராமன் கூறிய அறிவுரைகள்

(15 புள்ளிகள்)

6. நாகம்மாள் என்ற நாவலில்

(அ) நாகம்மாள் பாத்திரத்தின் குணவியல்பு
(ஆ) கிராமியப் பண்பாடுகள்
(இ) நாகம்மாள் நாவலின் உரை நடைப் போக்கு

(15 புள்ளிகள்)

7. பாற்கஞ்சி என்ற சிறுகதையில்

(அ) ஏழை விவசாயின் வறுமை நிலை புலப்படுத்துமாறு
(ஆ) இந்தக் கதையில் இயற்கையின் முக்கியத்துவம் வெளிப்படுத்தப்படுமாறு
(இ) முருகேசரின் பாத்திரப் பண்பு விளக்கப்படுவது.

(15 புள்ளிகள்)

8. பண்பாடு பற்றிய ராஜாவின் கட்டுரையில்

(அ) பண்பாடு என்றால் என்ன என்பது
(ஆ) தனி மனித பண்பாட்டுக்கும் சமூகப் பண்பாட்டுக்கும் இடையிலான வேறுபாடு
(இ) தமிழ் மக்களுடைய அன்றாட வாழ்வில் திருத்திக் கொள்ள வேண்டிய குறைபாடுகள் விளக்கப்படுமாற்றினைத் தருக.

(15 புள்ளிகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் II

**முதலாம் பகுதியிலுள்ள மூன்று வினாக்களுக்கும் இரண்டாம் மூன்றாம் பகுதிகளில் இருந்து ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு வினாவையேனும் தெரிந்தெடுத்து மூன்று வினாக்களுக்கும் எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை தருக?**

பகுதி1

01. மேல் வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிந்து 350-400 சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக?
(அ) சுவாமி விபுலானந்தரின் தமிழ்ப் பணிகள்
(ஆ) மலையகமும் தமிழ் இலக்கியமும்
(இ) விஞ்ஞானமும் சமூகமும்
(ஈ) புலம்பெயர் இலக்கியங்கள்
(உ) சூழல் மாசடைதல்
(ஊ) ''செய்யும் தொழிலே தெய்வம் ''

(20 புள்ளிகள்)

02. பின்ரும் (அ) உரைப்பகுதியையும் (ஆ) செய்யுளையும் படித்து அவை ஒவ் வொன் றின் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

(அ) இரண்டு விதமான அழகுகள் உண்டு. உருவத்தின் வெளிஅழகு; உள்ளத் தின் நுண்ணழகு: வெளியழகையும் அதைச்சார்ந்த உணர்ச்சிகளையும் அடிப்படையா கக்கொண்டு தொழில் புரிபவர்கள் ஓவியர்கள், சிற்பிகள், ஆடல் பாடல் முதலிய வற்றில் அக்கறை கொண்டவர்கள். இவர்களில் பெரும்பாலானோர் அழகுணர்ச்சி யின் வெளிப்பாடு ஒன்றையே குறிக்கோளாய் கொண்டு உழைப்பதும் உண்டு. உருவத்தை விட உள்ளத்தின் அழகை பெரியதென்று மதிப்பவர்களேஎன்றும் கலையின் சிகரத்திற் கம்பீரமாக வீற்றிருக்க தகுதி வாய்ந்தவர்கள்.
உள்ளத்தின் அழகைத் தேடும் வித்தகர்களாக கவிஞர்கள், கவிதை உள்ளம் கொண்ட கற்பனையாளர்கள், இலக்கிய ஆசிரியர்கள் ஆகியோரைக் குறிப்பிடலாம். வெளி உருவத்தில் மட்டுமன்றி, அந்த உருவத்துக்குப் பின்னாலும் மறைந்து கிடக்கும் கலையம்சத்தைத் தேடிக் கண்டுபிடிக்கும் திறன் அவர்களிடத்தில் உண்டு. கவிஞன் தேடும் அழகு நுணுக்கமானது. பிறர் கண்களுக்கும் கருத்துக்கும் பொருளற்றதாக தோன்றும் ஒன்றிலிருந்து கூட அவன் அழகைக் கொண்டு வந்து உலகை வியப்ப டையச் செய்வான்.

1. இப்பகுதியில் ஆசிரியர் கூறியுள்ளவற்றை உமது நடையில் இருபது சொற்களுக்குள் சுருக்கித் தருக?
2. உருவத்தின் அழகை விட உள்ளத்தின் அழகைப் பெரிதாக மதிப்பவர்கள் யார்? அவர்களைப் பற்றி ஆசிரியர் என்ன கூறியுள்ளார்?
3. ஏனையோரிடமிருந்து கவிஞனை எவ்வாறு ஆசிரியர் வேறுபடுத்துகின்றார்?

(ஆ) கல்லா ஒருவருக்குத் தம் வாயின் சொற்கூற்றும்
மெல்லிலை வாழைக்குத் தானீற்ற காய் கூற்றம்
அல்லலை செய்வோர்க் கறம் கூற்றம் கூற்றமே
இல்லத்துத் தீங் கொழுவாள்.

i. இச் செய்யுள் கூறும் கருத்தை உமது நடையில் 30 சொற்களுக்குக் குறையாமல் விவரித்து எழுதுக?
ii. இப் பாடலில் புலவர் கூற எடுத்துக் கொண்ட பொருளை விளக்குக.

(15 புள்ளிகள்)

3. மேல் வரும் பதினைந்து வினாக்களும் (அ),(ஆ),(இ) என மூன்று பகுதிகளாக தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஆகக்குறைந்தது இரண்டு வினாக் களை யேனும் தெரிவுசெய்து எல்லாமாகப் பத்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

(அ) i. காடு, காவு, நாலு, காசு இவற்றுள் குற்றியலுகரம் இடம்பெறும் சொற்களைத் தருக.
ii. பகுதி விகுதி இடைநிலை சந்தி சாரியை ஆகிய 5 உறுப்புக்களும் அமையக் கூடியசொல் ஒன்றினைத் தந்து அவ்வமைப்புக்கள் அமையுமாறு பிரித்துக் குறித்துக்காட்டுக?
iii. 'எங்கள் ஊரில் ஒவ்வொரு கோயில்களிலும் திருவிழா நடந்தன' இவ்வாக்கியத்தை திருத்தி எழுதுக.
iv. 'எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளீர் யானும் நீயும் எவ்வழி அறிதும்' இதில் இடம்பெற்றுள்ள தன்மை முன்னிலைப் பெயர்களைத் தருக.
v. முத்துப்பல்' என்னும் உவமையை உருவகமாக மாற்றி எழுதுக.

ஆ) vi. குணப் பெயர்கள் மூன்றினைத் தருக?
vii. தெரிநிலைப் பெயரெச்சத்திற்கு ஓர் உதாரணம் தருக?
viii. ஊருக்கு வடக்கே சென்றேன்' இத்தொடர் இடம்பெற்றுள்ள வேற்றுமை உருபு யாது?
ix. 'தாய் உணவை உண்டாள்'' என்ற தன்வினையை பிறவினையாக மாற்றி எழுதுக.
x. இவன் ஒரு படித்த பையன் ' இவ்வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள பெயரடை யாது?

இ) xi. 'கோதை நன்றாகப் படித்ததால் கூடிய மதிப்பெண்கள் பெற்றாள்' இவ்வாக்கியத்தை தனி வாக்கியமாக மாற்றுக.
xii. மயில் ஆடியது அழகாக இருந்தது இதில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயர் யாது?
xiii. மாணவர் அனைவரும் வருகை புரிந்திலர் என்னும் எதிர்மறை வாக்கியத்தை உடன்பாட்டு வாக்கியமாக மாற்றி எழுதுக?
xiv. முற்றெச்சம் என்றால் என்ன?
xv. யாழ்ப்பாணம் சிரிக்கின்றது இது எவ்வகை ஆகுபெயர்?

(20 புள்ளிகள்)

## பகுதி 2

04 அ) சங்கமருவிய கால இலக்கியப்பண்பினை தெளிவுறுத்துக?
ஆ) சங்கமருவிய கால பிற்பகுதியில் தோற்றம் பெற்ற காரைக்காலம்மையாராலும், மூவாழ்வார்களாலும் இடப்பட்ட சைவ, வைஷ்ணவ பக்தி பல்லவர் காலத்தில் பெருக்கெடுத்தது. இதனை விளக்குக.
இ) சங்ககால இலக்கியங்களிற்கும் சங்கமருவிய கால இலக்கியங்களிற்கும் இடையேயுள்ள தொடர்பினைத் தருக.

(15 புள்ளிகள்)

05 அ) விஜயநகர நாயக்கர் கால வளமான இலக்கியங்களை விளக்குக.
ஆ) நாயக்கர் கால இலக்கியப் பண்பிணைத் தருக? (15 புள்ளிகள்)

06. அ) சோழர் கால காப்பியங்களை வகைப்படுத்துக
ஆ) சோழர் கால இலக்கியங்கள் பல்வேறு துறைகளில் வளர்ச்சியடைந்துள்ளதை விளக்குக?

(15 புள்ளிகள்)

## பகுதி 3

07. அ) 19 ஆம் நூற்றாண்டு இலக்கிய வளர்ச்சியினை விளக்குக?
ஆ) அக்கால உரை நடை வளர்ச்சியினைத் தருக?

08. அ) போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலத்தில் எழுந்த தமிழ் இலக்கியங்களை வகைப்படுத்துக.
ஆ) அவற்றின் முக்கிய பண்பினை வகைப்படுத்துக?

(15 புள்ளிகள்)

09. மேல் வருவோருள் யாரேனும் இருவர் இலங்கைத் தமிழ் இலக்கிய வளர்சியில் பெறும் முக்கியத்துவத்தை விளக்குக.
அ) புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளை
ஆ) கலாநிதி சொக்கன்
இ) இலங்கையர் கோன்
ஈ) டாக்டர் நந்தி
உ) பேராசிரியர் ம.மு. உவைஸ்

(முற்றும்)

---

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை,
2006 ஏப்ரல்

வெளியீடு 01

# மாதிரி வினாப்பத்திரம்

பொருளியல்

S.வரதராஜன் B.A.(Hons) - யாழ்ப்பாணம்.

# பொருளியல் I

**பகுதி - I** நேரம்: 1 மணித்தியாலம்

- இப்பகுதி 20 வினாக்களைக் கொண்டது.
- இப்பகுதியிலுள்ள சில வினாக்கள் ஒன்றுக்கு மேற்பட்ட விடைகளைக் கொண்டி ருக்கும், சில ஒரு விடைக் கொண்டிருக்கும் அவற்றை நீர் இனங்காண்பதுடன் ஏனைய வினாக்கள் தொடர்பில் அதன் கீழுள்ள வெற்றிடத்தல் விடையினை எழுதுதல் வேண்டும்.

1. நீர் உடன்படாத கூற்றுக்களை இனங்காண்க.
(1) சந்தைப் பொருளாதாரங்களாக இருந்து திட்டமிடப்பட்ட பொருளாதாரங் களாக மாறுபவை நிலைமாற்றுப் பொருளாதாரங்கள் என அழைக்கப்படும்.
(2) தொழில் நிறுவனங்களின் தனியார் உடமை முதலாளித்துவத்தின் பிரதான இயல்பாகும்.
(3) யாருக்காக உற்பத்தி செய்தல் உற்பத்திக் காரணிகளின் விலைகளோடு தொடர்பு பட்ட பிரச்சினையாகும்.
(4) சந்தைப் பொருளாதாரத்தில் எல்லா விலைகளும் கேள்வி, நிரம்பற் சக்திகளால் நிர்ணயிக்கப்படுகின்றன.

2. உற்பத்தி இயல்தகவு வளையியின் எதிர்க்கணியச் சரிவு பின்வருவனவற்றுள் எவற் றைக் காட்டுகின்றது.
(1) ஒரு பொருளாதாரம் தனது உற்பத்தி இயலளவிலும் பார்க்கக் குறைவாகவே உற்பத்தி செய்ய முடியும்.
(2) வளங்கள் மாற்றுப்பயன்பாடுகளை உடையவை
(3) ஒரு பொருளின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமாயின் மற்றுமொரு பொருளின் உற்பத்தியைக் குறைக்க வேண்டும்.
(4) ஒரு பொருளின் விலை குறையும் போது நுகர்வோர் அப்பொருளில் கூடுதலான தொகையைக் கொள்வனவு செய்வர்.

3.ஊழிய நிரம்பல் என்பதைக் குறிக்கும் சரியான கூற்று எது?
(1) ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் மொத்தச் சனத்தொகையில் உள்ள 15 வயதிற்கு மேற்பட்டோரால் வழங்கப்படும் ஊழியம்.
(2) வேலை செய்யும் வயதுச் சனத் தொகையினுள் உள்ள வேலை செய்யக் கூடிய விருப்பமும் ஆற்றலும் கொண்டோரின் தொகை.
(3) தரப்பட்ட கூலிமட்டத்தில் ஒரு நாட்டின் தொழிற்படையில் உள்ளோரினால் வழங் கப்படத் தயாராக உள்ள ஊழிய மணித்தியாலங்களின் எண்ணிக்கை.
(4) தொழில் செய்வோரையும் தொழிலைத் தேடிக் கொண்டிருப் போரையும் உள்ளடக்கிய தொகை.

4.பின்வருவனவற்றில் எவை சந்தைப் பொருளாதாரம் ஒன்றில் வளங்களின் திறமை யான ஒதுக்கீட்டினைத் தடை செய்கின்றன.
(1) தனியுரிமைச் சக்தியுள்ள நிறுவனங்கள் காணப்படுதல்
(2) நேர்க்கணிய, எதிர்க்கணிய வெளிவாரிவிளைவுகள் காணப்படுதல்.
(3) மூலப் பொருள்களுக்கு பற்றாக்குறை நிலவுதல்.
(4) வருமானப் பங்கீட்டில் பெருமளவு சமமின்மை காணப்படுதல்.
(5) இறக்குமதி வரிகள் விதித்தல்.

5. பின்வரும் எச்சந்தர்ப்பங்களில் சமநிலை விலையில் ஏற்படும் மாற்றங்களைக் கூற முடியாது?
(1) மற்றவைகள் மாறாத நிலையில் ஒரு பொருளின் கேள்வி அதிகரித்தல்.
(2) ஒரு பொருளின் கேள்வியும் நிரம்பலும் அதிகரித்தல்.
(3) ஒரு பொருளின் கேள்வி அதிகரிக்கும் வீதத்திலும் பார்க்க நிரம்பல் குறையும் வீதம் பெரியதாக இருத்தல்.
(4) ஒரு பொருளின் கேள்வியும் நிரம்பலும் சம அளவில் குறைவடைதல்.
(5) ஒரு பொருளின் கேள்வி அதிகரிக்கும் போது நிரம்பல் குறைவடைதல்
(6) ஒரு பொருளின் கேள்வியும் நிரம்பலும் குறைவடைதல்.

(பொருளியல் வினாத்தாளின் தொடர்ச்சியும் தமிழ் வெளியீடு 1இற்கான விடைக்குறிப்புகளும் 28.02.2006ஆம் திகதிய கல்விச்சுடரில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org